சீரணி

(கிராம நலம்)

கதிர் 15] டிசம்பர் 1969 [நெல் 3



திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலர்

தமிழ்நாடு அரசின் கிராம வளர்ச்சி & உள்ளாட்சித் துறைத்
திங்கள் வெளியீடு

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

இணைக்குநர்கள் :
திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலர்

திரு. ஜி. திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர்

* * *

ஆண்டுச் சந்தா ரூ. 3-50
தனி இதழ் விலை
35 காசு

* * *

ஆசிரியர் :
திரு. சு. செல்லப்பன், எம்.ஏ.,பி.டி.

உள்ளே..

எண்	பொருள்	பக்கம்
1.	உள்ளிருள் நீக்கும் விளக்கு!	3
2.	குறளோவியம்	4
3.	உங்களிலே நான் ஒருவன்	6
4.	பிறந்த பொன்னாட்டிற்குப் புகழ் தேடித் தருவீர்!	9
5.	ஓராண்டுத் திட்டப் பணிகள்	13
6.	நம் உயிர் எழுத்து	15
7.	செம்மையான சீர்மைச் சின்னம்	19
8.	பள்ளி செல், பாடம் படி!	19
9.	சீரணியின் சிறப்புச் செய்திகள்	20
10.	தில்லையாடித் திருவிழா	21
11.	பைந்தமிழ்த் தேர்ப் பாகன்	25
12.	கிராமப் பொருளாதாரத்திற்குப் பனைத் தொழில்	31
13.	வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்	37
14.	நெஞ்சுறுதி	41
15.	138 நாட்களில் ரூ. 2307 வருவாய்	45
16.	கடமையும் கண்ணீரும்	48
17.	சில கேள்விகள்?	55
18.	இயற்கையும் செயற்கையும்	57
19.	பணிவு தரும் விலை நிலம்	60
20.	கிராமத்தில் வள்ளுவர்	62
21.	குடும்ப ரகசியம்	65
22.	மைய அரசு இதழ்களிலிருந்து	69
23.	ஊராட்சி அரசிதழ்	78
24.	பார்த்தோம் - படித்தோம் - பட்டதைச் சொல்கிறோம்	87

உள்ளிருள் நீக்கும் விளக்கு

அறம் என்ற தகளியில்
பொருள் என்ற திரியிட்டு
இன்பம் என்ற நெய்பெய்து
தன் செம்மை சான்ற சொல்
என்ற தீகொண்டு, குறள் விளக்கை ஏற்றியுள்ளார் திருவள்ளுவர்.

விளக்கு புற இருளை நீக்கும். திருக்குறள் விளக்கோ உள்ளிருளை - மனமாசை நீக்கும்.

குறள் விளக்கு அக இருளை நீக்க அதன் விளைவாக நாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறப் போமாக!

வாழ்க வையகம்!
வளர்க குறள் நெறி!

கலைஞர் மு. கருணாநிதி

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி ஆனை மிதிக்கும் அருஞ் சேறும் போர்க் களத்தில் எதிரிகளின் முடி நடுவதற்கு முரசம் ஆர்த்துவிட்டது; அழைப்பு வந்துவிட்டது அந்த வீரனுக்கு!

படைமுழக்கம் பாராய் கண்ணே! தடையின்றி விடை தாராய் பெண்ணே! எனவேண்டுகிருன் விழுப் புண்படாத நாளெல்லாம் வீணான நாட்கள் எனக்கருதும் வீரமகன். விழிப்பண்பாடும் வடிவழகி, முத்து நகை சிந்துகின்ற இதழ் குவித்து முத்தமீந்து 'வெற்றியோடு திரும்பிடுக அத்தான்' என்று அணைத்துநின்ருள் - அவனுக்குத் தெரியாமல் கண்ணீரை அவன் தோளில் துடைத்துக் கொண்டு!

வேலெடுத்து வா என்பான்-விழிதருவாள். இரத்தம் படிந்தவாள் எங்கே எனக்கேட்பான்- செவ்விதழ் கொடுப்பாள். ''அக்களமில்லை பெண்ணே இக்களம்! இணைபிரியாத எந்தன் துணையே! தலைவனவன் தயாராய் நின்றிருப்பான் எனைநோக்கி; வேல் தருவாய்; விடை தருவாய்; இடையில்லாப் பேரழகே!'' என மடை திறந்த காதல் வெள்ளம் புரண்டோட மறவனவன் நடக்கலுற்ருன் மாவீரர் அணிவகுப்பின் பக்கம்.

வழியில் தாய் கண்டாள், வாழ்த்தினாள்; 'வருக புலியே வெற்றியோடு' என்ருள். ''தலைவனவன் உன்மீது சிறு கோபம் கொண்ட சேதி நானறிவேன். நீ மறைத்தால் தெரியாமல் போகுமா தம்பீ! தாயகத்தின் மேன்மைக்குத் தலைகொடுக்கச் செல்கின்ற படை வரிசை காத்திருக்கும்; கடமை செய்து வா கண்ணே!'' என்று முன்பவன் மார்பிலே பெற்றிருந்த புண் மீது முத்தமிட்டாள்.

போருக்குச் சென்ற வீரன் எதிரிகளைப் பொடி செய்து எலும்புப் புழுதியிலே சேர்த்துவிட்டான்; இரத்தச் சகதியிலே இருதரப்பு வீரர்களும் இறுதியாத்திரைக்குச் சித்தமானுர். கடைசி வெற்றி பகைவர்க்கு என்னுெரு சேதி பறந்து வர, 'கண்ணிருந்தும் குருடரா நாம்?' எனக்கேட்ட படி களத்தினிலே நம் காளை சுழற்காற்ருய்ப் பறந்து சென்ருன். தனியொருவன் - தலைவனவன் கண்ணெதிரே பகைப்படையின் பலமழித்தான்; தோல்விப் புகைப்படலம் ஒழித்து நின்ருன்; வெற்றிக்கு வித்திட்டான்; வீணர் பிணம் குவித்துவிட்டான்; அம்மவோ! இறுதியிலே மறைந்து வந்த அம்புக்கு இரையானுன்.

வெற்றி கண்ட படைத் தலைவன் வீரன் சாய்ந்துவிட்ட காட்சிதனைக் கண்டு கதறி விட்டான். சிறியோர் சேட்டை விளைத்த சிறு



கசப்பால் கருத்தினிலே வேறுபாடு கொண்டிருந்த காவலனும், களம் பட்டு வீழ்ந்திருந்த காளைதனைக் கண்ணீரால் குளிப்பாட்டுகின்றான்.

சாகின்ற வீரன் சொல்வான்.

''தலைவ! தமைக்காத்த தலைவன் கண்களில் நீர் பெருக்கெடுக்குமாறு ஏற்படுகின்ற இதுபோன்ற களச்சாவு களை வீரர்கள் யாசித்தாவது பெறு தல் வேண்டும்.''

தலைவன் தன் சாவு கண்டு கண்ணீர் விடுவது வீரனுக்கு அவ்வளவு பெருமையாக இருக்கிறது! தலைவ னுக்குக் கண்ணீரை வரவழைத்த அந்த வீரச்சாவு பாராட்டுக்குரியது; அதற்கு இதோ குறள்:

''புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு

இரந்துகோள் தக்கது உடைத்து.''

(27-4-1956 முரசொலி வார ஏட்டில் எழுதியது)

இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைவிட்டுக் கடுமையான சொற் களைக் கூறுதல் கனிகள் இருக்கும்போது அவற்றைவிட்டுக் காய்களைப் பறித்துத் தின்பதற்கு ஒப்பாகும்.

குறள் வீரம்: கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்
விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு

என்ற குறட்பாக்களுக்கான படங்களை முறையே 40, 56 பக்கங் களில் காண்க.

உங்களிலே நான் ஒருவன்

உலகின் உயிர்நாடியான தொழில்,

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'

என்றும் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றும் திருவள்ளுவர் போற்றிய தொழில்,

தமிழ் மக்கள் போற்றிய இயற்கையான தொழில் - வேளாண்மைத் தொழில்!

அந்தத் தொழில் இடையே நலிந்துவிட்டது. செயற்கை

மாண்புமிகு

டா. முத்துசாமி, பி.எ.,பி.டி.

யான தொழில்கள்மீது மக்களின் கவனம் சென்றுவிட்டது. இன்று அந்த நிலை மாறிவருகிறது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கிராமத்திலே ஒருவர் வானொலிப் பெட்டி வாங்கினால் என்ன சொல்லுவார்கள் தெரியுமா?

''இதை வைத்துக்கொண்டு இவன் சினிமாப் பாட்டுகளைத் தானே கேட்டுக் கொண்டிருப்பான். விவசாயத்தை எங்கே கவனிக்கப் போகிறான்?எப்படி உருப்படுவான்?'' என்று சொல்வார்கள்.

இப்படி வீட்டிலே உள்ள பெரியவர்களின் கோபத்துக்கு ஆளானவர்களில் நானும் ஒருவன்.

ஆனால் இன்று நிலை மாறிவிட்டது.

வானொலியைக் கேட்பது சினிமாப் பாடல்களைக் கேட்க மட்டுமல்ல! விவசாயச் செய்திகளை அறிந்துகொள்ள என்பதைக் கிராம மக்களே கூறுகிறார்கள்.

வானொலி விவசாய ஒலிபரப்புகள் மூலம் விவசாயத்தில் புதுப்புது முறைகள், முயற்சிகள் கிராமங்கள் தோறும் மேற்கொள்ளப் படுகின்றன.

''எங்கள் மாவட்டத்துக்கு ஏற்ப, மண்வளத்துக்கு ஏற்ப, பாசன வசதிக்கு ஏற்ப, என்னென்ன எந்தெந்தப் பருவத்தில் பயிரிடலாம் என்பதை இன்னும் தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டும். இப்பொழுது ஒலிபரப்பும் நேரத்தை இன்னும் அதிகரிக்க வேண்டும்'' என்ற குரல் தமிழ் நாடு முழுவதுமுள்ள எல்லாக் கிராம மக்களிடமிருந்தும் கேட்கிறது.

இதைக் கொண்டு கிராம வானொலி மன்றங்களினால் விளையும் நன்மைகளை நாம் எளிதில் உணர முடிகிறது.

கிராம வானொலி மன்றங்களின் பணிகளால் விவசாயம் மேலும் வளர்ச்சியுற, மன்றங்கள் திறம்படச் செயல்படவேண்டும். ஊர்ப்பணியாளர்கள் இவ்வுண்மையை உணர்ந்து ஊர்தோறும் வானொலி மன்றங்கள் பெயரளவில் இல்லாமல் செயலளவில் இயங்க வழிவகை செய்தல்

தமிழ் நெஞ்சங்கள் நிறைந்துள்ள தமிழக அரசு - அதன் அமைச்சரவை கூடிப் பேசி, வரும் ஆண்டிலிருந்து ''திருவள்ளுவர் திருநாளினை'' மாட்டுப் பொங்கலன்று வைத்துக் கொள்வது எனத் தீர்மானித்ததைக் குறித்துத் தமிழ் கூறும் நல்லுலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தமிழ் அறிஞர்களும், தமிழ் இலக்கிய நிலையங்களும் தமிழ் நாடு அமைச்சரவையைத் தம் மன மெய் மொழிகளால் போற்றிப் பாராட்டுகின்றனர்.

நக்கீரர் கழகமும் அனைத்துத் தமிழறிஞர்களுடன் சேர்ந்து அரசுக்குத் தன் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

நக்கீரர் கழகம் பாராட்டுகிறது!

வேண்டும். வானொலி விவசாயச் செய்திகளை ஊர்ப்பணியாளர்கள் தெரிந்துகொள்ளவும் அச்செய்திகளைச் சிற்றூர்களில் வாழும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறவும் ஒவ்வோர் ஊர்ப்பணியாளர்க்கும் ஒரு 'டிரான்ஸிஸ்டர்' கொடுக்கவேண்டும் என்று கேட்கப்படுகிறது. மாநில அரசு, மைய அரசு நிதி உதவியுடன் அந்தந்த ஒன்றியத்திலும் ஓரளவு நிதி உதவி பெற்று, இத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்வோம்.

கிராம வானொலி மன்றங்களில் உள்ள வானொலிகள் பழுதுபட்டால் அவை சீர்படுவதற்கு நெடுநாள் ஆகிறது என்ற குறை உள்ளது. வானொலிப் பெட்டிகளில் ஏற்படும் சிறிய பழுதுகளைச் சீர்படுத்துவதற்குத் தேவையான பயிற்சிகளை ஊர்ப்பணியாளர்களுக்கும், சமூகநல ஊழியர்களுக்கும் அளித்து அவர்களை இத்துறையில் ஈடுபடுத்தினால் அக்குறை நீங்க இடமுண்டு.

கிராம வானொலி மன்றங்களுக்கான தனிக் கட்டடங்கள் இல்லாத இடங்களில் 'சீரணி' உதவி கொண்டு கட்டடங்கள் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

மாநில அளவில் விவசாய ஒலிபரப்புப் பற்றிய கருத்தரங்கு நடத்தி விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்டறிவது போல ஒவ்வொரு மாவட்டத்திலும் கருத்தரங்கு நடத்தி அந்தந்த மாவட்ட விவசாயிகளின் கருத்துரைகளைக் கேட்டறியலாம்.

திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகும் விவசாய நிகழ்ச்சிகளைப்போல, கோவையிலும் அதன் சுற்றுப்புற மாவட்டங்களுக்கான விவசாய ஒலிபரப்பு நிகழ்ச்சி விரைவில் தொடங்கவிருக்கிறது. அதேபோன்று விவசாய ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் திருநெல்வேலியிலிருந்தும் ஒலிபரப்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். நம் தமிழக முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து மைய அரசுடன் விரைவில் தொடர்பு கொள்ள என்னாலான முயற்சிகளை மேற்கொள்வேன்.

விவசாயிகளின் குறைகளை நானும் நன்கு உணர்ந்தவன். இந் நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகளில் நானும் ஒருவன்!

'பாலுக்குச் சர்க்கரை இல்லை' என்பது குறைதான்; அதைவிட முக்கியமான பெருங்குறை 'கூழுக்கு உப்பில்லை' என்பது. முதலில் கூழுக்கு உப்பில்லை என்ற குறையைக் களைவோம். அதுதான் இப்பொழுது முக்கியம்! இந்தக் கண்ணோட்டத்துடன் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் குறைகளைவோம்! வெற்றியைக் குவிப்போம்!

[திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் நவம்பர் 20ஆம் நாள் நடைபெற்ற கிராம வானொலி மன்றப் பரிசளிப்பு விழாவில் கூறிய கருத்துக்களில் சில]

குறளோவியம் :

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் [தூக்கின்
உயர்க்கிறுதி யாகி விடும். —குறள்

[ஒரு மரத்தின் நுனிக் கொம்பில் ஏறியவர் அதையும் கடந்து மேலும் ஏற முனைந்தால் அது அவருடைய உயிர்க்கே முடிவாக அமைந்துவிடும்.]

சிறந்த பொன்னாட்டிற்குப் புகழ் தேடித் தருகிறீர்!

[மாண்புமிகு நிதியமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன்]

இன்று உங்கள் நிறுவனத்திற்கு வந்து உங்களுடன் உரையாடும் வாய்ப்புக் கிடைத்ததைப் பெரும் பேறாக நான் கருதுகிறேன். இது ஒரு பள்ளிச்சாலை. ஆனால், மாறுபட்ட ஒரு சூழ்நிலையில் உள்ள அறிவாலயம் இது. நாட்டின் எதிர்கால வீரர்களை, சமுதாயத்தின் எதிர்காலச் சிற்பிகளைத் தோற்றுவிக்கும் பாசறையாக உங்கள் பள்ளிச்சாலை உள்ளது என்பது முழுக்க முழுக்க உண்மை.

சமதர்ம சமுதாயமாக, சோஷலிசப் பூங்காவாக நாட்டைத் திருத்திஅமைப்பதை அடிப்படை இலட்சியமாகக் கொண்டுள்ளது நம் நாட்டின் அரசியலமைப்புச் சட்டம். நாட்டை வளப்படுத்தும் திருப்பணியில், வளமான வாழ்வு அமைக்கும் இலட்சியப் பணியில், இப்படிப்பட்ட அறிவாலயங்களின் பங்கு மிகவும் மகத்தானது. பள்ளிகளுக்கு முன்பெல்லாம் பணக்காரர்கள், செல்வம் படைத்தோர், செல்வாக்குஉடையோரின் குழந்தைகள்தான் வந்து படிக்கமுடியும். கல்வி கற்பதென்பது அவர்களால்தான் முடியும் என்ற சூழ்நிலை நிலவியிருந்த காலம் அது. கல்வி வசதி, அறிவுச் செல்வம், வசதி படைத்தோருக்கு மட்டுமேதான் என்ற நிலை அன்று. ஆனால் காலம் மாறியது. 'சயனிக்' பள்ளி போன்ற பள்ளிகள் நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட பிறகு, சமுதாயத்தில் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி, தகுதி படைத்தோர் அனைவருமே கல்விச் செல்வத்தை நுகர்வதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மற்றப் பள்ளிகளைவிடச் சயனிக் பள்ளிகளில் கல்விக்காக ஆகும் செலவு சற்றுக் கூடுதல்தான் என்றாலும், மைய அரசும், மாநில அரசும் பல்வேறுபட்ட கல்வி உதவித் தொகைகளைப் பரவலாக அளிக்கின்ற

படியால், மத்திய தர வகுப்பினர், ஏன் ஏழை மக்கள்கூடத் தங்கள் குழந்தைகளை இப்படிப்பட்ட பள்ளிகளுக்கு அனுப்பித் தரமான கல்வியினை அவர்கள் பெறும்படியான மகிழ்ச்சிகரமானதொரு சூழ்நிலை மலர்ந்துள்ளது.

நாட்டின் இளம் மலர்களான சின்னஞ்சிறார்கள் மற்ற மற்றத் துறைகளில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கக் கூடிய அளவுக்கு வசதிகள் அளிக்கப்படாமல், வெறும் புத்தகப் படிப்புக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்று இன்றைய கல்வி முறைபற்றிப் பரவலான ஒரு கருத்து உள்ளது; இஃது ஓரளவுக்கு உண்மையும் கூட; இந்த நிலையை மாற்றி—எல்லாத் துறைகளிலும், இன்றைய குழந்தைகளைச் சமுதாயத்தின் எதிர்காலச் சிற்பிகளாக மாற்றி அமைக்கும் வகையில், வெறும் புத்தகப் படிப்பு மட்டுமில்லாமல், குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும், மன வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் எல்லாவகையிலும் அடிகோலும் வகையில் இப்பள்ளி அமைந்துள்ளது. இப்படிப்பட்ட சயனிக் பள்ளிகளில் அளிக்கப்படும் பயிற்சி முறை, நாட்டின் ஒளிவிளக்குகளான பிஞ்சுக் குழந்தைகள் எதிர்காலத்தில் ஒளி வீசித் திகழும் நல்முத்துக்களாகத் திகழும் வண்ணம் அமைந்துள்ளது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். இந்தப் பள்ளியிலே படிக்கும் மாணவர்கள், தங்களுக்கு அளிக்கப்படும் கல்வி முறையின் சிறப்பினை உணர்ந்து, கொடுக்கப்படும் வசதிகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு, தங்களையும் வளப்படுத்திக் கொண்டு நாட்டையும் வளப்படுத்துவார்கள் என்பதிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

என்றார் பாரதியார்!

காலத்தை வென்ற நெல் ஐ.ஆர். 8

காலத்தை வென்ற நெல் ஐ.ஆர். 8
கருத்தைக் கவர்ந்த நெல் ஐ.ஆர். 8
கலியைத் தீர்த்த நெல் ஐ.ஆர். 8
கவலை வென்ற நெல் ஐ.ஆர். 8
நாட்டுக்கு நல்ல நெல் ஐ.ஆர். 8
நமக்கு உகந்த நெல் ஐ.ஆர். 8
பசியை நீக்கும் நெல் ஐ.ஆர். 8
பஞ்சத்தைப் போக்கும் நெல் ஐ.ஆர். 8
மக்களைக் காக்கும் நெல் ஐ.ஆர். 8
மனதார வாழ்த்துவோம் ஐ.ஆர். 8

நா. இராசப்பன், எம்.ஏ.
ஆணையர், ஊராட்சி ஒன்றியம்
கீரப்பாளையம்

ஏழைநாடு நம் நாடு. இன்றும் எழுதப் படிக்க வசதியற்றோர் இலட் சோப இலட்சக்கணக்கில் உள்ள நிலை நம்நாட்டில் உள்ளது. இந்த அவல நிலையைப் போக்கி, நாட்டில் எல்லோ ருக்கும் கல்வி வசதி அளிக்கப் பாடு படவேண்டியது நம் நாட்டுக் குடி மகன் ஒவ்வொருவரின் தலையாய, புனிதக் கடமையாகும். அறிவு விளக்கை மங்காமல், ஒளிகுன்றி விடாமல் அணையா மணிவிளக்காகப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையு மாகும். கல்வி வசதி உடையோர் தாம்பெற்ற கல்விச் செல்வத்தை அவ்வசதியினைப் பெறமுடியாத நிலை யில் உள்ள சகோதரர்களுக்கு வாரி வழங்கவேண்டும்.

கல்வி என்பது வகுப்பறையோடு நின்று விடுவது அல்ல; சமுதாயத்தின் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து நிலவும் ஒன்று. படித்தோர் -படிக்காதவரிடையே உள்ள ஏற்றத் தாழ்வினை, பாகுபாட்டினை எந்த அள வுக்குக் குறைக்க, நீக்க, பாடுபடு கிறீர்களோ, அந்த அளவுக்கு நீங்கள் படித்த பள்ளிக்கு, உங்களை உருவாக் கிய அறநிலையத்திற்கு நீங்கள் சேவை புரிகிறீர்கள்; அந்த நிறுவனத்தின் புகழ்க் கொடியை உயர்த்திப் பிடிக்கி றீர்கள் என்று பொருள். இங்கே மிக வும் நவீன முறையில் கல்விபோதிக்கப் படுகிறது. மிகவும் முற்போக்கான முறையில் அறிவுப் பணி நடைபெறு கிறது. அதே சமயத்தில் நம்முடைய பெருமைமிகு பாரம்பர்யமிக்க கலாச்சாரத்தின் சிறப்பியல்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது கண்டு நான் பெருமகிழ்வு எய்து கிறேன். இங்கே விடுதிகளுக்கு வைக் கப்பட்டுள்ள பெயர்களைப் பாருங்கள். சேரர் விடுதி, சோழர் விடுதி, பாண்டியர் விடுதி, பல்லவர் விடுதி, பாரதி விடுதி, வள்ளுவர் விடுதி- எல்லாம் தமிழகத்தின் தவத்தோன்றல்களின் திருப்பெயர் களைத் தாங்கித் திகழ்கின்றன! தமிழர் சமுதாயத்தின் மாபெரும் சிறப்புமிக்க தலைவர்கள், வழிகாட்டி கள், நமக்கு விட்டுச் சென்றுள்ள புகழ்மிக்க பாரம்பர்யத்தின் அழிக்க முடியாத செல்வங்களை நீங்கள் போற்றிப் பாதுகாக்க வேண்டும்; அந்த வரலாற்றுக் கதாநாயகர்கள் ஏறுநடை போட்டு நடந்து வந்த அடிச்சுவட்டினைப் பின்பற்றித்தமிழ்ச் சமுதாயத்தின் வழித்தோன்றல் களாக நீங்கள் திகழவேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் பணியாற்றினால் தான் புகழ்மிக்க, எழுச்சிமிக்க முழு மனிதர்களாக நீங்கள் சமுதாயத்தில் திகழமுடியும்.

நம்முடைய இளஞ்செல்வங் களிடையே புதைந்துகிடக்கும் திறன் களை, திறமைகளை மேலும் மேலும் ஊக்குவித்து, வளர்ச்சி பெறச் செய்து, எதிர்காலத்தில் நல்லதொரு தலைமையை உருவாக்கும் திருப்பணி யினை இப்பள்ளி ஆற்றுவது குறித்து நான் பெருமகிழ்வு எய்துகிறேன். இந்த நாட்டு மாணவ மணிகள் கூர்த்த மதிநுட்பமும் அறிவும் படைத்தவர்கள். நல்லதொரு நாட்டை, வாழும் தாயகத்தைப் புன்னகைப் பூஞ்சோலையாக மாற்றி யமைக்கும் மனத் திண்மையும் தொண்டுள்ளமும் படைத்தவர்கள். அவர்களிடம் இந்தத் திறமை புதைந்து கிடக்கிறது. இந்தத் திறமை வீண்போகாமல், நல்ல முறையில் நாட்டிற்குப் பயன் படும் வகையில், அந்த இளம் உள் ளங்களைத் தூண்டி, ஆர்வம் ஊட்டி, அவர்களிடையே பொதிந்து கிடக் கும் திறமைகளைச் சரியான முறை யில் பயன்படுத்திக் கொள்ளவேண்டி யது இப்படிப்பட்ட பள்ளிகளின் கடமையாகும்.

நம் நாட்டின் வளர்ச்சிக்கு, வேலை யில்லாத் திண்டாட்டம் மிகப் பெரிய தொரு தடைகல்லாக உள்ளது. ஆனால், இப்பள்ளியில் பயிலும் மாணவர்களாகிய உங்களுக்கு அந்த பிரச்னை இல்லை. படிப்பு முடிந்து போகும்பொழுது நல்ல வளமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக் கிறது. நம் நாட்டு இளைஞர் பலருக் குக் கிடைக்காத அரிய வாய்ப்பு உங் கட்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே, உங்கள் கடமை தனிச் சிறப்பு பெற்றது மட்டுமல்லாமல் உங்களுக் குள்ள பொறுப்புக்களும் மிகவும் அதிகம்; தட்டிக் கழிக்கக் கூடாததவையாகும். நீங்கள் பெற் றுள்ள அரிய வாய்ப்பினை நீங்கள் தவறவிடக் கூடாது. அந்த வாய்ப்புக்கு முழுக்க முழுக்கத் தகுதி

படைத்தவர்களாக நீங்கள் எதிர் காலத்தில் திகழவேண்டும்.

இன்றைய இளைஞர்களே எதிர் காலத்தில் நாட்டை வழி நடத்திச் செல்லும் தலைவர்கள் என்று கூறுவது வெறும் கூற்றல்ல; அது நூற்றுக்கு நூறு உண்மை. நாட்டின் எதிர் காலம் இன்றைய இளைஞர்களின் கையில்தான் உள்ளது. எந்த அளவுக்கு இன்றைய இளைஞர்கள் தங்கள் பொறுப்பினை உணர்ந்து, நல்ல குடிமக்களாகத் திகழும் வகையில் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்ற மூன்று தாரக மந்திரங்களை நெஞ்சிலே நிறுத்தி, தொண்டுள்ளத்துடன் பணியாற்றுகிறார்களோ, அந்த அளவுக்கு இந்த நாட்டின் எதிர்காலம் எழில் மிக்கதாக, வளம் பெற்றதாகத் திகழும் என்பது உறுதி. நாடு உங்களிடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறது. இந்தப் பள்ளியிலே படிக்கும் மாணவர்களாகிய நீங்கள் இந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் திகழ்வீர்கள் என்பதிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. நாடு உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு முழுக்க முழுக்கப் பாத்திரராக நீங்கள் பணியாற்றி, பிறந்து வளர்ந்த பொன்னாட்டிற்குப் புகழ் தேடித்தரவேண்டுமென உங்களையெல்லாம் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.''

[கோவை மாவட்டம் அமராவதி நகர் சயனிக் பள்ளியில் 25-10-'69 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் ஆற்றிய உரை.]

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி ஆடைகள் - தரமானவை, நெடுநாள் உழைப்பவை - சிக்கனமானவை; பலவிதமான டிசைன்களில் கிடைப்பதுடன், வண்ணம் மாறாமலும் உழைக்கும் நைஸ் ரக வேஷ்டிகளும் ரெடிமேட் ஆடைகளும் உள்ளன.

இன்றே எங்கள் ஷோ ரூம்களுக்கு விஜயம் செய்யுங்கள்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
எழும்பூர், சென்னை-8
போன்: 82121, 82122

என். கே. சம்பந்தன், பி.ஏ., எம்.பி.
தலைவர்

ஓராண்டுத் திட்டப் பணிகள்

பேரறிஞர் அண்ணா அவர்களின் மணி விழாவை ஒட்டி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ஓராண்டுத் திட்டப் பணிகள் ஆண்டுதோறும் தொடர்ந்து செவ்வனே நடத்தப்பட்டு வருகின்றன.

கிராமப் பொருளாதாரத்தில் அமைதியாக ஒரு புரட்சியையும் மக்கள் வாழ்க்கையில் புதிய மறுமலர்ச்சியையும் உருவாக்கிவரும் ஓராண்டுத் திட்டத் தின்படி 1969ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 15ஆம் நாளிலிருந்து 1970ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 15ஆம் நாளுக்குள் நிறைவேற்ற விருக்கும் திட்டப் பணிகள்பற்றிய மாவட்டவாரியான விவரங்கள் கீழே தரப்படுகின்றன:

மாவட்டம்	சமுதாயக் கிணறு	விசைத் தெளிப்பான்கள்	பள்ளிக் காய்கறித் தோட்டங்கள்	பள்ளிக்கு வசதிகள்	'சீரணி'யில் கட்டப்பட விருக்கும் பள்ளிக் கட்டடங்கள்	பாறை உடைக்கும் கருவி அல்லது துளைபோடும் இயந்திரம் அல்லது இயந்திரக் கலப்பை (டிராக்டர்)
வட ஆர்க்காடு	30	70	70	10	36	6
தென் ஆர்க்காடு	30	70	70	10	34	5
செங்கற்பட்டு	20	100	100	10	27	5
கோயம்புத்தூர்	70	150	150	10	41	8
தர்மபுரி	16	25	25	10	16	3
கன்யாகுமரி	5	15	15	5	9	1
மதுரை	65	70	70	10	34	5
நீலகிரி	4	10	10	5	4	2
இராமநாதபுரம்	65	70	70	10	32	5
சேலம்	30	80	80	10	35	5
தஞ்சாவூர்	80	150	150	10	36	4
திருச்சிராப்பள்ளி	45	150	150	10	39	6
திருநெல்வேலி	40	100	100	10	31	5
மொத்தம்	500	1060	1060	120	374	60

INDIAN BANK

(Wholly owned by the Government of India)

Head Office : MADRAS

A SPECIAL MESSAGE
TO
ARTISANS & TECHNICIANS - SKILLED OR SEMI - SKILLED

Do you require finance for workshed, improved tools, raw materials and other day-to-day working capital? You are entitled to take your problems to a bank, produce economically and well, a host of items, agricultural implements, household utensils, foot-wear, furniture, handloom fabrics, carpets, pottery, ornaments, handicraft items, special jigs, tools, dyes, patterns etc. or engage in servicing work such as repairs of automobiles, laundering, tailoring, haircutting, masonry, interior decoration etc. Moderate interest and easy repayment terms. Reach the nearest of our 239 Branches in Andhra, Bihar, Delhi, Gujarat, Kerala, Maharashtra, Mysore, Oriisa, Pondicherry, Tamil Nadu and West Bengal.

Gustodian : G. LAKSHMINARAYANAN

Nation's Prosperity Promotes Depositors' Security

With the compliments of :

Dalmia Cement (Bharat) Ltd.,

DALMIAPURAM P.O., TIRUCHIRAPPALLI Dist., Tamil Nadu.

Manufacturers of :

'ROCKFORT' Brand
DALMIA Portland & Pozzolana Cements
Also
Mine-Owners & Suppliers of
High Grade Iron Ore for Export.

A DALMIA ENTERPRISE

Head Office : **4, Scindia House, NEW DELHI-1.**

நம் உயிர் எழுத்து

எஸ்.எஸ்.தென்னரசு

இராமநாதபுரம் மாவட்டம் முதலமைச்சர்களைத் தரும் மாவட்டம் என்று சொல்லிக்கொள்வார்கள். குமாரசாமி ராசா முதலமைச்சராக இருந்திருக்கிறார்; பின்னர் காமராசர் எட்டாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்திருக்கிறார். அதை மனதிற் கொண்டுதான் அப்படிப் பேசிக் கொள்வார்கள்!

இருட்டு :

திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களைத் தவிர, வேறெவரும் ஆளுங்கட்சியை எதிர்த்து வெற்றி பெற்றதில்லை அந்தக் காலத்தில்! செட்டி நாட்டு அரசர் முத்தையா செட்டியார் அவர்களும், இராமநாதபுரம் அரசர் சேதுபதி அவர்களும் காங்கிரஸ் சின்னத்தில் போட்டியிட விரும்பாத காலத்தில் அந்தத் தொகுதிகளில் அப்போதைய ஆளுங் கட்சியான காங்கிரஸ் போட்டியிடாது இருந்ததுமுண்டு! அந்தக் காலத்தில்தான், மாண்புமிகு தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்களின் தொகுதியான திருப்பத்தூர்தொகுதியில் கவிஞர் கண்ணதாசன் தி.மு.க.வின் சார்பில் போட்டியிட்டு, ஐநூறு வாக்குகள் வேறுபாட்டில் 'டெபாசிட்' இழக்காமல் தப்பித்தார். அதற்குமுன்பு, திருப்பத்தூர் தொகுதி செட்டி நாட்டு அரசர் முத்தையா செட்டியார் அவர்களின் தொகுதியாக இருந்தது.

1957வரை திருப்பத்தூர் தொகுதி காங்கிரஸ் தொகுதியாகவே இருந்து வந்தது. 1957 தேர்தலில் தி.மு.க. மூன்றாவது இடத்தில்தான் இருந்தது. இருந்தாலும் தொண்டர்கள் நம்பிக்கை இழக்கவில்லை. 1962இல் வெற்றி பெற்றுவிடலாம் என்று திடமாக நம்பியிருந்தார்கள்.

1962 நெருங்கிக் கொண்டிருந்தது. கோவையில் வேட்பாளரை அறிவிக்கும் சிறப்பு மாநாடு ஏற்பாடாயிருந்தது. நாங்கள் ஒரு தனி வண்டியில் மாநாட்டுக்குச் சென்றிருந்தோம். எங்களுடன் திரு. செ. மாதவன் அவர்களும் வந்திருந்தார். '1962 தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியில் நீங்கள்தான் கழகத்தின் சார்பில் போட்டியிடவேண்டும்' என்று நாங்கள் திரு. மாதவன் அவர்களைக் கேட்டுக்கொண்டோம். திரு. மாதவன் அவர்கள் தன் கருத்தை உடனடியாக வெளியிடவில்லை. கழகத்தின் கொள்கைகளின்மீது ஆரவாரமில்லாத ஆழ்ந்த பிடிப்புக் கொண்டவர் மாதவன் என்பதைமட்டும் நாங்கள் அன்று தெரிந்துகொண்டு அவரையே கழக வேட்பாளராக



மாநாட்டில் அறிவிக்க ஏற்பாடு செய்தோம். பேரறிஞர் அண்ணு அவர்கள் அவர் பெயரை மாநாட்டில் வெளியிட்டு விட்டார்கள். தன் முழு எண்ணத்தையும் அறியாமல் அண்ணு அவர்கள் அறிவித்திட ஏற்பாடு செய்த எங்கள்மீது திரு. மாதவன் அவர்களுக்கு முதலில் வருத்தம்தான் ஏற்பட்டது. இருப்பினும் நாங்கள் அதைச் சமாளித்துக் கொண்டு விட்டோம்.

மாநாடு முடிந்து நாங்கள் ஊருக்குத் திரும்பினேம். வரும்போது திரு. மாதவன் அவர்களுடைய சொந்த ஊரான சிங்கம்புணரியைத் தாண்டித்தான் வரவேண்டும். கொடிகளுடன் வந்த எங்கள் கார், ஊருக்குள் நுழைந்ததும், 'யாருக்கு ஓட்டு? மாதவனுக்கு ஓட்டு! என்ன சின்னம்? உதயசூரியன்!' என்று முழக்கமிட்டோம்; ஊரே திகைத்தது.

தேர்தல் வந்துவிட்டது. மாவட்டக் காங்கிரஸ் தலைவரை எதிர்த்துத் திரு. மாதவன் போட்டியிட்டார். 1957 தேர்தலில் மூன்ருவது இடத்திலிருந்த கழகம் 1962இல் வெற்றி பெறும் என்று தலைவர்களே நம்பவில்லை. 3600 வாக்குகள் வேறுபாட்டில் திரு. மாதவன் வெற்றிபெற்ருர். கழகம், காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சுயேச்சை என்று வாக்குகள் வரிசை காட்டின.

விடிவெள்ளி :

திரு. மாதவன் முதன்முதலாக சட்டசபைக்குள் நுழையும்போது அவருக்கு வயது இருபத்தெட்டு.

1962 முதல் 1967 வரை சட்டமன்ற விடுதியில் 72ஆம் எண் அறையில் அவருடைய சட்டமன்றப் பணி துவங்கியது. அந்த ஐந்தாண்டுக் காலம் ஒரே அறையில் படித்து, பயின்று, தேறி, சிறந்த 'பார்லிமெண்டேரியன்' என்ற புகழைப் பெற்ருர். 'இவர் ஒரு தென்னேட்டி விசுவநாதன்; இவர் ஒரு மதுலிமாயி; இவர் ஒரு காமத்' என்று அனைவரும் புகழும் வண்ணம் திரு. மாதவன் அவர்களுடைய சட்டமன்றப் பணி விளங்கியது. வசிட்டர் வாயால் 'பிரம்மரிஷி' என்ற பட்டம் பெறமுடியாது என்பர். ஆனல் நம்முடைய மாதவன் பெற்ருர்! திரு. பக்தவச்சலம் வாயால் 'சிறந்த வாய்மையாளர்' என்று!

இந்தியா ஒரு சமதர்மக் குடியரசு நாடு. அதில் தெருவில் செல்லும் ஓர் ஏழையைச் சந்தேகப்பட்டு வழக்குப் போடத் தூண்டும் சட்டம் (முக்காடு கேஸ்) இருப்பது நியாயமா என்று சட்டமன்றத்தில் வாதிட்டுக் கையொலி பெற்றவர் நம்முடைய மாதவன்.

திரு. மாதவன் அவருடைய கல்லூரிப் பருவகாலத்தில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றவர். சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகுங்கூட, அவர் வக்கீல் தொழில் பயின்ற சிவகங்கை நகரில் வழக்கறிஞர்களோடும், நீதிபதிகளோடும் 'டென்னிஸ்' விளையாட்டைமட்டும் தொடர்ந்து ஆடிக்கொண்டிருந்தார். மற்ற நேரங்களில் அவர் நீதிமன்றப் பணிகளிலும், சட்டமன்றப் பணிகளிலும் திளைத்திருந்தார்.

அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் கழகம் இரண்டு போராட்டங்களைத் தொடங்கியது. 1962இல் விலைவாசி உயர்வைக் கண்டிக்கும் போராட்டம். அதில் திரு. மாதவன் அவர்கள் தாலுகா அலுவலகத்தின் முன்பு மறியல் செய்தார்; கைதானர். தீர்ப்பளிக்கும் தினத்தன்று, பெட்டி, படுக்கையுடன் கூண்டிலேறி நின்ருர். எதிர்பாராதவகையில் நீதிபதி, திரு. மாதவனையும், அவருடைய குழுவினரையும் விடுதலை செய்துவிட்டார். சர்க்கார் உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்தனர். அதிலும் விடுதலைதான் அவருக்கு!

1964இல் இந்தி எதிர்ப்புப் போர் தொடங்கியது. அதில் திரு. மாதவன் மூன்று மாதம் தண்டிக்கப்பட்டு, புதுக்கோட்டைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். சிறைச்சாலையின் துயரங்களையெல்லாம் நேரில் கண்டு, அநுபவித்து, பின்னர் அவர் சட்ட அமைச்சரானதும் அதற்கு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்திருக்கிருர்.

1967வரை திரு. மாதவன் எதிர் அணியில் இருந்தாலும் தொகுதி மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தார். அந்தப் பகுதி மக்களுக்கெல்

லாம் அவர் ஒரு செல்லப்பிள்ளையாக விளங்கினர்.

உதயசூரியன் :

நாட்டில் 1967 தேர்தலுக்கான இளஞ்சூடு தட்டியது. இந்தமுறை தி.மு.க. படுதோல்வி அடைந்துவிடும் என எதிர்த் தரப்பு முதியவர்கள் ஆருடம் சொன்னர்கள். அப்போது திரு. மாதவன் அவர்கள் வெற்றி பெறக்கூடாது என்பதில் எதிர்த்தரப்பினர் பெரிதும் அக்கறை காட்டினர்

தேர்தல் களம் அமைந்தது. மீண்டும் அந்தத் தொகுதியில் திரு. மாதவன் அவர்களையே நிறுத்துவதென்று கழகத் தோழர்களும், அரசியலுக்கு அப்பாற்பட்ட பெரியவர்களும் சேர்ந்து ஒருமுகமான முடிவினை எடுத்தார்கள். ஒரு கோடீசுவரர் மாதவனை எதிர்த்துப் போட்டியிட்டார்.

திரு. மாதவன் அவர்கள் தேர்தல் காலத்தில் ஒவ்வொரு வாக்காளரையும் நேரில் சந்தித்து வாக்குக் கேட்க வேண்டும் என்ற பேரார்வத்தைக் கொண்டிருந்தார். ஒவ்வொரு வீட்டின் கதவையும் தொட்டாவது வர வேண்டும் என்ற குறிக்கோளோடு அயராது உழைத்தார்! உழைப்பின் பயன் வெற்றி மங்கை அவருக்கு வாகைமாலை சூட்டினுள்!

1962முதல் 1967வரை திரு. மாதவன் ஆற்றிய சட்டசபைத் திருப்பணி அண்ணுவின் அமைச்சரவையில் அவருக்கு இடம் ஒதுக்கிக் கொடுத்தது. இன்று கலைஞர் அவர்களின் அமைச்சரவையிலும் அவருடைய அன்புச் சகோதரராக எங்கள் மாவட்ட அமைச்சர் மாதவன் அவர்கள் விளங்கி வருவது கண்டு பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

1967 மார்ச் மாதம் 4ஆம் தேதி வானெலியில், அமைச்சரவையின் விவரம் அறிவிக்கப்பட்ட பின்னர் தான் திரு. மாதவன் ஊரைவிட்டுச் சென்னைக்குப் புறப்பட்டு வந்தார். எங்களுக்கெல்லாம் ஒரே கவலை, திரு. மாதவன் அவர்களை ஆளாக்கிய அவருடைய அன்னையார் அவர் அமைச்சராவதற்கு சில மாதங்களுக்கு முன் காலமாகிவிட்டதுதான். 1962 தேர்தலில் திரு. மாதவனை எதிர்த்துப் போட்டியிட்டோர் நடத்திய கொடுமைகளைக் கண்டு தன் மகன் உயிருக்கு எதுவும் நேர்ந்துவிடக் கூடாதே என்று ஓயாத கவலையில் ஆழ்ந்திருந்தது அத்தாயுள்ளம். திரு. மாதவனின் வெற்றிச் செய்தி கேட்டதும் ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தாள் அத்தாய்! 1967இல் மீண்டும் வெற்றி பெற்று மகன் அரசோச்சும் நிலை காண அவ்வன்னை இல்லையே என்பது எங்கள் ஏக்கம்.

திரு. மாதவன் சட்டத்துறைக்கும் கூட்டுறவுத்துறைக்கும் அமைச்சரானர்.

கோயில்களில் உள்ள மடப்பள்ளிகள் போல் இருந்த கூட்டுறவுத் துறையை மக்கள் இயக்கமாக மாற்றினர். ஏழைகள் எளிதில் கடன் தொகைகளைப் பெற்றுக்கொள்ள வழி வகை கண்டார். கூட்டுறவுத் துறையில் ஒரு மறுமலர்ச்சி உண்டாக்கச் சிவகங்கையில் ஒரு கருத்தரங்கை நடத்திப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். 1 கோடி ரூபாய் கடன் தொகை அளித்துத் துயர் துடைத்திருக்கிறர்.

சிறைச்சாலைக்கும் அவர்தான் அமைச்சர். அவருடைய சிறை அநுபவங்களை வைத்து அவசியமான விதிகளைச் சிறைச்சாலைக்குள் புகுத்தினர். கைதிகள், தங்களுடைய அவமானச் சின்னங்களாகக் கருதிய 'குல்லாய்' களைத் திரு. மாதவன் ஒழித்துக் கட்டினர். உணவு முறையில் கைதிகளுக்கு நல்ல சலுகைகளை அளித்தார். 'பரோல்' கொடுப்பதில் இருந்த காரணமில்லாத தடைகளை நீக்கினர். 1956இல் நடைபெற்ற முகுகுளத்தூர் கலவரத்தின்போது தண்டிக்கப்பட்ட மறவர்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் விடுதலை செய்யவும் அந்தப் பகுதி மக்கள் மனமாற்றம் அடைந்து நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கும் முழுமுதற் காரணகர்த்தாவாக விளங்கியவர் திரு. மாதவன் அவர்களேயாம்!

அண்ணு அவர்களின் மறைவுக்குப் பின் கலைஞரின் அமைச்சரவையின் தொடக்க காலத்தில் கல்வி அமைச்சராகப் பணியாற்றினர்.

நாட்டில் கட்டடம் இல்லாத பள்ளிகளே இருக்கக்கூடாது

என்ற முடிவை மேற்கொண்டார். பல இலட்சம் ரூபாய் பகிர்ந் தளிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான உயர்நிலைப் பள்ளிகள் இப்போது எழுப்பப்பட்டிருக்கின்றன. அவர் அமைச்சராக இருந்தாலும் மாவட் டத்திற்கு வரும்போதெல்லாம் தன் தொகுதி மக்களைச் சந்திக்காமல் வர மாட்டார். அதனால்தான் அவரு டைய தொகுதியில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனக்குறைகளை அமைச்சர் மாதவன் அவர்களிடம் கூறித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற திடமான நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள முடிகிறது.

திரு. மாதவன் அவர்கள் இப் போது தொழிலமைச்சராகவும் திகழ் கிறார். சிறிய வயதில் இவ்வளவு பெரிய பொறுப்பினை ஏற்ற முதல் இளம் அமைச்சர் இவராகத்தா னிருக்க முடியும். தமிழகம் தொழில் துறையில் முன்னேறவேண்டும் என்ற தணியாத ஆசை கொண்டவர் நம் முடைய மாதவன். காரிலே போகும் போது, எங்காவது தரிசு நிலங்களைப் பார்த்தால், 'இங்கே தொழிற்சாலை கட்டலாம்; பண்ணை வைக்கலாம்' என்று அதிகாரிகளுடன் கலந்துரை யாடுவார். எந்தப் பொருள் வெகு அதிகமாகக் கிடைக்கிறதோ அவை களை மூலப் பொருளாகக் கொண்டு என்ன தொழில் நடத்தலாமென்று தொழில் நிபுணர்களுடன் ஆலோ சனை நடத்துவார்.

ஏழைகளும். நடுத்தர மக்களும், தொழில் நடத்த அரசினரின் உதவியை எளிதில் பெற வாய்ப்பளிக் கும் வகையில் சிறுதொழில் தீவிரத் திட்ட விழாவினை இராமநாதபுரம் மாவட்டத்தில்இராசபாளையத்திலும் சிவகங்கையிலும் நடத்திப் பெரும் பரபரப்பை உண்டு பண்ணி எல் லாத் தரப்பினர்க்கும் சிறுதொழில் அபிவிருத்தித் திட்டத்தில் நல்ல பிடிப்பையும் நம்பிக்கையையும் ஏற் படுத்தியுள்ளார். ஓர் ஏழை, அர சாங்கத்திடம் கடன் பெறவேண்டும் என்றால், ஏழுகடல் தாண்டிப்போக வேண்டும் என்ற அச்சத்தை அறவே நீக்கியவர் மாதவன் அவர்கள்தான்.

திரு. மாதவன் அவர்களின் பணி களில் மிகச் சிறந்ததும் மறக்க முடியா ததும் அவர் செய்துகாட்டிய 'குறை தீர்க்கும் நாள்' என்ற ஏற்பாடுதான்.

குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட கிராமத்திற்கு மாவட்ட மட்டத்தி லுள்ள எல்லா அதிகாரிகளையும் வர வழைத்து, அந்தப் பகுதி மக்களின் குறைகள் அனைத்தையும் கேட் டறிந்து அன்றே அங்கேயே பரிகாரம் காண்பதான இந்த முறை மன்னர் காலத்தில்நடந்திருக்கலாம்; பின்னர் இந்தக் காலத்தில்- தி. மு. க.வின் அரசுக் காலத்தில்தான் நடைபெறு கிறது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதற்கு 'மனு நீதி நாள்' என்று திருப்பெயரிட்டுத் தமி ழகமெங்கணும் நடத்திட ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

முதன் முறையாகத் திரு. மாதவன் அவர்கள் தொகுதியிலுள்ள திருக் கோட்டியூரிலும், சிவகங்கைத் தொகுதியிலுள்ள காளையார் கோயி லிலும், கடலாடித் தொகுதியிலுள்ள சாயல்குடியிலும் நடத்திப் பார்த்துப் பெரு வெற்றியும், மக்களுக்கு மன அமைதியும் கிடைத்ததை அறிந்து இந்தத் திட்டம் எல்லாப் பகுதிக்கும் விரிவு படுத்தப்பட்டது. மாவட்ட ஆட்சியாளர்கள் இதனை, மனு நீதி நாள் அல்லது 'இராமனாட்சிஸ்டம்' என்று பேசிக்கொள்வதைக் கேட்கும் பொழுது எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது.

திரு. மாதவன் அவர்கள் பெரிதும் மனஉறுதி நிறைந்தவர். டில்லியில் மத்திய அமைச்சரிடையே அவர் இந்தியை எதிர்த்துப் பேசிக் கண்டித் தது அவருடைய வீர உணர்வுக்குச் சான்றாகும். காலத்தைப் போற்றும் கடமையாளர் அவர். தன்னைக் காண வருபவர்கள் தாம் கூறவேண்டியதை விடுத்து மற்ற அநாவசியமான உரை யாடல்களில் ஈடுபட்டால் அதைத் தவிர்த்துச் செய்திக்கு வருமாறு எடுத் துரைப்பார். பொது வாழ்வில் ஈடு படுவோர் ஐயங்கட்கு அப்பாற்பட்ட தூய்மை நிலையில் திகழவேண்டும் என்று வலியுறுத்தி வருபவர் அவர்.

தமிழ் எழுத்துக்களில் உயிரெழுத் துக்கள் தனிச் சிறப்புப் பெற்று விளங்குவதுபோல் தமிழக மக்க ளிடையே தலை சிறந்த நன் மக்களுள் தனியிடம் பெற்றவராக-உயிர் எழுத் தாக-விளங்கிவரும் அவருடைய புகழ் மேலும் ஓங்கி வளரவேண்டும் என உளமார வாழ்த்துகின்றனர் நாட்டு மக்கள்.

இது மணமானவர்க்கு :

செம்மையான சீர்மைச் சின்னம்

எடுப்பு

செம்மையான மூன்றுகோணச் சின்னம் பாருங்க-இது
செப்புகின்ற நன்மைகளை நெஞ்சில் கொள்ளுங்க!
(செம்மை)

தொடுப்பு

விம்முகின்ற தலைமுறையை வாழவையுங்க-நாட்டின்
வேதனையை மாற்றிவிட முனைந்து நில்லுங்க!
(செம்மை)

முடிப்பு

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் கொண்டுவாருங்க
-மூன்று
குழந்தைகளே போதுமென்ற நிறைவு கொள்ளுங்க!
தடம்புரளாவண்ணம் வாழ்க்கைத் தேரை ஓட்டுங்க
-அதில்
சாரதியாய் அமர்ந்து என்றும் வெற்றி காணுங்க!
(செம்மை)

கடும்சுமையால் தவித்துவாழும் நிலைமை
போக்குங்க-என்றும்
களிப்புடனே வாழ்ந்து நாட்டின் கடமை ஆற்றுங்க!
படும்துயரைப் போக்கிக் கொள்ளும் பாதை
தானுங்க-இந்தப்
பாட்டைவழி துணிந்து சென்றால் துயரம் ஏதுங்க?
(செம்மை)

தெ. பா. சீதாரரமன், சென்னை-1

இது மாணவர்க்கு :

பள்ளி செல் பாடம் படி

படிக்கப் படிக்க இனிக்கும் கல்வி
பாப்பா பாப்பா அறிவாயா? - நீ
படிக்கப் பள்ளி செல்வாயா?

பாலும் தேனும் சுவைக்கும் விருந்து
படிப்பும் அதுபோல் தானம்மா! - நீ
பயன்பெறும் வழியும் கேளம்மா!

'அண்ணா' படித்தார் அறிவில் சிறந்தார்
அகிலம் அவரை மறந்திடுமா?-நம்
அண்ணல் புகழும் மறைந்திடுமா?

படிப்பில் உயர்ந்தார் பாரை ஆளும்
பாங்கை நீயும் அறியிலையோ? - கல்வி
பண்பை உயர்த்தும் தெரியிலையோ?

கற்றிடக் கற்றிடச் சுரக்கும் கேணி
கண்ணே வள்ளுவர் சொல்லம்மா! - நீ
கற்றிடல் அவசியம் நல்லதம்மா!

தீந்தமிழ் நாடு செழிப்புற இன்னும்
தேர்ந்த கல்வி வேணுமம்மா - வரும்
தலைமுறை உன்னால் சிறக்குமம்மா!

ஒன்றே குலமும் ஒருவன் தேவன்
என்றே எண்ணம் கொள்ளம்மா - உனை
என்றும் வாழ்த்தும் நாடம்மா!
பண்பின் விளக்கம் பள்ளிப் பாடம்
பாப்பா பாப்பா அறிந்தாயா? - இனி
படிக்கப் பள்ளி செல்வாயா!

கொங்கணபுரம் கவிஞர் மு. முத்துக் கிருட்டிணன்

சீரணியின் சிறப்புச் செய்திகள்

பேரறிஞர் அண்ணு பிறந்தநாள் நினைவாகத் தமிழகத்தில் 374 நினைவுச் சின்னங்கள் – பள்ளிக் கட்டடங்கள் இவ்வாண்டில் எழுப்பப்பட்டு வருவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அந்த நினைவுச் சின்னங்கள் சீரணித் தொண்டர்களின் பெரு முயற்சியாலும், உள்ளத் துடிப்பாலும் குறிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்கப் பட்டிருப்பதையும் நீங்கள் தெரிந்திருப்பீர்கள். இது வரை 215 கட்டடங்கள் கட்டி முடிந்துள்ளன. மற்றவைகளும் மிக விரைவில் முடிக்கப்படும்.

பட்டுக்கோட்டையில் பழைய புதுக்கோட்டையில் சீரணித் தொண்டர்களால் அண்ணு நினைவாக எழுப்பப்பட்ட பள்ளி, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே, அதாவது 20நாட்களிலேயே கட்டியிருப்பது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்ருகும். சீரணித் தொண்டர்களிடையே கட்டுப்பாட்டை வளர்க்கவும், கண்ணியத்துடன் கடமையாற்ற ஊக்கவும் சென்ற மாதம் பவானிசாகர் பயிற்சி நிலையத்திலும், பட்டுக்கோட்டை பயிற்சி நிலையத்திலும் 80 சீரணித் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கப் பட்டது. அந்தப் பயிற்சியில் பல துறையைச் சார்ந்த அதிகாரிகளும், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், எல்லாவற்றிற்கும் மேலாக அமைச்சர்களும், சீரணித் தொண்டர்களுக்குத் தக்க அறிவுரை கூறி அவர்களை ஊக்குவித்தது குறிப்பிடத்தக்கது.

பயிற்சி 12 நாட்கள் நடைபெற்றது. விவசாயம், கால்நடை, சுகாதாரம், பொதுப்பணி, நாட்டுப்பற்று முதலியவை பற்றிக் கருத்துரைகள் வழங்கப்பட்டன. விவசாயத்திலும், கால்நடை வளர்ப்பிலும் ஆர்வங் கொள்ளத்தக்க வகையில் பயிற்சி அமைந்தது. விவசாயக் கருவிகளைப் பயன்படுத்தும் முறைகளைப் பற்றி நேரடியாகத் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டதைத் தொண்டர்கள் அனைவரும் விரும்பி ஏற்றுக் கொண்டார்கள். பவானிசாகரில் பங்குபெற்ற சீரணித் தொண்டர்கள் பயிற்சியின் இறுதியில் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்து சீரணிப் பணிகள் நடந்துள்ள இடங்களையும், சென்னை நகரத்தில் நடந்த பணிகளையும் பார்வையிட்டுச் சென்ருர்கள். இச் சுற்றுலா அவர்களின் எண்ணத்திற்கும், பற்றுக்கும் மேலும் உற்சாகம் அளிக்கும் வகையில் அமைந்தது என்று கூறினுர்கள்.

திருச்சி மாவட்டத்தில் திசையெல்லாம் சீரணிப் பணிகள்

* பள்ளிக் கட்டட வேலை மதிப்பு	ரூ.	1,37,503
* சாலை வேலைகள்	ரூ.	8,030
* ஏரி பராமரிப்பு வேலைகள்	ரூ.	339

பங்குகொண்ட சீரணித் தொண்டர்களின் எண்ணிக்கை 526. இந்தப் பணிகள் கடந்த அக்டோபர் திங்களில் மட்டும் நிறைவேற்றப்பட்டவை.

குறளோவியம்:

''உண்டார்கண் அல்லது அடுநருக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.'' — குறள்

''கள் தன்னை உண்டவரிடத்தில் அல்லாமல் காமத்தைப்போல் தன்னைக் கண்டவரிடத்தில் மயக்கத்தை உண்டாக்குவதில்லை.''

தில்லையாடித் திருவிழா

[வ. சம்பந்தம்]

தில்லையாடி, தஞ்சைத் தரணியிலே செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சிறு கிராமம். மக்கள் தொகை 3025. அந்தச் சின்னஞ்சிறு ஊருக்கு ஏன் இவ்வளவு பெருமை? ஏன் இவ்வளவு சிறப்பு? என்கிறீர்களா!

ஊருக்குச் சிறப்பு அங்குள்ள வளத்தாலோ, நில அமைப்பாலோ அல்ல; அங்குத் தோன்றிப் பெருமை செய்யும் நன் மக்களால்தான். அண்ணா தோன்றியதால் காஞ்சி பெருமை பெற்றது. கலைஞர் பிறந்ததால் திருவாரூரை அடுத்த திருக்குவளைக்குச் சிறப்பு! அண்ணல் காந்தியடிகள் தோன்றியதால் போர்பந்தருக்குப் பொலிவு! ஊருக்குப் பெருமை அங்குத் தோன்றும் உத்தமர்களால்தான்.

பாஞ்சாலங் குறிச்சி மண் வீர மூட்ட வல்லது என்பர். தில்லையாடி மண்ணோ வெங்கொடுமைச் சாக்காட்டை விளையாட்டென எண்ணிப் பணியாற்றும் தியாக உணர்வை ஊட்டவல்லது போலும்! அரசியல் வரலாற்றிலே தியாக முத்திரைகளைப் பதித்த வீரர்களும் வீராங்கனைகளும் வாழ்ந்த மண் தில்லையாடி மண். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கட்கு இழைக்கப்பட்ட கொடுமையை எதிர்த்துக் காந்தியடிகள் தொடங்கிய அறப்போரில் 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும்சிறைச்சாலை' என்று வீரமுரசு கொட்டிச் சிறை புகுந்து, வெளிவந்த சின்னாளில் உயிர்துறந்த வீரத் தமிழ் மங்கை வள்ளியம்மைக்குச் சொந்தமான மண் தில்லையாடி மண்ணே! தியாகிகளைத் தோற்றுவித்த வீரக்கோட்டமாகத் திகழும் தில்லையாடிச் சிற்றூரைச் சிங்கார ஊராக மாற்றியமைப்பதெனத் தமிழக அரசு முடிவு எடுத்தது. இதற்கென்று 7½ இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இந்தத் தில்லையாடி வள்ளியம்மை நகரமைப்பைத் தில்லையாடியிலே 22-10-69 அன்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தில்லையாடி மண்ணில் தோன்றிய வள்ளியம்மையும், நாகப்பனும், நாராயணசாமியும் தென் ஆப்பிரிக்காவிலே உத்தமர் காந்தியடிகளுடன் தோள்கொடுத்து மனித உரிமைக்காகப் போராடிய மாமணிகள். அதுமட்டுமல்ல; தென் ஆப்பிரிக்காவிலே குடியேறிய தமிழர்களில் பெரும்பாலும் வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் தங்கள் பெயரைப் பொறித்துக்கொண்டவர்கள் இந்தத் தில்லையாடிக் கிராமத்



வள்ளியம்மை

தைச் சேர்ந்தவர்கள்தான். அண்ணல் காந்தியடிகளின் அறப் போராட்டத்தில் வள்ளியம்மையின் பங்கு ஈடு இணையற்றது. அவ்விள மங்கை வள்ளியம்மையின் மறைவு குறித்து மனம் கலங்கி அண்ணல் காந்தியடிகள் எழுதினார்; ''வள்ளியம்மாள் தொண்டு அழியாதது. தன் கரங்களினாலேயே சேவையென்னும் கோயிலை

அவள் எழுப்பினுள். அவளுடைய மாண்புமிக்க உருவம் பலர் இதயங்களில் நிரந்தரமாகப் பதிந்து இருக்கிறது. இந்தியா உள்ள வரையில்,



நாகப்பன்

தென் ஆப்பிரிக்காவின் சத்தியாக்கிரகத்தில் வள்ளியம்மாவின் பெயரும் நீங்கா இடம் பெற்றிருக்கும்.''

தென் ஆப்பிரிக்கப் போராட்டத் தியாகிகள் பட்டியலில் முதல் வரிசையிலே நிற்பவர்கள் வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி! இவர்கள் மூவருமே தில்லையாடிக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

நாகப்பன் அரிசன வகுப்பைச் சார்ந்தவர். தில்லையாடிக்குக் காந்தியடிகள் வருகை தந்தபோது அரிசனங்கள் இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி அவதிப்படும் நிலை கண்டார். அக் காட்சியே அவரை அரிசன முன்னேற்றத்துக்கு அயராது பாடுபடத் தூண்டியது எனலாம்.

''நாகப்பனும் நாராயணசாமியும் பதினேழு வயதும் பதினெட்டு வயதுமான இளைஞர்கள். இவர்கள் தாய் நாட்டின் மானத்தைக் காக்க உறுதியுடன் துன்பங்களையும் அனுபவித்தார்கள். அவர்களுடைய ஒப்பற்ற சேவையை என்ன சொல்லிப் பாராட்டுவது'' — காந்தியடிகளின் புகழுரை இது.

அண்ணல் காந்தியடிகளின் நூற்றுண்டுவிழா சீருடனும் சிறப்புடனும் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த விழாவினை ஒட்டி, ஏழரை இலட்சம் ரூபாய் செலவில் வள்ளியம்மை நகர் அமைப்பு என்கின்ற அமைப்பினை உருவாக்கித் தில்லையாடிச் சிற்றூரைச் சீர்திகழும் திருவூராக ஆக்கிடத் தமிழக அரசு முடிவு எடுத்தது. தில்லையாடி மட்டுமல்ல; இது போலவே தமிழகத்தில் உள்ள ஊர்கள் எல்லாம் ஆகவேண்டும் என்பதற்கடையாளமாகத் தில்லையாடியை ஒரு மாதிரி ஊராக ஆக்குவதற்குத் தமிழக அரசு திர்மானித்திருக்கிறது.

விழாவன்று இடைவிடாத மழை கொட்டிக் கொண்டிருந்தது. பெருங்காற்று-பேய்க்காற்று பரவி அடித்துக் கொண்டிருந்தது. பெரிய நகரத்திலேயே பெருமழை என்ருல் எந்தக் காரியத்தையும் உருப்படியாகச் செய்ய முடியாது! தில்லையாடி போன்ற கிராமத்தில் கேட்க வேண்டுமா? எவ்வளவோ இன்னல்கள்! இருந்தாலும் மக்கள், விழாவில் பல்லாயிரக்காணக்கில் குழுமிவிட்டனர்! மழை வெள்ளத்தை விஞ்சும் வகையில் மக்களின் உணர்ச்சி வெள்ளம்! பெருமழையைப் பொருட்படுத்தவில்லை! இன்னலைப் பொருட்படுத்தவில்லை! மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்...என்ற கதைதான்! பாய்ந்தோடிய மழை வெள்ளம் மக்களின் மகிழ்ச்சி வெள்ளத்தின் முன் தோற்றுவிட்டது! தியாகிகளை மதிப்பதில், தியாக சீலர்களுக்கு விழாவெடுப்பதில், தியாகக்



நாராயணசாமி

கோட்டங்களை உருவாக்குவதில் தமிழர்கள் எவ்வகை இடுக்கண் நேரிடினும் இடருருர்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வள்ளியம்மாள் நகர் அமைப்பைத் துவக்கி வைத்து அரியதோர் உரையாற்றினார்.

தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் காந்தியடிகளுடன் தொடர்புகொண்டிருந்தவர்கள் தில்லையாடிக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்று முதல்வர் குறிப்பிட்டுத் தில்லையாடிக் கிராமத்தைச் சேர்ந்த வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி, சுப்பிரமணிய ஆச்சாரி, காந்தியடிகளுக்குத் திருக்குறளைச் சொல்லிக் கொடுத்த வேதியப் பிள்ளை, காந்தியடிகளுக்குத் தென்ஆப்பிரிக்காவிலே தமிழ் சொல்லிக் கொடுத்த தம்பியப்பச் செட்டியார் ஆகியோரைப்பற்றியெல்லாம் நினைவு கூர்ந்து தில்லையாடிக் கிராமத்திற்குத்தான் எவ்வளவு பெருமை! என்றுரைத்தார்.

முதல்வர் தன்னுடைய உரையில் தில்லையாடிக் கிராமத்தை ஒரு மாதிரிக் கிராமமாக மாற்றியமைக்கும் திட்டத்தை மக்களுக்கு எடுத்துரைத்தார். அவர் தன்னுடைய உரையில் கூறினார்:

''காந்தியடிகளுடைய நூற்றாண்டு விழா இன்று நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. அப்படிக் கொண்டாடப்படுகின்ற அவ்விழாவினை ஒட்டி, தில்லையாடியைத் தேர்ந்தெடுத்து, காந்தியடிகள் நினைவாக, இங்கு இப்படிப்பட்ட விழாவினைக் கொண்டாடுகிறோம்.

இங்கு ஏழு அல்லது ஏழரை இலட்சம் ரூபாய் செலவிலே வள்ளியம்மை நகர் என்கின்ற அமைப்பினை உருவாக்கி அதில் அரிசனங்களுக்கு 94 புதிய வீடுகள் அமைக்கின்றோம்.

வள்ளியம்மையின் நினைவாக இங்கு ஒரு மண்டபத்தை அமைக்கின்றோம். வள்ளியம்மையினுடைய பெயரால்

உயர்நிலைப்பள்ளிக் கட்டடம் ஒன்றை இங்கு அமைக்கின்றோம். வள்ளியம்மை மாணவர் இல்லக் கட்டடம் ஒன்றையும் இங்கு நிறுவ இருக்கின்றோம்.

நாகப்பனுடைய பெயரால் அமைந்த நாகப்பன் நகரில் 64 அரிசனங்களுக்குப் புதிய வீடுகளை இங்கு அமைக்க இருக்கின்றோம். நாராயணசாமி மாணவர் இல்லக் கட்டடம் ஒன்றையும் அமைக்க இருக்கின்றோம்.

திருக்கடையூர் - தில்லையாடி சாலையையும், திருமலை-தில்லையாடி சாலையையும், தில்லையாடி-காட்டுச்சேரிச் சாலையையும் சீர்படுத்த இருக்கின்றோம். கடலாழி மதகை விரிவுபடுத்த இருக்கின்றோம்,

இன்னும் என்னென்ன தேவைகளோ அவைகளையெல்லாம் செய்து, தில்லையாடி என்ற இந்தச் சிற்றூரைச் சிங்காரமான ஊராக ஆக்கிவிடுவோம்.

இதுபோலத் தமிழகத்திலே உள்ள ஊர்கள் எல்லாம் ஆகவேண்டும் என்பதற்கு அடையாளமாக, இதையொரு மாதிரி ஊராக ஆக்குவதற்கும் தமிழக அரசு தீர்மானித்திருக்கிறது.''

தஞ்சைத் தரணியில் எங்கோ ஒரு மூலையில் உள்ள தில்லையாடிக் கிராமம்-நன்மக்களைப் பெற்றெடுத்த காரணத்தால் - நானிலம் புகழும் திருவிடமாக, மக்கள் தேடிவரும் திருத்தலமாகத் திகழப்போகிறது.


அமோக
விளைச்சலுக்கு
யூரியா
NEYVELI UREA
இது ஓர்
நெய்வேலி
லிக்னைட்
கார்ப்போரேஷன்
தயாரிப்பு
FDSNLC 1142TM

பைந்தமிழ்த் தேர்ப் பாகன்

சு.செ

தமிழ்க் கவிதையுலகில் ஒரு திருப்புமுனையாய் விளங்கிய கவிஞர் பாரதியார் பிறந்த திங்கள் இத்திங்கள். ஒருவன் ஒருத்தி இன்புற வாழ்ந்த அகத்தையும், அரசர்களின் வண்மை, வன்மை, வாகை போன்ற புறத்தையும் எடுத்தியம்பின சங்க இலக்கியங்கள். இடைக்கால இலக்கியங்களோ புராணங்களாக, கற்பனைச் சுவையும் சொல் விளையாட்டுக்களும் நிறைந்தனவாய் அமைந்தன. இலக்கியவுலகில் புதுமைக் காலத்தைத் துவக்கி வைத்தவராய் அமைந்த பாரதியாரின் கவிதைகளோ விடுதலை உணர்வை ஊட்டுவனவாய், மூடப் பழக்க வழக்கங்களைச் சாடுவனவாய், எளிமை நிறைந்தனவாய், ஆனால் எழுச்சி ஊட்டுவனவாய் அமைந்தன.

பாரதி தோன்றிய காலம் நாட்டு மக்கள் அடிமைத் தளையினுல் அல்லலுற்றுப் பேசவும் அஞ்சிக் கிடந்த காலம். அக்காலத்திய நாடக மேடைப் பாடல் ஒன்று; இந்தியர்கள் கறுப்பு நிறம் கொண்டவர்களாதலின் காக்கைகளாக்கப் பட்டனர்; வெள்ளையர்கள் நிறம் காரணமாகக் கொக்குகள் ஆயினர்; கொக்குக்கும் காக்கைக்கும் தர்க்கம் நடக்கும். காக்கை,

> கொஞ்சமா நஞ்சமா எங்கள் கும்பி
> கொதிக்கப் பணத்தைக்
> கொள்ளை கொண்டு போகிறுயே கொக்கே கொக்கே
> —வெள்ளைக் கொக்கே கொக்கே

என்று கேட்கும். அதற்குக் கொக்கு,

> அங்கே கொண்டுபோன பணத்திற்கு இந்திய சட்டசபையில்
> செலவுண்டு காக்காய் காக்காய்—கருங் காக்காய் காக்காய்

என எடுத்தெறிந்து பேசும். அடுத்து, காக்கை மிக அமைதியாக,

கஞ்சியில்லா ஏழைமக்கள்
கஷ்டப்படும் காலத்திலே
கள்ளுக்கடை ஏதுக்காக
கொக்கே கொக்கே
—வெள்ளைக் கொக்கே கொக்கே

என்று கெஞ்சிக் கேட்கும்.

கஞ்சியில்லா ஏழைமக்கள்
கள்குடித்துப் போதைவந்தால்
கவலை தெரியாதடி காக்காய்
காக்காய்—கருங் காக்காய் காக்காய்

இது கொக்கின் பதில். கள்குடித்துப் போதை வந்ததும் மக்கள் கவலையை மறந்துவிடுவார்களாம். கவலையை மறக்கச் செய்யும் மருந்தகமாம் கள்ளுக்கடை. எப்படி இருக்கிறது கொக்கின் கூற்று?

முன்பின் சிந்தியாது உங்களுக்கு இடம் கொடுத்துவிட்டு இப்போது விழிக்கிறோமே என்ற எண்ணத்தில்,

ஆட்டுத் தோலுக் கம்பெனிக்கு
ஆதியில் இடம் கொடுத்து
உங்களிடம் மாட்டிக் கொண்டோம்
கொக்கே கொக்கே
—வெள்ளைக் கொக்கே கொக்கே

என்று காக்கை கூற, கொக்கோ,

ஆட்டுத் தோலுக் கம்பெனிக்கு
ஆதியில் இடம் வாங்கி
வண்ணப் புகை வண்டியென்ன,
தந்தியென்ன, தபாலென்ன

இவ்வளவு செய்து கொடுத்திருக்கிறோமே, இவை போதாவோ? என்று ஆணவத்துடன் கேட்கும். கொக்கிடம் காக்கை அஞ்சி, கெஞ்சிக் கேட்கின்ற நிலையில் அமைந்திருக்கிறது இக் காட்சி.

பாரதியும் இதே போன்ற ஒரு காட்சியைப் படைத்துக் காட்டுகிறார் தன் பாடல்களில். ஒரு பக்கத்தில் வெள்ளையன்; மறு பக்கத்தில் இந்தியன்; வெள்ளையன் திமிரோடு கேட்கிறான்:

''கப்ப லேறு வாயோ?—அடிமை
கடலைத் தாண்டு வாயோ?
குப்பை விரும்பும் நாய்க்கே
—அடிமை
கொற்றத் தவிசு முண்டோ!''

என்று ஏசி, மேலும்

''ஜாதிச் சண்டை போச்சோ
—உங்கள்
சமயச் சண்டை போச்சோ
நீதி சொல்ல வந்தாய்—கண்முன்
நிற்கொ ணாது போடா!''

என்று விரட்டுகிறான். இந்தியன், முன்பு காட்டிய காக்கை நிலையில் கைகட்டி, வாய் புதைத்து, அஞ்சி நிற்கவில்லை. ஆண்மையோடு பேசுகிறான். ''சொந்த நாட்டிற் பரர்க் கடிமை செய்தே துஞ்சிடோம்—இனி அஞ்சிடோம்'' என வீர முழக்கமிடுகிறான். ''எங்கள் தாய் நாடு விடுதலையடையப் பாடுபடுவது எந்த வகையில் அவமானமாகும்? எங்கள் செல்வத்தை நாளும் நீங்கள் கொள்ளையடித்துக் கொண்டு செல்வதைக் கண்டு இனியும் அழுது கொண்டிருப்போமோ? நாங்கள் ஆண் பிள்ளைகள் அல்லவா? உயிர் எங்களுக்கு என்ன வெல்லமா?''

''நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச் சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ? இது
நீதமோ? பிடி வாதமோ!''

என்று வெள்ளையன் முன் வினாக்குறியானான்! இறுதியில் எச்சரிக்கையும் விடுத்தான். ''எங்கள் சதையைத் துண்டு துண்டாக வெட்டி, நாய்களுக்கும், கழுகுகளுக்கும், மற்றும் பொல்லா விலங்குகட்கும் இரையாக இட்டாலும்கூட எங்கள் உள்ளத்தே ஏற்பட்டுள்ள தீ—உரிமை வேட்கை—அதை அணைக்க உலகில் எந்தச் சக்தியாலும் முடியாது. இதை நீ உணரவேண்டும்'' என வீரமுழக்கம் செய்கிறான்.

''சதையைத் துண்டுதுண்
டாக்கினும் உன்எண்ணம்
சாயுமோ? ஜீவன் ஓயுமோ?
இதயத் துள்ளே இலங்கு
மஹாபக்தி
ஏகுமோ? நெஞ்சம் வேகுமோ?''

இவ்வாறெல்லாம் பாடி, மக்கள் உள்ளங்களிலெல்லாம் விடுதலை வேட்கையைத் தூண்டிவிட்டவர் பாரதியார். அவரையொத்த நல்லோரின் ஓயா உழைப்பால்தான் நாடு விடுதலை பெற்றது; நாமெல்லாம் ''ஆடுவோமே பள்ளுப்

பாடுவோமே—ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடு வோமே பள்ளுப் பாடுவோமே'' என ஆடிக் களித்திட முடிந்தது.

பாரதியார்க்கு முன்னர்த் தோன் றியவர்கள் அவரினும் கவினுற நாட் டின் வளத்தையும் எழிலையும் பாடி யிருக்கக்கூடும். ஆனால் நாட்டை ஓர் உணர்ச்சி ஊட்டும் சக்தியாகப் பாடியவர்கள் அவருக்குமுன் வேறு யாரும் இல்லை. ''எங்கள் தந்தையர் நாடெனும் போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'' என்று பாடி யவர் அவர். நாட்டுக்குக் கேடு விளைக் கும் எந்தச் செயலையும் பொறுக்காது பாரதியின் உள்ளம். நாட்டின் அடிமைத் தளையை அகற்றப் பாடு படாதவர்களை மனிதர்களாகவே எண்ணவில்லை அம்மாக் கவிஞன்.

''மொக்குள்தான் தோன்றி
முடிவது போல
மக்களாய்ப் பிறந்தோர்
மடிவது திண்ணம்!
தாய்த்திரு நாட்டைத்
தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பான்
வாழ்வுமோர் வாழ்வுகொல்?
தாய்பிறன் கைப்படச்
சகிப்பவ னாகி
நாயென வாழ்வோன்
நமரில் இங்குளனோ?''

இவை, சிவாஜி தன் படைவீரர் கட்குக் கூறுவன போன்று எழுதப் பட்டவையேயாயினும் உண்மையில் ஆங்கிலேயராட்சியில் அடங்கிக் கிடந்த நாட்டு மக்களைப் பார்துப் பாரதி விடுத்த வினாக்களேயாகும்.

நாட்டை ஆளுபவர்கள் நடுவு நிலைமை மாறி மக்களைக் கொடுமைப் படுத்தி அழிக்கத் தொடங்கினால் அவர்களே அழிவுறுவர் என்பதை ஆங்கிலேயர்க்கு எடுத்துக்கூறி எச்சரிக்கை செய்வனவாக அமைந் தன அவருடைய பாடல்கள். வெள்ளையராட்சியைச் சாடிய அவர், உலகின் வேறெந்தப் பகுதியில் மன்னராட்சி மறைந்த செய்தி கேட் டாலும் துள்ளிக் குதித்து மகிழ்ச்சிக் கூத்தாடும் நிலை எய்துவார்.

ருசியாவில் ஜார் மன்னனின் கொடுங்கோலாட்சி அழிந்ததைப் பாடியுள்ள வரிகளைப் படிக்கும்போது அவர் கைகொட்டி மகிழ்ச்சிக் கூத் தாடுவது போன்ற உணர்வு நமக்குத் தோன்றக் காணலாம்.

''இமயமலை வீழ்ந்ததுபோல்
வீழ்ந்து விட்டான்
ஜாரரசன் இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம்
பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று
சரிந்திட்டார்
புயற்காற்றுச் சூறை தன்னில்
திமுதிமுவென மரம்விழுந்து
காடெல்லாம்
விறகான செய்தி போலே!''

நாடு பிறருக்கு அடிமையாவதை எந்த நிலையிலும் சகிக்காதவர் அந் நற்கவிஞர். பாரதக் கதையின் ஒரு பகுதியான பாஞ்சாலி சபதத்தைப் பாடியுள்ளார் பாரதியார். தருமன் நாட்டைப் பணயம் வைத்துச் சூதா டும் இடத்தைப் பாடவேண்டும். அந் நிலையில் அவர் உள்ளம் துடிக்கிறது; கொதிக்கிறது! நாட்டைப் பணயம் வைப்பவன், ஆயிரங்களான நீதியை அறிந்த தருமனே ஆனாலும், அவன் செயல் மிகக் கொடுமையானதும் மிகக் கீழோரும் செய்ய அஞ்சத் தக் கதுமாகும் என்று கண்டிக்கிறார்.

''ஆயிரங்களான நீதி அவை
உணர்ந்த தருமன்
தேயம்வைத் திழந்தான் சிச்சீ!
சிறியர் செய்கை செய்தான்''

இதிகாசத் தலைவனாயினும், இச் செயல் அடுக்காது என்பதால் சிச்சீ! எனக் கூறிக் கண்டிக்கிறார் கவிஞர். இந்த இடத்தில் நாட்டு மக்களுக்கும் நாட்டை ஆளும் மன்னனுக்கு மிடையே இருக்கவேண்டிய உறவை மிக அழகுற விவரிக்கிறார். நாடு என்பது ஒரு கோவில் போன்றது; மக்கள் அங்குள்ள சிலைக்கு ஒப்பாவர்; அரசன் அச் சிலைக்குப் பூசை செய்யும் பூசாரி போன்றவன். கோவிலைத் தூய்மையாக வைத்திருத்தல், உரிய வேளைகளில் பூசை செய்தல், கோவி லுக்கு வருவோர் இறையை வழி படத் துணையாயிருத்தல் ஆகிய

வையே பூசாரியின் வேலைகள். அவற்றைவிடுத்து, 'இச்சிலைக்கு நான் தானே பூசை செய்கிறேன்; ஆகவே இது எனக்கே சொந்தம்' என்று கூறிச் சிலையை விற்பானேல் அவனை என்ன வென்று கொள்வது? வீட்டில் ஒரு காவல்காரன் உள்ளான். அவனுடைய வேலை என்ன? வீட்டையும், வீட்டில் உள்ளவர்களையும் பாதுகாக்கும் பொறுப்புமட்டுமே அவனுக்கு! அதை விடுத்து, 'இந்த வீட்டை நான் தானே காவல் காக்கிறேன். இது எனக்கே சொந்தம்' என்று விற்பானேல் அச் செய்கையை என்ன பெய ரிட்டழைப்பது? சிலையை விற்கும் பூசாரி, வீட்டை விற்கும் காவல் காரன் போன்றல்லவா தருமன் காணப்படுகிறான் என்று மனம் வெதும்பிப் பாடுகிறார்.

''கோயிற் பூசை செய்வோர் சிலை
யைக் கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன்
வீட்டை வைத்திழத்தல் போலும்
ஆயிரங்க ளான நீதி யவை
உணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான்; சிச்சீ!
சிறியர் செய்கை செய்தான்''

மக்கள் கோவிலில் உள்ள சிலை யானால், ஆள்வோர் அச் சிலையை வழிபட்டுப் பெருமை செய்யும் பூசாரிகள். பூசை செய்வோர் சிலை யிடம் எந்த அளவு மதிப்பும் பக்தி யும் கொண்டு புனிதமாக ஒழுகு வரோ, அதே போன்று ஆள்வோர் மக்களிடம் நடந்துகொள்ள வேண் டும். நாட்டு மக்களை வீடு என்று கொண்டால், ஆள்வோரை அவ் வீட்டைப் பாதுகாக்கும் காவலர் நிலையில் கொள்ளவேண்டும். மக்க ளாட்சிக்குப் பாரதி தந்த அருமை யான விளக்கம் இது.

மக்களாட்சிச் சிறப்புப் பெற்ற நாட்டில் ஒவ்வொருவரும் தத்தம் தாய்மொழியை உயிரினும் மேலாகப் போற்றிக் காக்கவேண்டும். மற்றை யோரைவிடத் தமிழர்கள் தம் தாய் மொழியை மிகப் பெருமையோடு பேசிக்கொள்ள இடமுண்டு; காரணம் தமிழ் மிகச் சிறந்த பண்பட்ட மொழி என்பதால். ''யாமறிந்த மொழி களிலே தமிழ் மொழிபோல் இனிதா வது எங்கும் காணோம்'' என்று பாசத் துடன் பாடுகிறார் பாரதியார். மிகச் சிறந்த மொழியைப் பெற்றிருந்தும் தமிழர்கள் இடைக் காலத்தில் பிற நாட்டவரிடம் அடிமைப்பட்டதால் தம்மை ஆண்டவர்களுடைய மொழி யைக் கற்பதில் நாட்டத்தைச் செலுத்தித் தம் தாய்மொழியின் பெருமையை மறப்பாராயினர். பாரதியின் பள்ளிக் காலத்தில் ஆங் கிலம் படிப்பதே சிறப்பு என்ற கருத்து நிலவியிருந்தது. ஊர் நடப் புக்கு உட்பட்டவர்தானே பாரதியின் தந்தையாரும்! அவர் தன் மகனைத் திருநெல்வேலி சென்று ஆங்கிலக் கல்வி கற்றுக்கொள்ளுமாறு கூறினார்:

''நெல்லையூர் சென்றவ் வூணர்
கலைத்திறன்
நேரு மாறெனை எந்தை பணித்
தனன்''

தன் 'சுயசரிதை'யில் இவ்வாறு கூறு கிறார் பாரதியார். தந்தையின் கூற்று அவரிடத்தில் எத்தகைய உணர்ச்சி களைத் தோற்றுவித்தது? அவரே கூறு கிறார், இரண்டு அழகிய எடுத்துக் காட்டுகளை. சிங்கக் குட்டி ஒன்று பசித் திருக்கிறது. அதன் முன்னே ஒருகட்டு அருகம்புல்லைக் கொண்டுவந்து போட்டு, 'சிங்கமே இது உனக்கு நல்ல உணவு, உண்பாயாக' என்று சொல் வதைப் போன்றிருந்ததாம் - இது முதல் எடுத்துக்காட்டு. பார்ப்பன குலத்திலே தோன்றிய ஒரு சிறுவன்; பத்தாவதுவரை படித்தான்; வேலை யில்லாமல் திண்டாடுகிறான். அவனைப் பார்த்த ஒருவர், 'தம்பி வேலையில்லா மல் திண்டாடுகிறாய்; பாவம்! நான் ஒரு கடை வைத்துத் தருகிறேன். வியாபாரம் செய்கிறாயா?' என்று கேட்கிறார். சிறுவனும் ஆர்வத்தோடு 'சரி' என்று சொல்ல, அவனைப் பார்த்து, 'கருவாட்டுக் கடை வைத் துத் தருகிறேன்! சரிதானே!' என்று கேட்பது எவ்வாறு இருக்குமோ அவ்வாறிருந்ததாம் பாரதியின் தந்தையார் அவரை ஆங்கிலம் படிக்குமாறு கூறியது-இது இரண்டா வது எடுத்துக்காட்டு. அவருடைய கூற்றிலேயே படியுங்கள்:

''புல்லை யுண்கென வாளரிச்
சேயினைப்
போக்கல் போலவும் ஊன்விலை
வாணிகம்

நல்ல தென்ஞெரு பார்ப்பனப்
பிள்ளையை
நாடு விப்பது போலவும், எந்தை
தான்
அல்லல் மிக்கதோர் மண்படு
கல்வியை
ஆரி யர்க்கிங் கருவருப் பாவதை

நரியு யிர்ச்சிறு சேவகர், தாதர்கள்
நாயெ னத்திரி யொற்றர்,
உணவினைப்
பெரிதெ னக்கொடு தம்முயிர்
விற்றிடும்
பேடி யர், பிறர்க் கிச்சகம்
பேசுவோர்,
கருது மிவ்வகை மாக்கள் பயின்
றிடுங்
கலைப யில்கென என்னை விடுத்
தனன்.
அருமை மிக்க மயிலைப் பிரிந்துமிவ்
அற்பர் கல்வியின் நெஞ்சுபொ
ருந்துமோ?''

பிறமொழியைக் கற்குமாறு வற்புறுத்திய செயல் பாரதியின் நெஞ்சில் ஏற்படுத்திய உணர்ச்சிகளின் வெடிப்பே இப் பாடல்கள்! அந்தப் பிறமொழியின்மீது பாரதிக்கு வெறுப்பா, காழ்ப்பா? என்றால் இல்லவே இல்லை! பின் ஏன் அந்தக் குமுறல்? அம் மொழியைப் பயிற்றுவிக்கும் பள்ளிக்குச் செல்லுபவர்கள் தம் நாட்டின் பெருமையை, தாய் மொழியின் உயர்வை உணரத் தவறி விடுகிறார்கள். அவர்கள்,

''சேரன் தம்பி சிலம்பை இசைத்
ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை
செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய
சோழர்கள்
பார ளித்ததும், தர்மம் வளர்த்
ததும்''

அறிய முடிவதே இல்லை. பிறமொழியின் மீது கொண்ட வெறுப்பினால் அல்ல! தன்னைத்தான் உணரவில்லையே என்ற கழிவிரக்கத்தினால் பாடிய பாடல்கள் இவை.

இதுமட்டுமா? இவ்வாறு பிறமொழியைப் பயிலப் பயில, தம் மொழியில் அனைத்தும் இருந்தும், தாம் படியாத, எண்ணாத காரணத்தினால், ஒன்றுமில்லை என்ற உணர்வை எய்தி விடுகிறார்கள். அப்படிப்பட்ட சிலரையும் பாரதி கண்டிருக்கிறார். அத்தகையோரைக் கண்டு, தமிழ்த் தாய் வருந்திக் கூறுவனவாக அவர் பாடும் பாடல்கள் கீழேயுள்ளவை:

''இன்ஞெரு சொல்லினைக் கேட்
டேன்-இனி
ஏது செய்வேன்? எனதாருயிர்
மக்காள்!
கொன்றிடல் போலொரு
வார்த்தை-இங்கு
கூறத் தகாதவன் கூறினன்
கண்டீர்!
சொல்லவும் கூடுவ தில்லை - அவை
சொல்லுந் திறமை தமிழ்மொ
ழிக் கில்லை!
மெல்லத் தமிழினிச் சாகும்-அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை
யோங்கும்;
என்றந்தப் பேதை உரைத்தான்
- ஆ
இந்த வசையெனக் கெய்திட
லாமோ?
சென்றிடு வீர்எட்டுத் திக்கும்
-கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்
திங்கு சேர்ப்பீர்!''

இத்தகைய பேதைகளைச் சாடி, மொழி உயர்வுக்குப் பாடுபட்ட பெருமை நோக்கி,பாரதியாரை, அவருடைய மாணுக்கருள் முதன்மை பெற்றுத் திகழ்ந்த பாவேந்தர் பாரதிதாசன், ''பைந்தமிழ்த் தேர்ப் பாகன்'' எனச் சிறப்பித்துக் கூறினர்.

அப் பைந்தமிழ்த் தேர்ப்பாகனுடைய பிறந்த நாளில், 'சென்றிடு வீர் எட்டுத் திக்கும்; கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!' என அவர் இட்ட கட்டளையை ஏற்று நிறைவேற்றுவோம் என்ற உறுதி பூணுவோமாக!

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின்மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன்கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் – கிராமத் தொழில்களை ஆதரிப்பது, உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண் பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை 'குறளகத்'தில் இயங்கும்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு:
கதர் - கிராமத் தொழில் துறை
2, சர் தேசிகாச்சாரி ரோடு
சென்னை-4



கிராமப் பொருளாதாரத்திற்குப் பனைத் தொழில்

கே. சம்பந்தம்
செயலர், சென்னை மாநில பனை வெல்லக் கூட்டுறவுப் பேரவை

[சென்ற இதழின் தொடர்ச்சி]

பதநீர் ஓய்ந்த காலங்களில் பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் மற்றத் துணைத் தொழில்களில் ஈடுபடுகின்றன. இந்தத் துணைத் தொழில்களும், பனையிலிருந்து கிடைக்கும் ஓலை, மட்டை, தும்பு போன்ற மூலப்பொருள்களை அடிப்படையாக வைத்தே நடைபெறுகின்றன. பனைத் தொழிலில் ஈடுபடாத ஏழைக் குடும்பங்களும், பனையிலிருந்து கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு வியாபாரத் தேவைக்குத் தக்கவாறு தும்பு சேகரித்தல், பாய் முடைதல், கருப்புக் கட்டிக் கொட்டான் தயாரித்தல், ஈர்க்கைச் சேகரித்துச் சுத்தம் செய்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

பனந்தும்பும் ஏற்றுமதியும்

பனந்தும்பு என்பது பனைமட்டையின் அடிப்பாகத்திலுள்ள கவட்டையான பாகத்தைத் தட்டி எடுக்கப்படுவது. இது இரும்புக் கம்பிகள் போன்றதும், வளைந்து நிமிரக்கூடியதுமான ஒரு பொருள். இதைச் சுத்தம் செய்து தூத்துக்குடித் துறைமுகத்தின் மூலம் உலக நாடுகள் முழுவதுக்கும் ஏற்றுமதி செய்கிறோம். ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணியை இதன்மூலம் சம்பாதிக்கிறோம். நற்காலமாக இந்தத் தொழில், நகரங்களில் நடத்த முடியாமற் போயிற்று. கிராமங்களில் தான் நடத்தமுடியும். கடந்த நூறு ஆண்டுக் காலமாய் பனம்பத்தலை அடித்துத் தும்பெடுத்துச் சுத்தம் செய்து ஏற்றுமதி செய்வதில் தமிழகம் முன்னணியில் நிற்பது உலகம் அறிந்ததாகும்.

இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படும் தும்பு, உலகம் முழுவதும் சென்று பிரஷ், துடைப்பம், இயந்திரங்கள் சுத்தம் செய்யும் கருவிகள் முதலியன செய்வதற்கு உபயோகப்படுத்தப் படுகிறது.

எத்தனையோ வகைச் செயற்கைத் தும்புகள் செய்தாலும் பனந்தும்பிற்கு ஈடில்லை என்று அயல்நாட்டினர் கண்டு காட்டியுள்ளனர்.

இந்தத் தும்பு சேகரித்தலும் சுத்தம் செய்தலும் தமிழகக் கிராமப் பொருளாதாரத்தில் நல்லதோர் அங்கம் வகிக்கிறது. இளம் மரங்களிலிருந்து (வடலி) கறுப்புத் தும்பும் முற்றிய மரங்களிலிருந்து வெள்ளைத் தும்பும் கிடைக்கிறது. வெள்ளைத் தும்பைக் காட்டிலும் கறுப்புத் தும்பிற்கு விலை அதிகம்.

தமிழகத்தில் சுமார் 20 ஆயிரம் குடும்பங்களுக்குமேல் தும்பு சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளன. தும்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு குடும்பத்தின் வருமானத்தைப் பார்ப்போம்.

வேலை செய்யும் நாட்கள்	6	பணியில் ஈடுபடுவோர்		
விற்பனை செய்யச் சந்தைக்கு வரும் நாள்	1	ஆண்	1	
		பெண்	1	
மொத்த நாட்கள்	7		2	

			செலவு
			ரூ.
1.	6 நாட்களுக்குத் தேவையான பத்தல், தினம் 250 வீதம் 1,500 பத்தல் சேகரிக்க, மர வாடகை 100க்கு ரூ. 1·00 வீதம்	...	15·00
2.	சுமை கூலி	...	5·00
3.	கொட்டாப்புளி, அடைகல், சுப்பு இவற்றின் தேய்மானம்	...	0·30
4.	இதரச் செலவு	...	0·25
	மொத்தச் செலவு		20·55

			வரவு
1.	1,500 பத்தலிலிருந்து கிடைக்கும் கோராத் தும்பின் எடை 75 கிலோ. இதன் மதிப்பு கிலோ 80 பை. வீதம்	...	60·00
2.	சந்தையில் செலுத்தவேண்டிய வரி	...	0·50
			59·50

செலவு நீக்கி ரூ. 59·50 — ரூ. 20·55 — 38·95

7 நாட்கள் செய்த வேலைக்கு வருமானம் 38·95

1 நாளைய வருமானம் 5·56

ஆண் வருமானம் ரூ. 3·50

பெண் வருமானம் ரூ. 2·00

இந்தத் தொழிலைப் பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் 6 மாதங்கள் மட்டுமே செய்கின்றன. மற்றவர்கள் ஆண்டு முழுவதும் செய்கின்றனர். இத்தொழிலில் அரிசனங்களும், வாழ்க்கைத் தரத்தில் பின்னணியில் நிற்போர்கள் எல்லோரும் சேர்ந்தே செய்கின்றனர்.

இந்த வருமானம் கிடைத்திருக்காவிட்டால் இந்தத் தொழிலை மேற்கொள்ள ஒருவரும் முன்வந்திருக்க மாட்டார்கள்; தொழில் 100 ஆண்டுகளாக நடந்து வந்திருக்க முடியாது. எனவே தும்பைச் சேகரிப்பதில் கிராமத்திற்குப் பணம் வந்து சேருகிறது. மேலும் இந்தத் தொழிலுக்கு 'மேற் செலவு' (Overhead Charges) எதுவும் இல்லை.

தும்பைச் சுத்தம் செய்தல்

தமிழகமெங்கும் தயாரிக்கப்படும் கோராத் தும்பைச் சுத்தம் செய்வதில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ஈடுபட்டிருக்கின்றன. இத்தொழிலும் கிராமத்தில்தான் நடைபெறுகின்றது. சந்தையில் கொள்முதல்செய்யப்பட்ட தும்பை வியாபாரிகள் சில முக்கியக் கிராமங்களுக்குக் கொண்டு வருகின்றனர். நூற்றுக்கணக்கான குடும்பங்களை வைத்து இதைச் (கோரா தும்பை) சுத்தம் செய்கின்றனர். இந்தக் குடும்பங்களும் தினம் ஒன்றுக்கு ஆறு ரூபாய் முதல் ஏழு ரூபாய் வரை வருமானம் பெறுகின்றன. 1 அந்தர் சுத்தம் செய்ய 14 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. 1 ஆணும் பெண்ணும் 2 நாட்களில் 1 அந்தர்

சுத்தம் செய்கிறார்கள். எனவே தும்பு சுத்தம் செய்வதிலும் கிராம மக்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கிறது.

அரசினர் சலுகையும் அதிக வருமானமும்

1964-65இல் மத்திய அரசிலிருந்து ஏராளமான பணம் பெற்றுக் கூட்டுறவு அடிப்படையில் இத் தொழிலை அபிவிருத்தி செய்து வருகிறது. அரசினர் அக்கறைகாட்ட முன்வந்தவுடன் இத் தொழிலினால் கிராம மக்கள் அதிக ஊதியம் பெறுகின்றனர். தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட உதவிகளைச் செய்து வருகிறது.

1. தும்புத் தொழில் உற்பத்தியாளர்களுக்குத் தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துத் தந்துள்ளது.

2. தமிழகத்திலுள்ள பனைத் தொழிற் சங்கங்கள் இத் தொழிலை மேற்கொள்ள மூலதனக் கடனாக சுமார் 15 இலட்ச ரூபாய் வழங்கியிருக்கிறது.

3. தும்பைச் சேகரித்து வைக்கக் கிட்டங்கிகள் கட்டித் தந்துள்ளது.

4. இந்தத் தொழில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிராம மக்களுக்குத்தான் முதலில் தெரிந்திருந்தது. அந்த வல்லுநர்களை மற்ற மாவட்டங்களுக்கு அனுப்பி 200 கிராமங்களில் தும்பு சுத்தம் செய்யும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 3000 குடும்பங்கள் இந்தச் சிறப்புப் பயிற்சியைப் பெற்றுள்ளன. ஆண்டுதோறும் புதுப்புதுப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் 15 பயிற்சியாளர்கள் 2 மாதங்கள் பயிற்சி பெறுகின்றனர். இவர்கள் பயிற்சிக் காலத்தில் தலா 30 ரூபாய் உபகாரச் சம்பளம் பெறுகின்றனர்.

5. வெல்ல வியாபாரம் முடிந்தவுடன் தும்பை ஏற்றிச் செல்லவும் கொள்முதலுக்கு வசதி செய்யவும் ஆறுமாவட்டக் கூட்டுறவுச் சம்மேளனங்களுக்கு 'லாரிகள்' வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

6. தலைமைக் கூட்டுறவுப் பேரமைப்பான சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்திற்கு இதுவரை 30 இலட்ச ரூபாய் கடனாகக் கொடுத்து இதன் ஏற்றுமதியை நேரடியாகச் செய்ய ஏற்பாடு செய்துள்ளனர். இந்தச் சம்மேளனம், கடந்த 100 ஆண்டுகளாகத் தும்பு ஏற்றுமதியில் ஈடுபட்டிருந்த 'ஆஸ்பின்வால்' என்ற ஏற்றுமதி நிறுவனத்தைக் குளச்சல் என்னுமிடத்தில் ரூ. $3\frac{1}{2}$ இலட்சத்திற்கு வாங்கித் தும்பு ஏற்றுமதி செய்து வருகிறது.

7. இந்தத் தும்பின் உபயோகத்தையும் அதன் தொழில் நுணுக்கத்தையும் பொதுமக்களிடையே பரப்ப அரசு ரூ. 25,000 செலவில் ஒரு திரைப்படம் எடுத்துள்ளது.

8. அயல்நாடுகளுக்கு மட்டும் தும்பை ஏற்றுமதி செய்யாமல், உள்நாட்டிலேயே 'பிரஷ்' வகைகள் செய்வதற்கு நவீன பிரஷ் இயந்திரங்கள் வாங்க ரூ.40,000த்தை அரசு மானியமாக வழங்கியுள்ளது.

9. அயல்நாடுகளில் தும்பு வியாபாரத்தைப்பற்றி அறிவதற்கு ரூ. 20,000 வரை மானியம் தந்துள்ளது. மேலும் தும்புத் தொழிலை அபிவிருத்தி செய்யவும் தும்புக் கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்க்கவும் அரசாங்க ஊழியர்களைக் கூட்டுறவுச் சம்மேளனத்திற்குக் கொடுத்துள்ளது.

10. மாநிலப் பேரமைப்பின்மூலம் இந்தத் தும்பு ஏற்றுமதியை அதிகரிக்கவும், தொழில் நுணுக்கங்களை அதிகரிக்கவும், தும்புத் தொழில் நிபுணரான ஓர் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியைத் தந்துள்ளது.

கிராம மக்கள் பெறும் நன்மைகள்

1. தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வருமுன் குறிப்பிட்ட வியாபாரிகள் கிராமங்களில் தும்பைக் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்து வந்தார்கள். அப்பொழுது 1 கிலோ கோராத் தும்பைக் கிராமவாசிகள் 40இலிருந்து 50 பை. வரை தான் விற்று வந்தனர். இப்பொழுது 1 கிலோ தும்பை 80 பை. இலிருந்து ரூ. 1 வரை விற்றுக் கிராமவாசிகள் அதிகமான ஊதியம் பெறுகிறார்கள். இதைக் கிராமவாசிகள் ஒரு பெறலரும் பேறாகக் கருதுகிறார்கள்.

2. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தும்பைக் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்வதால் நியாயமான விலை கிடைக்கிறது. எடையில் ஏமாற்றம் இல்லை. சந்தைக்குச் சுமந்து சென்று குறைந்த விலைக்கு விற்க வேண்டிய அவசியமில்லை.

3. ஆரம்பத்தில் கொள்முதல் செய்யப்பட்ட கோராத் தும்பின் பெரும்பகுதி குளச்சல் என்னும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஏனென்றால் இதைச் சுத்தம் செய்யும் கைதேர்ந்த நிபுணர்கள் மற்றக் கிராமங்களில் இல்லாமல் இருந்தனர். அதனால் ஏற்றுமதியும் குறைந்து வந்தது. இப்பொழுது தும்பைச் சுத்தம் செய்யும் தொழில் நுணுக்கம் கிராமங்களில் பரப்பப்படுவதால் கோராத் தும்பு கிராமங்களிலேயே சுத்தம் செய்யப்பட்டு ஏற்றுமதிக்கு இலாயக்கான நிலையில் துறைமுகங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகிறது.

4. 1 அந்தர் சுத்தம் செய்யக் கிடைக்கும் 14 ரூபாய்க் கூலியும் இப்பொழுது அந்தந்தக் கிராம மக்களுக்கே கிடைக்கிறது. தும்பு உற்பத்தியாளர்களின் வருமானம் உயருகிறது.

5. நல்ல தரம் உள்ள தும்பைத் தயாரிப்பதில் கிராம மக்கள் பேரார்வம் காட்டுகின்றனர். அதற்கேற்ற அதிக வருமானமும் பெறுகின்றனர்.

6. தும்பைச் சுத்தம் செய்யும் பயிற்சி பெற்றுள்ளதால் ஆண்டு முழுவதும் இடைவிடாமல் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர்.

அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க:

பயிர்நாசக் கிருமிகளினின்றும் பயிர்களைக் காப்பாற்ற:

பூச்சி மருந்து தெளிக்கவும் தூவவும்,

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)

தூவு கருவிகளும் (Dusters)

மிகச் சிறந்த சாதனங்கள்.



CODE MB-1/VL

தயாரிப்பவர்கள்:

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,

மலாட், பம்பாய் 64 N.B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள்:

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்:
தொலைபேசி எண் 75071
75, கலாசிபாளையம்
தபால் பெட்டி எண் 539
நியூ எக்ஸ்டென்ஷன்ஸ் பெங்களூர்-2

கிளை அலுவலகம்:
தொலைபேசி எண் 81227
38, பீட்டர்ஸ் ரோட்
தபால் பெட்டி எண் 677
இராயப்பேட்டை, சென்னை-14

நிறைந்த மகசூல் பெற வீரியவிதைகள், ரசாயன உரங்கள், பூச்சி மருந்து ஆகிய நவீன முறைகளை ஏற்கனவே உபயோகித்து வருகிறீர்கள்.

இப்போது கிருஷி இயந்திரக்கலப்பை

உபயோகித்து விவசாயத்தை மேலும் லாபகரமானதாகச் செய்யுங்கள்



கிருஷி இயந்திரக் கலப்பை உபயோகிக்க இலகுவானது. கடின உழைப்புக்கு ஈடு கொடுக்க வல்லது. நீடித்து உழைக்கவல்லது. உயரிய நான்கு ஜதை எருதுகள் செய்யக்கூடிய வேலையை அதனினும் குறைவான செலவில், விரைவாகவும் ஆற்றவல்லது. 5HP டீஸல் என்ஜினால் இயங்கும் இந்த இயந்திரக்கலப்பைக்கு மணிக்கு 35 பைசா மதிப்புள்ள டீஸல் எண்ணையே தேவைப்படுகிறது. (மூன்று மணி நேரத்திற்குள் ஒரு ஏக்கர் நிலத்தை உழுது பண்படுத்தலாம்)

பலவிதத்தில் பயனளிக்கவல்லது கிருஷி

சுலபமாக இயங்கவல்ல கிருஷிடீஸல் இயந்திரக் கலப்பை நஞ்சை, புஞ்சை, விவசாயத்திற்கு மிகவும் ஏற்றது. உங்கள் நிலத்தில் உபயோகிப்பது மட்டுமின்றி பிறருக்கும் வாடகைக்கு விடுவதன் மூலம் அதனை முழுமையாக பயன்படுத்தலாம்.

நிலத்தை உழுது பண்படுத்தும் வேலைக்கு மட்டுமின்றி, கிருஷி டீஸல் இயந்திரத்திற்கு தகுந்த உபகரணங்களைப் பொருத்தி, விதையிடுதல், நீர் இறைத்தல், பூச்சிமருந்து தெளித்தல், உரமிடுதல், கதிர் அடித்தல், நெல்குத்துதல், போக்குவரத்து போன்ற பல விவசாயப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம்.

கிருஷி இயந்திரம் எவ்வளவு லாபகரமாக பணியாற்றவல்லது என்பதுபற்றி மேலும் விவரங்கள் அறிய எங்களுக்கு எழுதுங்கள்.

கிருஷி உங்கள் விவசாய உழைப்பு, நேரம், செலவு ஆகியவற்றைக் கணிசமாகக் குறைக்கிறது

தயாரிப்போர்: கிருஷி என்ஜின்ஸ் பிரைவேட் லிமிடெட்
ஹைதராபாத்-18 (A.P.)
பூரண விற்பனையாளர்கள்: கிருஷி சேல்ஸ் & சர்வீஸ்.
ராஷ்டிரபதி ரோடு, செகந்திராபாத் (A.P.)

Krishi

KEP-5243A

பயிர்களுக்கு சிறந்த அடி உரம்

பாக்டம்பாஸ்

முக்கிய தாவர உணவுகளான தழைச் சத்தையும், மணிச்சத்தையும் ஒருங்கே கொண்ட அதிசயக்கூட்டு உரம் பாக்டம்பாஸ் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்ற உரம். நிலத்தில் இட்டவுடனே இவ்வுரம் முழுவதும் தண்ணீரில் கரைபடும் தன்மை உடையதால் பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை பாக்டம்பாஸ் உடனடியாகக் கொடுக்கிறது. பாக்டம்பாஸ் பயிர்களை நல்ல பசுமையுடன் வளரச் செய்கிறது... மகசூலை அதிகப் படுத்துகிறது.

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைசர்ஸ் அண்டு கெமிகல்ஸ்
திருவாங்கூர் லிமிடெட்
உத்யோகமண்டல், கேரளா

பிராந்திய அலுவலகம் : 2-வது மாடி,
19, கமாண்டர்-இன்-சீப்-ரோடு,
சென்னை-8.

உரத்தின் தரத்திற்கு உத்திரவாதம் யானை மார்க்



Criterion FT 2203 TM

தொடர் கதை

6. வினையால் வினையாக்கிக் கோடல்

குழந்தைவேலர் புகை வண்டியில் ஏறினார். அவருடைய உள்ளத்தில் உவகை பொங்கியிருந்தது. ஆனால் அது நிலைத்து நிற்கவில்லை. கடலூர் வந்து இறங்கியவுடன் அவர் மனம் ஊசலாடியது; எதையோ தீவிரமாக எண்ணினார்; தீவிரமான முடிவுக்கும் வந்தார்; பின்னர் அம்முடிவின் மீது மறு ஆய்வு செய்தார்; மனம் குழப்ப மடைந்தது.

''கமலம்!'' என்று அழைத்துக் கொண்டே வீட்டில் நுழைந்தார்.

''வாங்க'', என்று இன்முகம் காட்டி ஒரு குவளையில் அந்த அம்மையார் தண்ணீரைக் கொடுத்தார். அவர் ஊஞ்சலில் உட்கார்ந்து இலேசாக ஆடிக் கொண்டிருந்தார். கமலம் அவர் முகத்தைப் பார்த்து ஓரத்துத் தூணில் தன் உடலை மறைத்துக் கொண்டே கேட்டாள்:

''என்னங்க! மலர் நலமா?''

''ஓ! நலமாக இருக்கிறாள். அவளைப் பார்த்தேன். பணத்தையும் கொடுத்தேன். வேணுவின் வீட்டுக்கும் போயிருந்தேன். அவர்கள் வீட்டிலும் எல்லோரும் நலம். உன்னையும் விசாரித்தார்கள்.''

''அவுங்க பிள்ளை நலமா?''

''எல்லோருமே நலம் தான். அவர்களுக்கு என்ன குறைச்சல்?''

''ஏங்க! நமக்குமட்டும் என்ன குறைவு? நிலம் இருக்கிறது. சோற்றுக்குப் பஞ்சமில்லை. பணம் இருக்கிறது. நமக்கு ஒரே ஒரு பொண்ணு. அதை வைத்துக்கொண்டு நாம் எதற்காகக் கவலைப்படவேணும்? ஏங்க! மலரு என்னை விசாரிச்சாளா?''

''ஓ! என்னை மறந்தாலும் அவள் உன்னை மறப்பாளா? அம்மா நலமா? அம்மா நலமா? என்று பத்துத் தடவை கேட்டாளே''

''ஆமாங்க. என் மேலே அவளுக்கு உயிருங்க.''

''என்ன கமலம், பிள்ளைமீது அம்மாவுக்கும், அம்மா மீது பிள்ளைக்கும் பாசம் இருப்பது இயற்கை தானே.''

''அது சரிங்க. ஒரு முக்கியமான செய்தி; காலையில் அண்ணார் வந்தார். இங்கு இருந்துவிட்டுக் கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் போனார். உங்களைப் பார்க்கணும்னு மிகவும் ஆவலாக இருந்தார்.''

''என்ன செய்தி?''

''இறைவை இயந்திரம் வாங்க இந்த ஊருக்கு வந்திருந்தார். வாங்கி விட்டு உங்களிடம் ஏதோ பேச வேண்டும் என்று வெகு நேரம் காத்திருந்தார். நேரமாகி விட்டதால் ஊருக்குப் புறப்பட்டுவிட்டார்.''

''ஏதாவது உன்னிடம் சொல்லியிருப்பாரே.''

''சொன்னாருங்க. மூர்த்திக்கு இந்த மாதத்திலேயே திருமணத்தை முடித்துவிட வேண்டுமென்று சொன்னார். ஏங்க... மூர்த்தி ரொம்ப நல்ல பிள்ளைங்க... அண்ணனுக்கு ஒரே பிள்ளைதானுங்களே. குடும்ப வேலை முழுவதும் அதுதான் பார்த்துக்கிதுங்க. முன்னே மாதிரி இல்லைங்க. மன்மதன் மாதிரி இருக்குங்க. மூர்த்தி அம்மா இராசாத்திகூட இங்க வருதுங்க.''

''இருக்கட்டும்! இருக்கட்டும்! ஒரு கடிதம் அவசரமா எழுதவேணும். அப்புறம் சாவகாசமாப் பேசலாம்.''

''என்னங்க. மூர்த்தி பேச்சை எடுத்தா, எப்போதும் பாக்கு வெட்டுவதுபோல் நறுக் என்று முடித்துவிடுகிறீர்கள்.''

மறுநாள் இராசாத்தி வந்தாள். தன் மகன் மூர்த்திக்கு மலர்க்கொடியைத் திருமணம் செய்து வைக்கவேண்டுமென்று கேட்டாள். குழந்தைவேலர் ஆத்திரப்பட்டார். ''சிறு வயதிலிருந்தே இதுதான் பெண்; இதுதான் மாப்பிள்ளை என்று பெண்ணின் தாயார் கமலமும், மூர்த்தியின் தாய் இராசாத்தியும் நிச்சயம் செய்து கொண்டது என்னவோ உண்மைதான். உறவு வளர வேண்டும் என்ற பாசத்தின் அடிப்படையில் அவர்கள் அன்று தங்கள் எண்ணத்தை அமைத்துக் கொண்டது முறை என்பதாகவே வைத்துக் கொள்வோம். அப்போதுகூட மூர்த்தியின் தந்தையார் ''மைத்துனர்! மலர் எங்கள் மூர்த்திக்குத் தான்'' என்று சொன்னார். நானும் ''அதற்கென்ன மைத்துனரே உங்கள் தங்கை மகள், மூர்த்திக்கு என்று இல்லாமலா போய்விடும்'' என்று அன்று எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டதும் உண்மைதான். அதிலே உறவுக்குரிய பிடிப்பும் இருந்தது; நியாயமும் இருந்தது. ஆனால் அவர்களுடைய எதிர்காலம் இப்படி அமையும் என்று யாரும் எதிர்பார்க்கவே இல்லையே! நாட்டின் நடப்பை வைத்து அன்று பேசிக் கொண்டோம். பையன், படித்து வருவான். பெண்ணைவிட ஒரு படி கூடுதலாகவே எல்லாவற்றிலும் இருப்பான் என்றுதான் எல்லாரும் எதிர்பார்ப்பார்கள். இன்று மூர்த்திக்கோ இலட்சக் கணக்கில் செல்வம் இருக்கிறது. ஆனால் அவன் இப்போது படிப்பில் அடித்தளத்திலே இருக்கிறானே! பத்தாவதுகூடப் படிக்கவில்லை. அவளோ கோபுரத்தின் உச்சியிலே இருக்கிறாள். அவள் அறிவிலே உயர்ந்து நிற்கிறாள். அவனுக்கோ படிப்புதான் இல்லையென்றாலும் அறிவுதான் வளர்ந்திருக்கிறதா? தாயிடம் செல்லம். தந்தை மீது எகிறி விழுகிறான். 'ஒரே பிள்ளை; ஒரே பிள்ளை' என்று அளவுக்கு அதிகமாகச் செல்லம் கொடுத்து வளர்த்த பிள்ளை இன்று எப்படியிருக்கிறான்? கமலம் சொல்வதுபோல நன்றாக வளர்ந்து விட்டிருக்கிறான். அழகாகத்தான் இருக்கிறான். அவளுடைய கோலத்தில் அவன் சிறந்தவனாக இருக்கிறான். அவள் உறவின் அடிப்படையில் முழுக்க முழுக்க உணர்வு கொண்டு முடிவு கொண்டிருக்கிறாள். ஆனால் அறிவுகொண்டு சிந்திக்கவில்லை. அவளுக்குத் தெரிவதெல்லாம், உறவு - ஒரே பிள்ளை - பல இலட்சக்கணக்கான சொத்துக்கள் அவ்வளவுதான்!

வாழ்க்கை என்பது ஆயிரம் காலப் பயிர். அந்த ஆயிரம் கால வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் கமலம்கூடச் சிந்தித்துப் பார்க்க மாட்டேன் என்கிறாளே!

பார்வைக்கு மூர்த்தி நல்லவனைப் போலத்தான் இருக்கிறான். அவன் நெஞ்சிலே எதைப்பற்றியும் கவலை இல்லாதவனாக இருக்கிறானே. எதை மறைக்கவேண்டும், எதைச் சொல்ல வேண்டும் என்று பகுத்துரைக்கக் கூடிய சக்தி அவனிடம் இருக்கிறதா? ஏதாக இருந்தாலும் ஊரில் தம் பட்டம் அடித்துச் சொல்லி வருபவன் ஆயிற்றே. மலர்க் கொடிதான் என் மனைவி என்று ஊர் பூராவும் இதற்குள் தம்பட்டம் அடித்து விட்டானே.

''மாமாவின் சம்மதம் எதற்கு? அவரிடம் என்ன கேட்பது? எதற்குச் சொல்வது? அவள் படிப்பு முடிந்தவுடன் கழுத்தில் தாலி கட்டி இழுத்துக் கொண்டு வந்துவிடுகிறேன் பார்.'' என்றல்லவா சொல்லிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு இதற்கெல்லாம் துணை அவன் தாய் தந்தையர். இந்த வீட்டிலும் என் மனைவி.

மலர்க்கொடியின் எதிர்காலத்தை நிச்சயிப்பதில் எனக்கு எத்தனை உரிமை இருக்கிறதோ அந்த அளவு கமலத்துக்கும் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். கமலத்துக்கு மட்டுமல்ல. கமலத்தின் அண்ணனும் என் மைத்துனருமாகிய சண்முகத்துக்கும் அவர் மனைவி இராசாத்திக்கும் உரிமையுண்டு. அதை அவர்களாகவே எடுத்துக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். ஆனல் அதைவிட உரிமையும் பங்கும் நான் அதிகமாகவே எடுத்துக்கொண்டால் தான் மலர்க்கொடியின் வாழ்க்கை வெற்றிகரமாக இருக்கும். அவளுடைய இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக இருக்கும். அதன் பண்பையும் பயனையும் அவள் பெறுவாள். அந்த அறநெறியில் அவளுக்கு இல்வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து அவளை வாழ்வாங்கு வாழவைப்பதுதான் என் இலட்சியம்.

அத்துடன் மூர்த்தியின் குடும்பத்தையும் காக்கவேண்டியது என் பொறுப்பு. அதை அவர்கள் தடுத்தாலும், உறவே இல்லை என்று ஒதுக்கினலும் அவனையும் அறநெறியில் ஒழுகச் செய்வேன்'' என்று எண்ணி முடிவு கொண்டார் குழந்தை வேலர்.

''இது வரையில் என் மனைவியின் மனம் கோணமல் ஒத்த கருத்தோடு தான் நானும் இயங்கி வந்தேன். இன்று என் மனைவியின் எண்ணத்தை மாற்றவேண்டுமே! அதற்காக உறவின்மீது கொண்டிருக்கும் பிணைப்பை விலக்கமுடியாது; விலக்கவும் கூடாது. ஆனல் மூர்த்தியின் செல்வத்திலும் அழகிலும் அவள் கொண்டிருக்கும் உணர்வை நிச்சயம் மாற்றத்தான் வேண்டும்'' என்று எண்ணியவாறு பேனவைக் கையில் வைத்துக்கொண்டு யாருக்குக் கடிதம் எழுதவேண்டுமென்று எண்ணினரோ, எந்தச் செயலின் மீது தன் முடிவை அறிவிக்கலாம் என்று நினைத்தாரோ, அந்த எண்ணத்தையும் முடிவையும் அப்போது எழுத்தாக வரிவடிவம் கொடுக்கமுடியாமல் எடுத்துவைத்த தாளை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். ஒரு வழியும் அறியாது குழப்பத்தில் இருந்தார். இராசம்மாளிடம் திருமணம் சம்பந்தமாக இன்னும் மூன்று மாதங்களுக்குமேல்தான் முடிவு சொல்லமுடியும் என்று கண்டித்து அனுப்பிவிட்டார்.

''என்னங்க'' என்ற மனைவியின் குரல் அவரைச் சிந்தனையிலிருந்து விடுவித்தது.

''என்ன கமலம்'' என்று மிக்கப் பரிவோடு கேட்டார் குழந்தை வேலர்.

''கடிதம் எழுதணும்னு உட்கார்ந்தீங்க. பேனவையும் தாளையும் வைத்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்திருக்கிறீர்களே'' என்று சொல்லி அவளும் வியந்தாள். ''இதற்கு முன்பு அவர் இவ்வளவு கவலையோடு எதையும் சிந்தித்ததில்லையே'' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள்.

''என்னங்க இப்படி. மலருக்குத் தானே! நானே எழுதுகிறேன். இப்படிக் கொடுங்கள். அவளை வரச் சொல்லி எழுதப்போகிறேன்'' என்று அவசரப்பட்டாள்.

குழந்தைவேலர், முதலில் அவள் மலருக்குக் கடிதம் எழுதுவதையும், அவளை வரச்சொல்லி எழுதுவதையும் தடுத்துவிடவேண்டுமென்று எண்ணி, ''இதோ பார் கமலம்! அவளுக்கு நீ கடிதம் எழுதக்கூடாது'' என்று சொல்வதற்குத்தான் வாயை எடுத்தார். ஆனல் அடுத்த கணம், தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். அவள் போக்கிலேயே அவளை வீட்டுத்தான் தன் முடிவுக்கு அவளை இழுத்து வரவேண்டும் என்று உறுதி கொண்டார்.

''கமலம் இப்படி வா. என் எதிரே உட்கார்.''

''என்ன கமலம். நமக்கு வயதாகி விட்டாலும், நாம் இன்றும் இளமையோடு இருப்பதைப்போல்தான் உணர்கிறோம். என் மனம் இன்றும் இளமையாகவே இருக்கிறது. அதைப் போல்தான் உன் மனமும்! உட்கார்'' என்று சொன்னர். அவள், நாணிக் கோணிக்கொண்டு, புதுப்பெண் போல அவர் எதிரில் இருந்த சோபாவில் உட்கார்ந்தாள். மேசையின்மீது வைத்திருந்த காகிதத்தை அவள் பக்கம் தள்ளி வைத்தார். தன் கையி

லிருந்த பேனவை அவள் கையில் திணித்தார். அப்போது இருவருடைய உள்ளங்களுமே ஒருமனப்பட்டுச் சிரித்தன. புதுப்பொலிவு உதயமானது.

"கமலம்; எழுது." சிரித்துக்கொண்டே அவள் முகத்தை நோக்கினர். அவள் அவரைப்போல் வாய்விட்டுச் சிரிக்கவில்லை. சற்றுத் தலையைத் தாழ்த்தி எழுந்த சிரிப்பை அடக்கிக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிக்காட்டினுள். இதைப் பார்ப்பதில் அவருக்குப் பேரானந்தம். அவள் கரத்தைக் கண்ணுற்ருர். பேன பிடித்த கை ஆடாமல் அசையாமல் அப்படியே மேசையின்மீது படிந்திருந்தது. அவள் சற்றுத் தலையைத் தூக்கினுள். கடைக்கண்ணல் பார்த்துச் சிரித்தாள். அவள் கண்களில் மிரட்சி காணப்பட்டது.

"என்னங்க?"

"என்ன கமலம்?

"என்ன எழுதுறதுங்க?"

அக்கணமே தனக்கு வெற்றி கிடைத்துவிட்டதாக எண்ணினர் குழந்தைவேலர். அவருடைய உணர்வு, மெய்யுணர்வாக இருந்தது. "மலருக்கு நான் கடிதம் எழுதுகிறேன் என்றதும், அவளே வரச் சொல்லி எழுதப்போகிறேன்" என்ற அவசரமும் படபடப்பும் இப்போது எங்கே போயிற்று என்று வியந்த வண்ணம், "கமலம் நீ தானே எழுதப் போறே, மலருக்குத்தானே. உன் பிரியப்படி மனதில் பட்டதை எதை வேண்டுமானலும் எழுது. அதைத் தடுப்பதற்கு நான் யார்?" என்ருர் மிக்கப் பரிவோடு.

"என்னங்க?"

"அந்த உரிமை கூடவா உனக்குக் கிடையாது. பெற்று வளர்த்து, அவளை ஆளாக்கியவள் நீதானே? அவளுக்கு நீ எழுதுவதை நான் தடுத்தால், அது நியாயமாகாது" என்று சொன்னர்.

வாஞ்சையோடும் மிக்கப் பரிவோடும் அவரை ஒருமுறை பார்த்துக் கொண்டாள். இலேசாகச் சிரித்து முகத்தைக் கவிழ்த்துக்கொண்டாள். கடிதத்தை வேகமாக எழுதி முடித்தாள்,

"என்னங்க?"

"இந்தா உறை. இதில்போட்டு நீயே ஒட்டு."

"நான் என்ன எழுதியிருக்கிறேன் என்பதை நீங்கள் பார்க்கவேண்டாமா. என்னங்க!"

"கமலம் நீ எதை எழுதியிருந்தாலும் சரி. அது நான் எழுதியமாதிரி தான். இந்தா இதை ஒட்டு" என்று கடிதத்தைப் படித்துப் பார்க்காமல் மடித்து உறைக்குள் வைத்துக் கொடுத்தார். அப்போது அவளுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

"கடிதத்தைப் பக்கத்துவீட்டுச் சுந்தரத்திடம் கொடுத்து நீயே அஞ்சலில் சேர்க்கச் சொல்லிவிடு" என்ருர்.

கடிதம் பெட்டியில் சேர்ந்துவிட்டது.

கவனியுங்கள்

'சீரணி' இதழுக்குச் சந்தா அனுப்புகிறவர்கள் தங்கள் பெயருடன் முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளுகிருேம்.

குறிப்பாக, கிராமப் பகுதிகளிலிருந்து சந்தா அனுப்புகிறவர்கள் ஊர், அஞ்சல் நிலையம், வட்டம், மாவட்டம் முதலியவைகளைத் தெளிவாக எழுதவும்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் இதில் கவனம் செலுத்த வேண்டுகிருேம்.

நெஞ்சுறுதி

தில்லை வில்லாளன் M.A., B.L., M.P.

தமிழ் இனத்தின் இரண்டு உயிர்ப் பண்புகள், காதல்-வீரம். இப் பண்பு விளக்கங்களை அகம், புறம் எனப் பிரித்து அறிகிறோம்.

நம் பண்டைய வரலாறு, தமிழ் நிலம் வீரத்தின் விளைநிலமாக இருந்தது என்பதை எடுத்து விளக்குகிறது.

இலக்கிய ஏடுகள் இதற்கு அடுக்கடுக்கான எடுத்துக் காட்டுகளைக் காட்டி விளக்கிடுகின்றன.

பொதுவில் கட்டியிருக்கும் முரசில் காற்றுப் பட்டு, ஒலியெழும்பக் கேட்டு, போருக்குப் புறப்படும் வீரர்களைக் காண்கிறோம்.

பெற்றவன், உற்றவன் போர்க்களத்தில் மடிந்த பின்பும், பிள்ளைப் பருவத்து, தன் மகனைப் போருக்கு அனுப்பும் தாய்மாரைப் பார்க்கின்றோம்.

மார்பிலே புண்ணேற்று மடிந்திடுவதைப் பெருமைக்குரிய பேறாகக் கருதும் பெரு வீரர்களை அறிகிறோம்.

புலியினை முறத்தினால் விரட்டிய மங்கைமாரை உணர்கிறோம். வீரம் விளையாடிற்று தமிழ் மண்ணில்.

நெஞ்சுறுதி என்பது எங்கும், எதிலும், எவரிடமும் காணும் பண்பாக மிளிர்ந்தது. அதனைக் கேட்டு மகிழ்கிறோம்; ஏடுகளில் கண்டு உவகை பெறுகிறோம்.

* * *

அன்று, கன்னிப் பெண்களோடு வளர்க்கப்படும் காளைகளை அடக்கிடும் வாலிபர்களையே, அவர்கள் கணவர்களாக வரித்துக்கொண்டார்கள் என்று தெரிகிறது!

புலிப் பற்களை, தாலியாகக் கட்டிய பழக்கமும் தமிழகத்தில் இருந்தது.

* * *

ஆனால் அந்த வீரம் இன்று தமிழகத்தில் இல்லை.

இங்குக் குறிப்பிடுவது, வில்லும் வேலும், ஈட்டியும் சூலமும் ஏந்திப் போருக்குச் செல்லும் வீரத்தை அல்ல-நெஞ்சுறுதியைக் குறிப்பிடுகிறோம்.

காற்றடித்தால், கதவுகளை மூடிக் கொண்டு படுத்துக் கிடக்கும் சோம்பல் இருக்கிறது.

பட்டாளம் என்றால் பதை பதைத்து அழும் தாய்மார்களே உள்ளனர்.

போர் என்றால், அந்தப் பேர் சொல்லவும் அஞ்சும் நிலையே உள்ளது.

புளி என்றால் கூட புலி எனக் கிலி பிடித்துப் பதுங்கும் மனம்தான் நிலவுகிறது.

காளையை அடக்கித்தான் திருமணம் என்றால், இங்குத் திருமணம் நடைபெறாது. காளை அடக்கும் காளைகள் இன்று இல்லை. அதுபோலவே, காளையை அடக்கியவன் என்றால் எந்தக் கன்னிப் பெண்ணும் கழுத்தை நீட்டத் தயாராக இல்லை.

புலிப்பல் கட்டித்தான் திருமணம் என்றால், திருமணமாகாத வாலிபர்களும், மங்கைகளுமே நிறைந்திருப்பர். அதனால்தான் காலவோட்டத்தில், அது தங்கத்தில் செய்யப்படும் தாலியாக மாறிவிட்டது. புலிப்பல் உண்மையில் கொண்டு வருபவன் இருந்தாலும் எந்தப் பெண்ணும்

மணந்து கொள்ளமாட்டாள். புலியையே இந்தப் பாடுபடுத்தி, பல்லைக் கொண்டு வந்தவன், தன்னை என்ன செய்வானோ என்று அஞ்சாமல் அவளால் இருக்க முடியுமா?

ஆகவே, வீரம் என்ற சொல்மூலம் நெஞ்சுறுதியையே நினைவு கூர்கிறோம்.

அச்சம், நம் மக்களைப் பிடித்தாட்டுகிறது.

அதனால் அக்கறையற்ற தன்மை எல்லாத் துறைகளிலும் நிலவுகிறது.

அஞ்சி அஞ்சிச் சாவார், இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே என்று இதனால்தான் பாரதியார் கூறினார்.

நப்போல் வளை என்று கூறி, இந்த இனத்திற்குக் கோழையுணர்ச்சி ஊட்டப்பட்டு விட்டது.

இந்த அச்சம் பிடித்தாட்டுவதால் தான் அரசியலில், இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்று மக்கள் ஒதுங்கி வாழும் நிலை உள்ளது.

அச்சமில்லை, அச்சமில்லை, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் என்று கூறி உரிமைக்குப் போரிடும் நெஞ்சுறுதி நசித்து விட்டது.

ஆகவே, பழைய வீரம், அதாவது புதிய நெஞ்சுறுதி நம் மக்களுக்குத் தேவை-அதற்கு அச்சம் அகற்றப்பட வேண்டும்.

* * *

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, வள்ளுவப் பெருந்தகை, இந்த அச்சம் பற்றிச் சிந்தனை செய்திருக்கிறார்கள்.

அதனால்தான், அவர் எந்த அச்சம் நமக்குத்தேவை, எந்த அச்சம் நமக்குத் தேவையில்லை என்று எடுத்து விளக்கியிருக்கிறார்.

உலகில், மனிதன் சிலவற்றிற்கு அஞ்சியே தீரவேண்டும். அந்த அச்சத்தைத் தவிர்த்திட முடியாது.

குடித்திட
சூதாடிட
பிறன் மனைவிழைந்திட
பொய் கூறிட
உயிர்க்கொலை புரிந்திட

இப்படிப் 'பாவங்களை'ப் புரிந்திட அஞ்சத்தான் வேண்டும்.

ஆனால்,

உரிமைக்குப் போரிட
விடுதலைக்கு வித்திட
நீதியை நிலைநாட்ட
அநீதியை அழித்திட
அக்கிரமத்தை ஒழித்திட

அச்சம் தேவையில்லை. இதற்கு அஞ்சுவது அறிவுடையவர் செயல் இல்லை.

இதனை வள்ளுவப் பெருந்தகை எவ்வளவு தெள்ளத் தெளிய எடுத்துக் கூறியிருக்கிறார் பாருங்கள்.

அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும்; அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையாரின் தொழிலாகும் என்பதை

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை
அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்

என்ற குறள் மூலம் எடுத்து விளக்கினார்

* * *

அதைப்போலவே, இந்த அச்சம், அஞ்சாமை யாருக்குத் தேவை என்பதையும் அவர் எடுத்து விளக்கியுள்ளார்.

ஆள்பவருக்கும் வேண்டும்-ஆளப்படுபவருக்கும் அவசியம்.

ஆளவந்தாருக்குத் தேவையான நான்கு பண்புகளில் அஞ்சாமையைத்தான் முதற்கண் வைத்தார் வள்ளுவர். ஏனெனில் இப் பண்பு இருந்தால்தான் மற்ற மூன்று பண்புகளும் நிலைக்க முடியும்.

அஞ்சுபவன் ஈகைக்குணம் கொண்டவனாக இருக்க முடியாது. அஞ்சுபவனிடம் கேட்டுப்பெறும் நிலை இல்லை; மிரட்டிப் பறித்தே சென்றுவிட முடியும்.

அச்சமுடையவனிடம் அறிவு பணிந்தே போய்விடும்.

ஊக்கம் மருந்துக்கும் இருக்க நியாயமில்லை.

ஆகவேதான் முன்னால் அஞ்சாமையைக் கொள்ளவேண்டும் ஆள்பவர் என்றார். இந் நான்கில்,

எதுவும் அளவில் குறைவு படாமலும் இருக்கவேண்டும் என்றூர்.

அஞ்சாமை ஈகை அறிவூக்கம்
இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.

அதைப் போலவே, ஆளப்படுபவர்க்கும், இந்த அஞ்சாமை இருந்தாக வேண்டும். இல்லாவிட்டால் உண்மை ஜனநாயகம் தழைத்திட இயலாது.

அவர்கள் கடமை, உரிமை இரண்டையும் செய்துதந்தால் அஞ்சாமை தானேவந்து குடிகொள்ளும். கடமையைச் செய்கிற பொழுது, அச்சத்துடனும், உரிமையைக் கேட்கிற பொழுது அஞ்சாமையுடனும் விளங்கிட முடியும்.

தான் செய்யவேண்டிய கடமைகளை முறைப்படி செய்துவந்தால், அஞ்சாமையே துணை நிற்கும் என்று குறிப்பிட்டுக் குறள் பாடினூர்.

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா
எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்.

இதைப்போலவே, அஞ்சிச்சாவார் யாராக இருப்பினும், ஆள்பவரானுலும் ஆளப்படுபவரானுலும், பகைவர்க்கு மிக எளியவர்களாவார்கள்.

அஞ்சும் அறியான் அமைவிலன்
ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு

என்றூர் அவர்.

ஆகவேதான், வள்ளுவர் காட்டிய அச்சத்தை உணர்ந்து, அவர் விட்டுத் தள்ளிச் செல்லும் அச்சத்தைத் தவிர்ப்போம்! அவர் கொள்ளச் சொல்லும் அச்சத்தை ஏற்போம்!

குறளோவியம்: ''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.'' — குறள்



குமரி மாவட்டச் சீரணி பற்றி . . .

''வெயில் காலத்தில் பாசனக் குளங்கள் தண்ணீர் இல்லாமல் வறண்டுவிடுகின்றன. அதன் காரணமாக விவசாயத்தையே பெரும்பாலும் நம்பி வாழ்கின்ற குமரி மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள். எனவே மழைக் காலத்தில் வீணாகிச் செல்லும் தண்ணீரை, வடிகால்கள் அமைத்துக் குளங் களில் தண்ணீர் தேக்குகின்ற வேலையை சீரணித் தொண்டர்கள், ஆங்காங்கு அமைக்கப்பட்டுள்ள குழுக் களாகச் செய்யவேண்டும்.

குளங்களுக்குத் தண்ணீர் தேக்குகின்ற சீரணியின் சிறந்த பணியால், குமரி மாவட்டத்தின் முக்கியத் தொழி லாகிய விவசாயத்திற்கு உதவியாக இருக்கும் உழவர் பெரு மக்களுக்குத் துணை நின்று, நாட்டின் உணவு உற் பத்திப் பெருக்கத்தில் சீரணியின் பணி சிறக்கவேண்டும்.

மழைக்காலத்தில் ஏற்படும் உடைப்புக்களையும் பாதை களையும் செப்பனிடுதல்போன்ற பணிகளைக் காலதாமத மின்றிச் செய்துமுடிக்க, சீரணித் தலைவர்கள் விரைந்து பணியாற்றவேண்டும். அவசரச் சீரணிப்பணிகளின் விவ ரங்களை நாகர்கோவிலில் நடக்கும் மாவட்டச் சீரணிக் கூட்டத்தில் தெரிவிக்க வேண்டுகிறேன்'' என்று குமரி மாவட்டச் சீரணித்தலைவர் திரு. கே. ஏ. இராசப்பா தெரி விக்கிறார்.

R. Manoharan & Company

2, NORTH CAR STREET

SRIVILLIPUTHUR, RAMNAD DISTRICT.

"Dealers in"

Parry's Fertilisers, Pesticides, Power Sprayers and Kirloskar Oil Engine, etc.,

Phone : 118

Branch : WATRAP
Phone : 38

"எனக்கும் என் வயல்களுக்கும் ஓய்வே யில்லை. ஆண்டிற்கு மூன்று முறைகள் பயிர் செய்கிறேன். இதனல் எனக்குப் போதிய வருவாய் தொடர்ந்து கிடைக்கிறது'' என்று முகம் மலர, இதயங் குளிரக் கூறுகிருர் 32 வயதே நிரம்பிய இளம் உழவர் திரு. சம்பந்தம்.

138 நாட்களில் ரூ 2307 வருவாய்

''ஐ. ஆர். 8, ஐ. ஆர். 5 போன்ற நல்லின மிகு விளைச்சல் விதைகளை தவிர வேறெதையும் இனி நான் பயிரிடப் போவதில்லை'' என உறுதியாகக் கூறும் இவ் வுழவர், பூவிருந்தவல்லி ஒன்றியத்திலுள்ள நெடுஞ்சேரி என்னும் ஊரில், ஆறு ஏக்கர் நிலத்தில் திறமுடன் வேளாண்மை செய்கிருர்.

'சீரணி'ச் செய்தியாளர் அவரை அணுகி, 'சீரணி'யின் எண்ணிறந்த உழவர் பெருமக்களின் தகவலுக்காகப் பேட்டி கண்டார்.

''ஒவ்வோராண்டும் சனவரி முதல் மே வரையிலும், மே தொடக்கம் செப்டம்பர் வரையிலும் இரண்டு முறை ஐ. ஆர். 8 பயிர் செய்த பின்னர், ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை ஐ. ஆர். 5 பயிரிடுகிறேன். இப்போது ஐ. ஆர். 5 செழிப்புடன் வளர்ந்திருப்பதை நீங்களே காண முடிகிறது'' என்று, பயிர்களைத் தம் செல்லக் குழந்தைகளென அணைத்துக்கொண்டு, பெருமிதத்துடன் கூறுகிருர் திரு. சம்பந்தம்.

இவர் இவ்வாண்டு ஐ. ஆர். 8 பயிரிட்டு, அமோக விளைச்சல் பெற்ற தற்குரிய வேளாண்மை முறைகளைக் காண்போம்.

நாற்றங்கால்

இவ்வாண்டு சனவரித் திங்கள் 10ஆம் நாள், ஐ. ஆர். 8 பயிரிடத் தொடங்கினர். நாற்றங்கால் பயிருக்கென, 20 செண்ட் நிலத்தை ஒதுக்கி, அதில் பாதுகாக்கப்பட்ட ஐ. ஆர். 8 விதைகளில் 24 கிலோவைக் கொண்டு விதையிட்டார். நாற்றங்காலுக்கு 4 வண்டிச் சுமை தொழுவுரம் தரப்பட்டது.

நாற்றுவிட்ட 15 ஆம் நாள், 'குமான் - டெமக்ரான்' கொண்டு பயிர்ப் பாதுகாப்புச் செய்தார்.

அடுத்த நாளே 10 கிலோ யூரியா இடப்பட்டது.

நடவு

வயலிற்கு ஏக்கர் ஒன்றிற்கு 15 வண்டிச் சுமை வீதம் தொழு உரமிட்டார். பின்னர் மேலூர் கலப்பையைக் கொண்டு நான்குமுறை ஆழ, செவ்வையாக உழுது சேருக்கிய

துடன் ஓயாது, 25 நாட்கள் கழித்து மீண்டும் இரண்டுமுறை அதே கலப் பையால் உழவு செய்தார். இறுதியுழ வின்போது, 9: 9: 9 உரத்தில் 400 கிலோவையும் போட்டுச் சேர்த்து உழுதார்.

பின்னர் 6''×4'' இடைவெளி களில் சீராக நடவு செய்யப்பட்டது.

நடவு செய்த 16 ஆம், 30 ஆம் நாட்களில் இரண்டு முறைகள் களையெடுக்கப்பட்டன.

பயிர்ப் பாதுகாப்பு, உரம்

நடவிற்குப்பின் 17ஆம் நாளன்று குமான் பவுடரும், நுவானும், 33ம் நாளன்று இரண்டாவது முறையாக நுவானும் குமானும் கலந்து தெளித்துப் பயிர்ப் பாதுகாப்புச் செய்தார்.

''ஒன்றியத்திலுள்ள மருந்து தெளிக்கும் கருவியைக் கொண்டே ஒவ்வொரு முறையும் மருந்து தெளித் தேன். எங்கள் ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலர், ஊர்ப்பணியா ளர் இருவரும் மருந்து தெளிக்கையில் பெரிதும் உதவினர்'' என்று அவர் களின் உதவியைப் பாராட்டிக் கூறினர்.

உரமிடுதல்

நடவிற்குப் பின் 18 ஆம் நாளன்று, ஏக்கருக்கு 75 கிலோ வீதம் 'யூரியா' வைக் கொண்டு மேலுரமிட்டபிறகு, 40ஆம் நாளன்று இரண்டாவது முறையாக ஏக்கருக்கு 50 கிலோ மீண்டும் 'யூரியா' உரமிட்டார்.

பயிர் முறைகளைத் தவருது செய்து முடித்த திரு. சம்பந்தம், கதிர்களை எதிர்நோக்கிய வண்ணம் 'ஆவ லுடன்' காத்திருந்தார்.

பயனை எதிர்நோக்கி

அந்த நாள், 98ஆம் நாள் மலர்ந் தது. கதிர்கள் வெளிவந்தமை கண்டு திரு. சம்பந்தம் உள்ளம் குளிர்ந்தார்.

மே 28ஆம் நாள், அதாவது நாற் றங்காலிலிருந்து 138ஆம் நாள் ஐ. ஆர். 8 நெற்பயிர் அறுவடைக்குத் தயார்.

''போரடி நெல் நீங்கலாக, ஏக் கருக்கு 75 கிலோ எடையுள்ள 41 மூட்டைகள் கிடைக்கப் பெற்றேன். இதன் மதிப்பு ரூ. 2870 ஆகும். வைக் கோல் விற்றதனுல் மேலும் ரூ. 160 கிட்டிற்று. இந்த ரூ. 3030-லிருந்து, இந்த 138 நாள் பயிருக்கு நான் செல விட்ட ரூ. 623 போக, எனக்குக் கிடைத்த இறுதி ஆதாயம் ரூ. 2307 ஆகும்'' என்று தம் ஆதாயத்தை விளக்கினர்.

''உங்களுடைய இந்த மிகு விளைச்ச லுக்கு உங்களுடைய சலியா உழைப் பும், வற்ருத ஆர்வமும்தான் கார ணங்களாக இருக்கமுடியும். இருப் பினும்...''இதற்குள் இடை மறித்த திரு. சம்பந்தம் ''ஒன்றிய ஆணையர் திரு. சாந்த சீலன், வேளாண்மை வளர்ச்சி அலுவலர் திரு. காதர், ஊர்ப்பணியாளர் திரு. சுவாமி நாதன் (இவர்தாம் தமிழகத்தின் தலைசிறந்த ஊர்ப்பணியாளர்) ஆகி யோர் அவ்வப்போது உதவிகளை நல்கியும், யோசனைகளைக் கூறியும் என்னைப் பெரிதும் ஊக்குவித்தனர். தவிர நாள்தோறும் வேளாண்மை நிகழ்ச்சிகளை வானெலியில் கேட்ப தாலும் மிகப் பயனடைந்துள் ளேன்'' என்று பெருமையுடன் கூறினர்.

இவ்வாண்டு ஒரே ஒரு போகம்...



அடுத்த ஆண்டு மூன்று போகங்கள்?

உணவு தானிய உற்பத்தியைப்
பெருக்கி வளமை
காணுங்கள். அதற்காக,
குறைந்த வட்டிக் கடன்களை
வழங்குகிறது
பாங்க் ஆ:ப் பரோடா.

BANK OF BARODA

நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ—

பாங்க் ஆ:ப் பரோடா

தலைமைக் காரியாலயம் : மாண்ட்வி, பரோடா.
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும்
400க்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன

Shilpi B.O.B. 23A/69 Tam

கடமையும் கண்ணீரும்

விக்கிரமன்

தள்ளாடியவாறு மெல்ல நடந்து வந்துகொண்டிருந்தது அந்த உருவம். முதுகிலே ஒரு கூனல். பார்வை தெளிவாகத் தெரியவில்லை என்பது புருவத்தின்மீது கையை வைத்து உற்றுநோக்குவதினின்று தெரிந்தது. அவ்வப்போது நடக்க முடியாமல் பெருமூச்சு விட்டு நிற்பதும், பிறகு இடுப்பின்மீது கையொன்றைத் தாங்கி மெல்ல நடப்பதும், உடலிலே தாங்கமுடியாத அசதி துள்ளி நிற்கிறது என்பதைப் புலப்படுத்தியது.

ஒளிவீசி நிற்கவேண்டிய விழிகள் ஆழ்கிணற்றினைப்போல் காட்சி அளித்தன. வீர மறவர்களுக்கே உரித்தான கம்பீரமான மீசை, உளம் சோர்ந்தவைபோல் உரமற்று நரை பெற்றுக் காட்டுப் புதர்போல் ஒழுங்கற்று முகம்முழுதும் வளர்ந்திருந்து தாடியுடன் உறவாடியது. குழி வீழ்ந்த விழிகள், நரைமுடி, கூன் முதுகு, தள்ளாடும் நடை இவற்றையெல்லாம் தள்ளித் திரை விலக்கி நோக்கினல் முப்பத்தைந்திலிருந்து நாற்பது வயதிற்குள்ளிருக்கும் இளம் வாலிபனின் தோற்றம் புலப்படும். நாடகத்தில் மாறுவேடம் பூண்டிருப்பவர் நிலைபோல் அந்த இளமையை முதுமைக் கோலம் மூடிக்கொண்டது வாழ்வெனும் நாடகத்தை இயக்கும் காலம் எனும் கொடியவன் செய்கையால்தான்...

''துரைசாமிக் கிழவா எங்கே போறே?'' என்று இளைஞன் ஒருவன் சிரித்தவாறு கேட்டான். ஆனல் குரலில் அன்பு நிறைந்திருந்தது.

பிளுங்குத் தீவிற்கு அந்த இளைஞன் புதியவன். அந்தத் தீவிற்கு வந்து ஒரு மாதங்கூட ஆகவில்லை. துரைசாமியை அடிக்கடி அவன் சந்தித்துப் பேசிப் பழகியதால் சற்று உரிமையுடன் பெயரிட்டு அழைக்கும் துணிவு பெற்றிருந்தான். இல்லாவிடில் மண்டையிலடிப்பது போல் பெயர் சொல்லி, கிழவனென்று அடைமொழி கூறுவதற்குத் துரைசாமி சும்மா இருப்பாரு? அவன் தங்கியிருந்த இடத்தில் அவனுக்கு அரச மரியாதை. 'இளவரசே, இளவரசே' என்றுதான் அனைவரும் அழைப்பார்கள்.

ஆம்; பிறர்சொன்னுலும் சொல்லாவிட்டாலும் துரைசாமி இளவரசன்தான். சிவகங்கைச் சீமையின் இளவரசன் அவன். சிவகங்கை நாட்டிலே இப்பொழுது அவன் இருந்திருந்தால் அவனே ஒரு வேளை நாட்டை ஆளும் அரசனுக விளங்கியிருக்கலாம்.

இதென்ன வேடிக்கைப் பேச்சு என்கிறீர்களா? விந்தையுமில்லை; வேடிக்கையுமில்லை. சிவகங்கை நாட்டை அரசு புரிந்த மருது சகோதரர்களுள் இளையவரான சின்ன மருதுவின் ஒரே மகன்தான் துரைசாமி. ஊமைத்துரையின் நெருங்கிய நண்பன் சின்னமருது. ஊமைத்துரை வீரசுவர்க்கம் அடைந்த பிறகு தன் மகனுக்கு அவன் நினைவாகத் துரைசாமி என்று பெயரிட்டார் சின்ன மருது.

சிவகங்கைச் சீமையைக் கும்பினியார் கைப்பற்றுதிருந்திருந்தால்

உடையணத் தேவருக்குப் பிறகு சிவ கங்கை அரியணையில் அமரும் தகுதி துரைசாமி ஒருவனுக்கே உண்டு. அந்த உரிமை பெற்ற இளவரசு துரைசாமி அரச கம்பீரத்துடனில்லா மல், நிமிர்ந்த நடை இழந்து, நேர் கொண்ட பார்வை துறந்து, சுக சௌக்கியங்கள் மறந்து எங்கோ அலை கடலுக்கு அப்பால் கண்காணுத தீவில் விம்மிவிம்மி அழுது, வேதனை யுடன் வாழ்வானேன்?

''கண் தெரியவில்லை கிழவனுரே, காதுகூடவா செவிடாச்சு?'' என் ருன் அந்த இளைஞன். அவன் தோள் கள் எப்போதும் போர், போர் என்று திமிருடன் தினவெடுத்த வாறிருக் கும். இப்படி அடிமையாக வாழ் வதைவிட இரண்டு பரங்கியரைக் கொன்று தூக்குமேடை ஏறி வீர பாண்டியனுடன் வீரசுவர்க்கத் திற்காவது சென்றிருக்கலாம் என்று எப்போதும் முணுமுணுத்தவாறிருப் பான். அவனுடன் தீவு கடத்தப் பட்ட மற்ற இளம் வீரர்களும், ''கட்டுண்டோம்; பொறுத்திருப் போம்; ஏதாவது வழிபிறக்கும்; அது வரை அமைதியுடனிருப்போம். தீவினின்று தப்பிச் செல்ல வழி தேடு வோம். அதுவரை உன் துடிப்பை யெல்லாம் சற்று மூட்டை கட்டிவை'' என்று யோசனை கூறுவர். துடிப்புள்ள இளைஞன் முத்துக் குமர னும் பல்லைக்கடித்துக் கொண்டு காலைப் பூமியில் தேய்த்துக் கொண்டு கர்ச்சிப்பான். யாரையாவது வம்புக் கிழுத்துப் பேசத்துடிப்பான். உடல் மெலிந்து, உளச் சோர்வுடனிருக்கும் துரைசாமியிடம் கேலியாகப் பேசு வான்.

துரைசாமி மெல்லத் திரும்பிப் பார்த்தான். ''யார், முத்துவா? கண் பார்வையைப் பெற, காது செவிடு சரியாக்கத்தானப்பா நான் போகிறேன்'' என்ருன்.

''ஏதாவது மூலிகை தேடிப் போகிருயா?'' — முத்து சிரித்தவாறு கேட்டான்.

''மூலிகை இல்லையப்பா, விஷக் கொடி; ஆனுலும் சில விஷங்கள் நோயைத்தீர்க்கும் என்பார்கள்; அது போன்ற இந்த விஷக் கொடியும் என் வேதனையைத் தீர்க்கும் என்ற நம் பிக்கையுடன் செல்கிறேன்''—துரை சாமிக்கு மேல்மூச்சு வாங்கியது.

''புதிர் போடுவதுபோல் பேசுகிறீர் களே... விஷக் கொடி... மூலிகை... புரியும்படிச் சொல்லுங்களேன்''— முத்துக் குமரன் தெரிந்து கொள் வதற்காகவே கேட்டான்.

''தம்பி, உன்னிடம் சொன்னுல் சீறி எழுவாய்... வெல்ஷ் துரை பிஞங்கில் தங்கியிருக்கிருன். அவனைப் பார்க்கச் செல்கிறேன்...'',

''என்ன? பானர்மென் இங்கே இருக்கிருனு? அந்தத் துரோகி இங்கேயா இருக்கிருன்? பாளையக் காரர்களுடன் போர் நடத்தி என் சாமியை வீரசுவர்க்கம் அனுப்பிய பாதகன் இங்கேயா இருக்கிருன்? தாத்தா என் கரங்கள் துடிக்கின்றன. என் தோள்கள் விம்முகின்றன. இரத் தப்பசி எனக்கேற்பட்டு விட்டது. எங்கே இருக்கிருன் அந்தக் கொடிய வன்... சொல்லுங்கள்... அவன் கழுத்தை நெரித்து...'' முத்துக் குமரன் சிம்மக் குரலில் முழக்கிஞன்.

துரைசாமியின் கோடு விழுந்த புருவத்திலும் ஒரு சிலிர்ப்பு. ''தம்பி, எனக்கும் உன்னைவிட அதிகத்துடிப்பு உண்டு. பானர்மென் பாளையக் காரர்களின் விரோதி; பானர்மென் மாளிகையில் வந்து தங்கியிருக்கும் வெல்ஷ் எனக்குப் பரமவிரோதி. ஆனுலும் அவனைக் காணத்தான் செல்கிறேன்...'' என்று மெல்லக் கூறிஞன்.

''வெல்ஷ் துரையா? துரை என்ற பெயர் வேறு? சிச்சீ... வெல்ஷைச் சந்தித்து நலம் விசாரிக்கச் செல்கிருயா அல்லது வெகுண் டெழுந்து அவன் குடலை மாலையாக அணியப் போகிருயா? நானும் உன் னுடன் வருகிறேன். நீ ஒருவனைப் பார்த்துக்கொள்... நான் மற்றவனைப் பந்தாடுகிறேன்...'' என்று சீறிஞன் முத்து.

''தம்பி... என் உடலிலும் மறவ இரத்தம் ஓடுகிறது. வெல்ஷ் துரையை நினைக்கும் போது என் உள்ளத்தில் வீராவேசம் பொங்கும்; ஆனுல் அதே சமயம் ஏதோ ஒரு நம் பிக்கை நிறைந்த உணர்ச்சி உதித்து வீரத்துடிப்பைத் தடுக்கும். வெல்

ஷின் கண்களில் தெரியும் ஓர் அன்பு, வாஞ்சை, பாசம் என்னை அமைதி யடையச் செய்துவிடும்...'' என்று துரைசாமி கூறும் போது முத்துக் குமரன் குறுக்கிட்டு, ''சீறி வரும் நாகத்திடம் சல்லாபமும், பாய்ந்து வரும் புலியிடம் பாச உணர்ச்சியும் கொள்வது எவ்வளவு தவறோ அவ் வளவு தவறு பரங்கிப்பூதத்திடம் பாசம் கொள்வதும்... வீர மறவ ரத்தம் ஓடும் நீங்கள் எப்படி அமைதி கொள்கிறீர்கள். இருபதாண்டு கண் காணாத தீவுவாழ்வு உணர்ச்சிகளை மரத்துப் போகச் செய்துவிட்ட னவா?'' என்று இடிபோல் பேசவும், துரைசாமி அவனை அடக்கி, ''தம்பி, மெல்லப் பேசு... கண்காணாத தீவில் உயிருடனிருக்கவாவது விட்டிருக் கிறார்கள். திரும்பவும் தாய்த்திரு நாட்டிற்குச் செல்வோம் என்ற நம் பிக்கையாவது இருக்கிறது; அதை யும் ஏன் பொய்த்துவிடப் பார்க் கிறாய்...? நாம் இப்போது எந்தவிதத் தற்காப்பும் அற்ற நிலையிலிருக் கிறோம்... ஆயுதமில்லை; ஆள் பல மில்லை. ஆயுதங்களும், ஆள்பலமும், மதியூகமும் இருந்தும் கும்பினியார் நம்மை வென்றனர். தந்திரத்தால் துரோகத் தனமுள்ள நம்மவர்களின் சதியால் என் தந்தையையும், என் பெரிய தந்தையையும் வென்று தூக்கில் தொங்கச் செய்தனர். நடந்த கதை அப்படி இருக்க வெறும் வாய்ச்சொல்லை வைத்துக் கொண்டு பானர்மென்னைக் கொல்வதும், வெல்ஷ் துரையைக் கொல்வதும் இலேசா. நான் ஒரு நம்பிக்கை உணர்ச்சியுடன் செல்கிறேன்..... வெல்ஷ் துரை என்னைப் பார்த்தால் ஓடிவந்து அணைத்துக் கொள்வார். கண்ணீர்விட்டழுவார். என் தோற் றத்தை, என் நிலையைப் பார்த்து விம்முவார். அவருடைய கண்ணீ ரைப் பயன்படுத்திக் கொள்வேன்; பரி வுணர்ச்சியைப் பயன்படுத்திக் கொள் வேன்; தமிழ்த்திரு நாட்டினின்று நாடு கடத்தப்பட்டு வந்திருக்கும் என்னைத் திரும்பவும் தாய்நாட்டிற் கனுப்புமாறு வேண்டுவேன். வெல்ஷ் துரை மனமிளகி, என் வேண்டு கோளை ஏற்பான். கப்பலேற்றி என் னைச் சொந்த நாட்டிற்கனுப்புவான். முதுமைத் தோற்றத்துடன் செல்லும் என்னால் ஒன்றுமே செய்யமுடியாது என்றுதான் நினைப்பான்... ஆனால் நான் சிவகங்கையை அடைந்தவுட னேயே நாட்டில் எனக்குள்ள உரி மையை வற்புறுத்துவேன்; மக்கள் என்பக்கம் சேர்வார்கள்; கலகம் ஏற் படும். போர் மூளும். கும்பினியாரின் தந்திரங்கள் எனக்குத் தெரியும். நான் போரில் வெற்றி அடைவேன். கும்பினியார் சமாதான உடன்படிக் கைக்கு வருவார்கள். பல நிபந்தனை களுள் முக்கியமாகக் கடல் கடந்த தீவுகளுக்கு அனுப்பப்பட்ட உன்னைப் போன்றவர்கள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் என்பதை ஒன்றாக விதிப்பேன்...'' துரைசாமி பேசிக்கொண்டே போகும்போது அவருக்கு மூச்சுத் திணறியது. தலை சுற்றியது. தடுமாறினான். முத்துக் குமரன் துரைசாமியைத் தாங்கிப் பிடித்துப் பரபரப்புடன், ''சாமி... நீங்கள் சின்னமருதுவின் குமாரரா? சிவகங்கை இளவரசரா? உங்களுக்கா இந்தக் கதி சாமி. ஐயோ.. உங்களை அடையாளம் தெரியாமல் 'கிழவா, கிழவா' என்று கேலி செய்தேனே... சாமி, சாமி என்னை மன்னித்துவிடுங் கள்...'' என்று தடால் என்று துரை சாமியின் காலில் வீழ்ந்தான். பிறகு எழுந்து, ''சாமி... என் தெய்வமே.. உங்களை இப்படி வாடவிட்ட வெல்ஷை வெட்டிக் கொல்லாமல் சமரசம் பேச முயல்கிறீர்களே... மயில் சும்மா இறகு போடுமா... எனக்குக் கட்டளையிடுங்கள். இப் போதே வெல்ஷையும், பானர்மெனை யும் மேல் உலகம் அனுப்புகிறேன்..'' என்று துடிப்புடன் கூறினான்.

துரைசாமி சிரித்தார். ''வெல்ஷை வெட்டுவதால் நாம் தாய்நாடு சென்றுவிட முடியுமா? தம்பி! நீ நினைப்பதுபோல் வெல்ஷ் கல்நெஞ்ச னல்ல. அவன் இதயம் கண்ணீரால் நனைந்திருக்கிறது. கடமை உணர்ச்சி தான் அவனை அவ்வாறு நடக்கச் செய்தது. இருபது வருடங்களுக்கு முன்பு தூத்துக்குடித் துறைமுகத்தில் என்னைக் கப்பலேற்றும்போது கண்ட வெல்ஷின் வேதனைமுகம் இன்னும் கண் முன்னே நிற்கிறது. இப்போது நான் அவனைக் காணச்சென்றால் நிச் சயம் எனக்குதவுவான். என் தந்தை யர் உப்பைத் தின்றவன். அவர்களி டம் சகலவித போர்க்கலைகளையும் கற்றவன்; அந்த நன்றியை மறக்க

மாட்டான்... நான் சென்று வருகி றேன் தம்பி...அதுவரை நீ அமைதி யாக இரு...'' துரைசாமி மெல்ல மெல்ல வெல்ஷ் தங்கியிருந்த பானர் மென் மாளிகையை நோக்கி நடந் தான்.

* * *

துரைசாமி கூறியதுபோல் ஜேம்ஸ் வெல்ஷுக்கு மருது சகோதரர்கள் குடும்பத்தினர்மீது பிரியம் அதிகம். வெள்ளை மருது வேட்டையாடுவதில் வல்லவர். குதிரை மீதேறிக் கம்பீர மாக வரும் அவர் தோற்றத்தைக் காணும் எவரும் மிக்க மரியாதை கொள்வர். பதினெட்டாம் நூற்றாண் டின் இறுதியில் மருது சகோதரர் களும், கும்பினியாரும் நேரிடையே மோதாத காலத்தில் குதிரைமீது கம்பீரமாக வரும் வெள்ளை மருது விடம் சிநேகமாக இருக்க வெள்ளையர் விரும்புவர். காடுகளில் வேட்டை யாடச் செல்லும்போது மருதுவின் துணையைப் பெரிய தளபதிகள் நாடு வர். காட்டு விலங்குகள் வெள்ளை மருது என்றால் கலங்கும். மரங்களில் பரண்கட்டி விலங்குகளை வேட்டை யாட வெள்ளை மருது உதவுவார். மருது சகோதரர்களின் வீரம் ஜேம்ஸ் வெல்ஷை மிகவும் கவர்ந்தது. ஈட்டி எறிவதும், வாள் சுழற்றுவதும், மருது சகோதரர்களிடம் கற்க விரும் பினன். வெல்ஷையும் மருது சகோ தரர்களுக்கு மிகவும் பிடித்து விட்டது. தாங்கள் அறிந்த போர்க் கலையனைத்தையும், தந்திரங்கள் அனைத்தையும் கற்றுக் கொடுத்தனர். வளர்த்த கடா மார்பில் பாயும் என்று அவர்கள் அப்போது நினைக்க வில்லை.

கும்பினியார்களுக்கும், மருதிருவர் களுக்கும் நேரிடையே போர் மூண்டது. சகோதரர்களின் போர்த் தாக்குதல், ராணி வேலுநாச்சியார், அவள் ஆலோசனையாளர், மருதிரு வர்மீது தங்கள் உயிரையே வைத் திருந்த பொது மக்களின் புரட்சி ஆகியவற்றிற்கு ஈடுகொடுக்க முடியாமல் ஆர்க்காட்டு நவாப் மீண் டும் வேலு நாச்சியாரிடம் சிவ கங்கையை ஒப்படைத்துச்சில ஆண்டு கள் கழித்து கும்பினியார் திட்ட மிட்டு மருது சகோதரர்களைத் தாக்க முனைந்தனர்... போரிலே சற்றுத் தொய்வு ஏற்பட்டது. காட்டிற் குள்ளே சென்று மறைந்திருந்த மரு திருவரைக் கும்பினிப் படைகள் சூழ்ந்தன. வெல்ஷ் அந்தப் போரில் பெரும் பங்கேற்றுக் கொண்டான். மருதிருவரது போர்முறை, தந்திரம் இவற்றை அறிந்தவன் வெல்ஷ். ஆத லால் அவனிடமே மருதிருவரைச் சிறைப்படுத்தும் பொறுப்பு ஒப் படைக்கப்பட்டது. துரத்திச் சென்று வெள்ளை மருதுவைப் பிடித்தான் வெல்ஷ்; சின்ன மருதுவும் பிடிபட் டான். பிறகு திருப்பத்தூர்க் கோட் டையிலே தூக்கிலிடப்பட்ட செய்தி வரலாறு கூறுவது.

வெல்ஷின் மனப் போராட்டம் சாதாரணமாயில்லை. ஒருபுறம் பாசம்; தன்னை மாற்றான் என்றும் கருதாமல் போர்க்கலைகள் அனைத் தையும் கற்றுக் கொடுத்த மருது சகோதரர்களை எதிர்த்துப் போராடு கிறோமே என்ற வேதனை. ஆனால் வெள்ளை இனத்தவராயிற்றே; அவர் கள் கடமையில் கண்ணுங் கருத்துமா யிருப்பவர்கள். பாசத்தைக் கடமை வென்றது. எனினும் வெல்ஷின் இதயம் அழுது கண்ணீர் சிந்தியது. வெளிக்குத் தெரியாத ஊன அழுகை; வெளிக்குத் தெரிந்தால் 'துரோகி' என்று ஏசப்பட்டுத் துப் பாக்கிக்கு இரையாக்கப்பட்டிருப் பானே!

மருதிருவர் மண்ணோடு மண்ணாக் கப்பட்டனர். கும்பினியாரின் சீற் றம் தீரவில்லை. மருதிருவரின் குடும் பத்தினரைச் சுற்றி வளைத்தனர். சின்ன மருதுவின் குமாரன் துரை சாமி; பதினாறு வயதுடைய அவனை வெல்ஷ் நன்றாக அறிவான். அரச குடும்பத்து அந்தப் பிள்ளையைத் தலை மறைவாக ஓடிவிடச் செய்துவிட வேண்டுமென்பது வெல்ஷின் எண் ணம். மருது பாண்டியர் கிளைக்கு 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' என்றிருக்கும் துரைசாமியைக் காப் பாற்றுவதன் மூலம் மருதிருவருக்குச் செய்த துரோகத்திற்குப் பிராயச் சித்தம் தேடலாம் என்று எண்ணி னன் வெல்ஷ். இப்போதும் கடமை குறுக்கிட்டது. கண்ணீர்ச் சுவடுகள் காய்ந்தன... மருது குடும்பத்தினர் அனைவரையும் பாஞ்சாலங் குறிச்சி யாரின் பரிவாரத்தையும் நாடு கடத் திக் கண் காணாத் தீவுக்கு அனுப்பத்

தலைமைப் பீடம் உத்தரவிட்டது. அவர்களைப் பிடித்து ஒழுங்காகக் கப்பல் ஏற்றும் பொறுப்பு வெல் ஷிடம் ஒப்படைக்கப்பட்டது.

தூத்துக்குடித் துறைமுகத்தி லிருந்து துரைசாமி, மற்றும் அரச பரிவாரத்தினரை ஏற்றிச் செல்லக் கப்பல் தயாராக இருந்தது.

இளைஞன் துரைசாமியைக் காணும் போது, வெல்ஷின் கண்கள் கலங்கின. துரைசாமியை நீண்ட நேரம் தன் அணைப்பில் வைத்திருந் தான். வெல்ஷின் பாச மூச்சு துரைசாமியின் கன்னங்களில் மிதந்து சென்றது. தன்னைமட்டும் கப்பலேற் ருமல் நிறுத்திவிடுவார் வெல்ஷ் என்ற நப்பாசை துரைசாமிக்கு.

ஊது குழலோசை; கப்பல் புறப் படுவதற்கான எச்சரிக்கை அறிவிப்பு. கப்பலின் குழலொலி... அணி வகுத்து வந்து நிற்கும் போர்வீரர் கள். பூட்ஸ் ஓசை, துப்பாக்கியைத் தூக்கித் தாழ்த்தி வணக்கம் தெரி விக்கும் சடங்கு ஒலி.

வெல்ஷின் இளகிய இதயம் கடினமாகியது; பாசக் குழம்பு பாறையாகியது. கடமை பேருருவம் எடுத்து நின்றது. வெல்ஷின் கண் களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் துரைசாமியின் கன்னங் களில் வீழ்ந்து பாதத்தைத் தழுவின. துரைசாமியை இரண்டு வீரர்கள் இரும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டுபோய்க் கப்பலில் ஏற்றினர். தாயை இழந்து, தந்தையை இழந்து, நாட்டை இழந்து, கப்பலில் கண்காணுத தீவுக்குச் சென்முன் துரைசாமி.

சிங்கப்பூர் அருகேயுள்ள பிரின்ஸ் ஆப் வேல்ஸ் எனும் மனித சஞ்சார மற்ற தீவில் துரைசாமியும் மற்ற பரிவாரங்களும் இறக்கப்பட்டனர். அரண்மனை வாழ்வும், அரச போக முமாயிருந்த துரைசாமிஅல்லலுற்று, ஆற்ருது அழுது, காட்டிலும் மேட்டி லும் அலைந்து காலதேவன் காலடியை எண்ணியவாறிருந்தான். இளமை யிலே முதுமை சேர்ந்தது. உறுதி யான உடல் சோர்ந்தது. அணிகலன் அணிந்த உடல் பிணியால் பிணைப் புற்றுத் துவண்டது.

1818ஆம் ஆண்டு; துரைசாமிக்குத் தாய் நாட்டு நினைவு அடிக்கடி தலை தூக்கும். வெல்ஷ் துரையின் நினைவு வந்து நிற்கும். வெல்ஷின் பாசம் நிறைந்த விழிகளும் அவர் சிந்திய கடைசிக் கண்ணீரும் நினைவுக்கு வரும். தன் தந்தையிடம் நண்பரா யிருந்தபோது சிறுவனுன தன்னை ஆசையுடன் நடத்திய சம்பவங்கள் கண்முன் தோன்றும். எல்லாம் பொய்யாய், பழங் கதையாய் மெல்லக் கரைந்து கொண்டிருந்த போதுதான் வெல்ஷ் துரை பினுங்கு நகருக்கு வந்திருக்கும் செய்தி துரை சாமிக்கு எட்டியது. பினுங்கு நகரின் அதிகாரப் பொறுப்பை பானர்மென் ஏற்றிருந்தார். வெல்ஷோ பெரும் பதவியை வகித்து வந்தான். 'ஜெனரல்' என்றழைக்கப்படும் படைத் தளபதி. வெல்ஷ் பதவி உயர்வு பெற்றதும் உடல் நலம் குன்றினர். சிறிது காலம் கடற் பயணம் செய்து ஓய்வு எடுத்துக் கொண்டால் நல்லது என்ற மருத் துவர் யோசனைப்படி, தன் உயிர் நண்பர் பானர்மென் ஆட்சிக்குட் பட்ட பினுங்கை வந்தடைந்தான். துரைசாமியின் உடலில் புத்தொளி ஏற்பட்டது. தனக்கு விடிவுகாலம் ஏற்பட்டு விட்டது என்றே எண்ணி ணுன்.

* * * *

மாலைக் கதிரவன் மங்கும் வேளை யில் பானர்மென் மாளிகை நுழை வாசலில் துரைசாமி கால் கடுக்கக் காத்திருந்தான். வெளியே உலவச் சென்றிருந்த ஜேம்ஸ் வெல்ஷ் திரும்பி வரும்போது சந்தித்துத் தன் வேண்டுகோளைத் தெரிவிக்க வேண்டு மென்பது துரைசாமியின் எண்ணம்.

அதோ குதிரை வருகிறது; குதிரை மீது வெல்ஷ்; முன்பைவிட அதி கம்பீரமான தோற்றம்.

துரைசாமி குதிரையருகே ஓடோ டிச் சென்ருன். மிகக் கேவலமான தோற்றத்திலிருந்த துரைசாமியை வெல்ஷ் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. தன் மெய்க் காப்பா ளரை அழைத்து, அந்த உருவத்தை அப்புறப்படுத்தச் சொன்னுன்.

''வெல்ஷ் துரை என்னைத் தெரிய வில்லையா? நான்தான் சின்னமருது


செல்வம்

வின் மகன் துரைசாமி பாண்டியன். சிவகங்கைச் சீமை இளவரசன். காளையார் கோயில் காட்டிலே என்னை அணைத்ததை மறந்தீரா? தூத்துக்குடியில் கண்ணீர் உகுத்ததை மறந்தீரா?'' — துரைசாமி விம்மினான்.

வெல்ஷ் குதிரையினின்று குதித்தான். ஒரு கணம் துரைசாமியை உற்று நோக்கினான்.

''யார், யார்? இளவரசர் துரைசாமியா?'' என்று நெஞ்சடைக்கக் கேட்டு, தன் உயர்வையும் பாராமல் ஓடிவந்து தழுவிக் கொண்டான்.

துரைசாமி பத்துவயது குறைந்தவன் போன்ற நிலையடைந்தான். வெல்ஷ் மறக்கவில்லை; பாசம் செத்துப் போகவில்லை.

''துரை, துரை... இந்த ஆளற்ற தீவில் என்னால் இனி ஒரு கணம்கூட வாழ முடியாது துரை... என் உயிர் காளையார் கோயிலிலோ, சிவகங்கையிலோ போகட்டும். என் உடல் மீதானசமாதி தமிழ் மண்ணில் எழட்டும். வெல்ஷ் துரை! என்னைத் திரும்பவும் தாய் நாட்டிற்கு அனுப்பி விடுங்கள். என் தந்தையின் உயிர் நண்பர் நீங்கள் என்பதை நினைவு படுத்திக் கொண்டு இந்த உதவியைச் செய்யுங்கள்...'' — துரைசாமி கண்ணீர் மாரிபோல் பெருக, விம்மியவாறு கேட்டான். வெல்ஷும் குழந்தை போல் அழுதுவிட்டான்.

''நாளைக்கு வா; பானர்மென்னிடம் கூறி அடுத்த கப்பலில் ஊருக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்'' என்றான் வெல்ஷ்.

* * * *

மறு நாள் நம்பிக்கை எனும் ஒளியின் உந்தல் பிடித்துத் தள்ள, சோர்வானது சொல்லாமல் கொள்ளாமல் ஓடி ஒளிய, துரைசாமி பானர்மென் வீட்டு வாயிலில் நின்றான்.

இரண்டு வீரர்கள் சரக் என்ற பூட்ஸ் ஒலி கேட்கத் துரைசாமியின் அருகே வந்து நின்றனர். அவன் கரங்களை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டனர்.

''உம்... நட...''

''எங்கே... வெல்ஷ் துரையைப் பார்க்கவேண்டும்.''

''வெல்ஷ் உத்தரவு... கப்பலேற்ற...''

''அப்படியா... மகிழ்ச்சி... தமிழ் நாட்டிற்குச் செல்லும் கப்பல் எப்போது புறப்படுகிறது?''

தமிழ் நாட்டுக் கப்பல் எப்போதும் புறப்படாது; உம்மை ஏற்றிக் கொண்டு உம் இருப்பிடமான பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவுக்கு உம்மைக் கொண்டுவிடச் சொல்லி உத்தரவு...''

துரைசாமி தன் இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டான். அப்போது மேல் மாடத்து அறையின் சாளரம் வழியே இந்தக் காட்சியைக் கண்டு கொண்டிருந்தனர் ஜேம்ஸ் வெல்ஷும், பானர்மெனும். வெல்ஷும் கல்லாக்கிக்கொண்ட தன் இதயத்தை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான்.

''உனக்குப் பைத்தியமா, வெல்ஷ்! நாடு கடத்தப்பட்ட அரச குமாரனை மீண்டும் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பியதாக ஏதாவது சரித்திரம் உண்டா?'' — பானர்மென் கேட்டான்.

ஜேம்ஸ் வெல்ஷ் மீண்டும் இதயத்தை ஒரு முறை பிடித்துக் கொண்டான். அவனுடைய கண்ணீரைக் கடமை வென்றது.

அடுத்த இதழில் பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சாதிக்பாட்சா அவர்களைப்பற்றிய கட்டுரை இடம் பெறும்.

முதற் பெண் ஊராட்சி வளர்ச்சி அலுவலரிடம்

சில கேள்விகள்?

சென்னையிலுள்ள குறளகத்தில் இயங்கும் ஊர் வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றும் திருமதி ஹன்னு இராஜம் அவர்கள், அண்மையில் ஊராட்சி வளர்ச்சி அலுவலராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். இவர் தாம் தமிழகத்தின் முதற் பெண் ஊராட்சி வளர்ச்சி அலுவலராவார்.

'சீரணி'ச் செய்தியாளர் அவரைச் சந்தித்துச் சில கேள்விகளைக் கேட்டார். அக் கேள்விகளும் பதில்களும் இதோ! படியுங்கள்.

''நீங்கள்தாம் முதற் பெண் ஊராட்சி வளர்ச்சி அலுவலர் என்கிறார்கள்; ஆனால் இந்தப் பெரிய கட்டடத்தின் நான்காவது தளத்தில் மேசையின் முன்னே உட்கார்ந்திருக்கிறீர்களே?''

''என்னை இன்னும் ஒன்றியத்திற்கு அனுப்பவில்லை.''

''ஒன்றியத்தில் எவ்வாறு பணியாற்ற விருக்கிறீர்கள்?''

''தொடக்கத்தில் சிறிது தயக்கமுற்றேன். இருப்பினும் என்போன்ற எண்ணற்ற மகளிர் ஒன்றியங்களின் பற்பல பதவிகளில் செயலாற்றுகையில் என்னாலும் ஊராட்சி வளர்ச்சி அலுவலராகத் திறம்படப் பணியாற்ற முடியும் என்று நம்புகிறேன்.''

''மற்ற பெண்களைக்காட்டி நீங்கள் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறீர்களே!''

''அப்படியென்றால் நான் ஒன்றியத்தில் பணியாற்றும்போது, என்னை மீண்டும் சந்தியுங்கள்.''

''அதைப்பற்றி அப்போது யோசிப்போம். நீங்கள் திருமணமானவரா? குழந்தை குட்டிகள்...''

''குழந்தை குட்டிகளெல்லாம் இல்லை. ஒரேயொரு பெண் குழந்தைதான்; பெயர் சாந்தா.''

''நீங்கள் படித்த கல்லூரி, படிப்பு, கணவர்பற்றி யெல்லாம் கூறுங்களேன். ஒவ்வொரு கேள்வியாகக் கேட்க வேண்டுமா, என்ன?''

''சென்னை எதிராஜ் கல்லூரியில் பயின்று பி.ஏ. பட்டம் பெற்றேன். கணவர் திரு. பக்தவத்சலம், இந்திய ரிசர்வ் பாங்கியில் பணியாற்றுகிறார்.''

அடுத்த இதழில்

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்று, பி.எஸ்ஸி. பட்டம் பெற்று, வேளாண்மையில் நாட்டஞ் செலுத்தி ஊர் ஒன்றிய நிலைகளில் நடைபெற்ற பயிர்ப் போட்டியில் பங்கு கொண்டு, முதற் பரிசுகளைப் பெற்றுள்ள, திரு. குருதாசன் அவர்கள் 'சிரணி'க் கென்றே அளித்த சிறப்புப் பேட்டியை வரும் இதழில் காணலாம்.



''பொதுவாகத் திருமணமானவர்கள், அலுவலகங்களில் பணியாற்றுவதுபற்றி உங்கள் கருத்தென்ன?''

''குழந்தைகளைப் பேணிக்காக்கவும், வீட்டைக் கவனித்து, சமையல் செய்யவும் பணியாட்களை அமர்த்திவிட்டு, அலுவலகம் சென்று பணியாற்றுவதால், திங்கள்தோறும் கிடைக்கும் ஊதியத்தில் கணிசமான தொகை மிஞ்சுவதில்லை; அவ்வாறு எஞ்சி நிற்கும் சிறு தொகைக்காக இத்துணைப் பெரிய சிரமம் அவசியமில்லை.''

''நீங்கள் சொன்னது உங்கள் சொந்த அனுபவமா?''

''இல்லை. ஆனால் அலுவலகங்களில் பணியாற்றும் எல்லாப் பெண்களும் இதை ஏற்றுக்கொள்வர் என்றே நம்புகிறேன்.''

''உம்...உம்.''

''உங்கள் கருத்தில் யார்தாம் அலுவலகத்தில் வேலை செய்யலாம்?''

''மிக நெருங்கிய, பாங்கான, நம்பகமான, உறவினர்களிருந்து, குடும்பத்தை, குழந்தைகளைக் கவனித்துக் கொண்டால் மட்டுமே அலுவலகம் செல்லலாம்; பயனுண்டு.''

''இவ்விரண்டில் நீங்கள் எந்த வகை?''

''நான் என் மாமியாரின் ஒரே மருமகள்.''

''எனவே வீட்டிலிருக்கையில் அலுவலகம் பற்றியும், அலுவலகத்தில் வீட்டைப்பற்றியும் மாறி மாறிக் கவலைப்படாதிருக்கிறீர்கள்; சரிதானே?''

''அவ்வாறில்லை.''

''எவ்வாறில்லை?''

''விவிலிய நூலில், 'ஒருவர் இரு எசமானர்களுக்குக் கீழ்ப் படிந்து செயலாற்ற வியலாது' எனக் கூறப்பட்டுள்ளது.''

''அப்படியென்றால்?''

''அப்படியென்றால், இன்னும் சில ஆண்டுகள்வரை பணியாற்றிய பின்னர், என் குடும்பப் பொறுப்புகளை முழுவதும் ஏற்று, இல்லத்தைச் சிறப்பாக நடத்திச் செல்ல, என் வேலையைவிட்டு விலகுவேன். இதுவே என் விருப்பம்.''

''அப்படியா! அனுதாபங் கலந்த வாழ்த்துக்கள்.''

இயற்கையும் செயற்கையும்

நாகா

'பட்டினியால் வாடும் ஏழை மக்களைப் பார்க்கும்போது, எனக்கு ஓர் ஆவல் ஏற்படுகின்றது. வேதங்கள் கற்பது, கடவுள் வழிபாடு இவற்றை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, கிராமம் கிராமமாகச் சென்று பணக்காரர்களிடம் நம்முடைய ஒழுக்க சாதனைகளின்மூலம், அவர்களை மனம்மாறச் செய்து, அவர்களிடம் பணத்தை வசூலித்து, அதன்மூலம் என் முழு வாழ்வையும், ஏழைகளுக்குத் தொண்டுசெய்வதில் கழிக்கலாமா என எண்ணுகிறேன்.'

—விவேகானந்தர்

விவேகானந்த அடிகளாரின் இதய வேதனையை மேலேயுள்ள வரிகளால் அறியமுடிகின்றது. ஏழை மக்களின்பால் அவர் இதயம் எவ்வாறு இளகி, இந்த நாட்டிலே ஏழ்மையினை நீக்கி, இல்லாமையினைப் போக்கி, நல்லதொரு நிலையினை உருவாக்கிடவேண்டும் என எண்ணியதோ, அதே எண்ணம் என் கண்முன் நின்று நிழலாடுகின்றது.

நாடு நாடாக விளங்கிடவேண்டும், நல்லவர்களும் வல்லவர்களும் தோன்றிட வேண்டும், ஏழைகள் இல்லாது ஒழிதல் வேண்டும், இல்லாமை இல்லாது ஒழிதல் வேண்டும், கல்லாமை நீங்கவேண்டும்; இவற்றை யான் எண்ணுகின்றேன். பட்டினியால் வாடும் ஏழை மக்களைப் பார்க்கும் போது, எப்படி ஓர் ஆவல் விவேகானந்தருக்குத் தோன்றியதோ அதே போல, அளவோடு பெற்று வளத்தோடு வாழத்தெரியாது, அளவிலாது பெற்று வளமெலாம் இழந்து, வலிமை எலாம் அழிந்து, சிதைந்து போனதொரு நிலையினை ஏற்படுத்திக் கொண்டு, அப்படிப்பட்டதொரு நிலையினையும் 'வாழ்வு' என்னும் வசீகரச் சொல்லால் அலங்காரம் செய்து, ''எல்லாம் ஆண்டவன் செயல்'' என அவன்மீது பழியினையும் ஏற்படுத்தி வாழ்கின்ற, உயிர் வாழ்ந்திட நினைக்கின்ற மக்களைக் காணுகையில் ''ஏ ஆண்டவனே! உண்மையிலேயே நீ இருக்கின்றாயா? இருந்தால் இந்த மக்களிடம் நீ சென்று, 'எல்லாம் ஆண்டவன் செயல்' என்று என்மீது பழியினைப் போட்டு வாழ்கின்ற என்னருமை செல்வங்களே! நான் கொஞ்ச காலம் ஒதுங்கி நிற்கின்றேன். நீங்கள் எல்லாரும் 'இயற்கையும் செயற்கையும்' உணர்ந்து, 'உடலும் உணர்வும்' அறிந்து, மருத்துவர்கள் தருகின்ற கருத்துக்களுக்குச் செவிமடுங்கள், அவர்கள் தரும் அரிய கருத்துக்களைக் கேட்டிட, உங்கள் காதுகளைத் தீட்டி வைத்துக்கொள்ளுங்கள்'' என்று மக்களிடம் உபதேசம் செய்யுமாறு கேட்கத் தோன்றுகின்றது.

ஏன் அப்படித் தோன்றுகின்றது என்பதும் விளக்கிட வேண்டியதல்லவா? மனிதன் வாழப்பிறந்தவன். நன்மையும் தீமையும் உணர்ந்து, நன்மையினைக் கொண்டு தீமையினை விடுத்து வாழ்ந்திடும் ஆற்றல் பெற்றவன். எண்ணிய எண்ணியாங்கு எய்தி, திண்ணியனாக இருந்திடும் இயல்பும் உடையவன். அந்த ஆற்றல் மிக்க மனிதன் 'எல்லாம் ஆண்டவன் செயல்' எனப் பழி

யினைப் போட்டு, மழலைச் செல்வங்கள் - குழந்தைகள் அதிகம் பெற்று வாழ்ந்திட முனைதல் நல்லதன்று. உணரும் அறிவும் ஆற்றலும் உள்ள சிலருங்கூட, 'என்னால் என் செல்வங்களைக் காப்பாற்றமுடியும் எத்தனை பெற்றிட்டாலும்' எனச் செப்பித் திரிவோராக இருக்கின்றனர் என்பதை அறிகின்றோம். எத்தனை குழந்தைகள் பெற்று வளர்த்துவிட்டாலும், கொஞ்சகாலம் காப்பாற்றிட முடியுமே தவிர, மக்கள் தொகையின் வளர்ச்சிக்கு ஊறு இல்லை எனக் கூறமுடியாதல்லவா! நல்ல வசதியும் வாய்ப்பும் உடைய ஒருவருக்கு ஏழு குழந்தைகள் என்றால், அந்த ஏழு பேரும் வாழ்ந்திடும்போது, அவர்களும் அதே நிலையில் இருந்திட்டாரெனில் மக்கள் தொகையின் வளர்ச்சிக்குச் சொல்லவும் வேண்டுமா? இப்படியே வளர்ந்திடும் நிலை தொடர்ந்து நீடிக்குமேயானால், உலகம் முழுதும் மக்களே என்னும் நிலை ஏற்பட்டுவிடும். பார்க்குமிடமெல்லாம் நீக்கமற மக்கள் தோன்றுவார்களேயன்றி, இருந்திட இல்லம் இருக்காது; உணவு உற்பத்திக்கு நிலம் இருக்காது; இந்த வளர்ச்சி மனிதனை மனிதன் அடித்துத் தின்னும் ஒரு நிலைமைக்கு வந்து, பிறகு மாற வேண்டிய நிலை பிறந்திடும். எனவே மக்கட்பெருக்கம் குறைந்திடவேண்டும். அந்த எண்ணம்தான் ஆண்டவனை அழைத்து, மக்களிடம் அறிவுரை - உபதேசம் - செய்யுமாறு கூறிடத் தோன்றக் காரணமாகும்.

உணர்வுகள் தோன்றும்-இயற்கை. உணர்வுகளை அடக்கப் பழகி அடக்குதல் வேண்டும் - செயற்கை. இம் முறையிலே மனிதன் வாழ்ந்திட முயலவேண்டும். புலனடக்கம் இன்றியமையாதது. தன்னடக்கமும் புலனடக்கமும் வையத்து வாழ்வாங்கு வாழச் செய்யும். இங்ஙனம் வாழும் இயல்புடையோர் குழந்தைச் செல்வங்களைக் குறைவாகப் பெற்று, நிறைவான வாழ்வு வாழ முடியும். மற்றையோர் நிறையப் பெற்று, குறைவான வாழ்வுதான் வாழமுடியும். இந் நிலை அவர்கட்கும், சந்ததியினர்க்கும், வருங்கால உலகிற்கும் ஏற்றதன்று. எனவே தன்னடக்கமும் புலனடக்கமும் வேண்டும்.

உடல் உறவு, வாழ்க்கையின் மகிழ்விற்கும் பிணைவிற்கும் அவசியமே! இஃது இயற்கையின் கூறுபாடு. இந்த இயற்கையின் கூறுபாட்டிலே விளையும் 'எல்லாம் ஆண்டவன் செயல்' என்னும் நிலையினை மாற்றியமைப்பது செயற்கை. தன்னடக்கமும் புலனடக்கமும் இல்லாத சிலர்- இயற்கை உணர்வுகளுக்கு அடிமையாவோர்- செயற்கைவழி பின்பற்றி, நல்வாழ்வு கண்டிட முயலவேண்டும். இந்த முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்திட அமைந்துள்ள திட்டம் தான் 'குடும்பநலத் திட்டம்'.

வளர்ந்துவரும் நாகரிக உலகில், நாடு சுருங்கி, உலகமும் சுருங்கி நிற்கின்றது. 'உலகம் உய்ந்திடவேண்டும்' என ஒவ்வொரு நாட்டினரும் விழைகின்றார்கள். எனவேதான் குடும்பநலத் திட்டத்தின் வழி, மக்கட் பெருக்கத்தினைக் குறைத்திட யாவரும் முயற்சிகொண்டு உழைக்கின்றார்கள். இந்த முயற்சிக்கு-வீட்டு நலனுக்கு - நாட்டுநலனுக்கு - ஒத்துழைப்புத் தருதல் வேண்டும்.

புயல் ஏற்படுவது இயற்கை; அப் புயல் அறிந்து, அப் புயலினின்றும் தப்பித்திட முயன்று வழிதேடித் தப்புவது செயற்கை. புயலினின்றும் தப்பித்திட முயலவேண்டும்; முயன்று வழிகாணவேண்டும்; வழி அறிந்து தப்பிடவேண்டும். வழி இருந்தும் தப்ப நினைக்காது, அங்ஙனம் தப்புச் செய்ய நினைப்பது, நாட்டிற்குச் செய்யும் துரோகமாகக் கருத வேண்டியதொரு செயல். எனவே இயற்கையோடு ஒட்டி, செயற்கையும் கொண்டு வாழ்ந்திட வேண்டும்.

ஆதிமனிதன் அரிசி உணவுகள் கண்டு உண்டானா? இல்லையே! அறிவு மனிதன் அரிசி கண்டான்; அறிவு, அநுபவ மனிதன் அரிசி உணவின் சுவை கண்டான், உண்டான். ஆதி மனிதன் இயற்கையே கண்டான்; அறிவு மனிதன் இயற்கையும், செயற்கையும் கண்டான். அறிவு, அநுபவ மனிதன் இயற்கையும் செயற்கையும் கண்டுணர்ந்து திளைக்கலானான். இயற்கையும் செயற்கையும் இணைந்து பின்னிப்பிணைந்து, பணிபுரியுமிந் நாளில், 'குடும்பநலத் திட்டத்'திற்கும் அஃது அவசியந்தானே!

கிழங்கு, தண்டு, கனிகள் என இயற்கை உணவு உண்டு வாழவும் கூடும்; செயற்கையால் ஆக்கி உண்டு வாழவும் கூடும். அதேபோல இயற்கையால் கூடாமுறையில் அல்லது காலமறிந்து கூடி, கவினுறு வாழ்வு காண மனிதனால் கூடும் - இஃது இயற்கை. இந்த ஆற்றல், திறன், அதாவது புலனடக்கம் இல்லாத நிலை எனில், செயற்கை முறையில் (கருத்தடை சிகிச்சை - அறுவை போல்வன) சிறப்புற மனிதனால் வாழவும் கூடும்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

— குறள்

அஞ்சுகின்ற செயல்களுக்கு அஞ்சிடாது இருப்பது பேதமையாகும். அளவிற்கு மிஞ்சிடக் குழந்தைகள் பெற்று வாழ்ந்திட நினைப்பது இங்கே பேதைமையாகும். அஞ்சுவதற்கு அஞ்சல் அறிவார் தொழிலாகும். அளவிற்கு மிஞ்சிடாது (அளவு - இங்கே இரண்டே) எஞ்சிடாத குழந்தைகள் பெற்று, கொஞ்சி மகிழ்ந்து வாழ்வது இங்கே அறிவுடையோர் செயலாகும். எனவே அறிவுடையோராக - ஆற்றல் உடையோராக - இனிது வாழ்ந்து, 'நலம்பல செய்யவேண்டியவர்களாக இருக்க, இயற்கையும் செயற்கையுமென உடலும் உணர்வும் உணர்ந்து, வாழல் நன்று.

திட்டமிட்டு, கட்டுப்பாட்டுடன் வாழ முனைந்து வாழல் வேண்டும். நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மை இதுவே!

காய்கறி, பழச் சாகுபடிப் பரிசோதனைகளின் முக்கியக் கண்டுபிடிப்புகள்

(திண்டுக்கல்லில் நடத்திய மாதிரி உழவியல் பரிசோதனைகளின்படி)

* தக்காளி: தக்காளியின் மகசூலைத் தழைச் சத்துமட்டும் இடுவதின்மூலம் அதிகரிக்கக்கூடும். அதாவது. ஏக்கருக்கு 14 கிலோ தழைச் சத்து இட்டதில் அதிகமான மகசூல் கொடுத்துள்ளது.

* கத்திரி: தென்மேற்குப் பருவக் காற்றுக் காலம், வடகிழக்குப் பருவக் காற்றுக் காலம், கோடைப் பருவம் ஆகிய மூன்று பருவங்களிலும் ஏக்கருக்கு 14 கிலோ தழைச் சத்து இட்டதில் அதிக மகசூல் கண்டுள்ளது.

* வெங்காயம்: வெங்காயத்துக்கு ஏக்கருக்கு 14 கிலோ தழைச் சத்து, 54 கிலோ மணிச் சத்து, 14 கிலோ சாம்பல் சத்து இட்டதில் அதிக அளவு வெங்காய மகசூல் கிடைத்துள்ளது.

* வெண்டை: வெண்டைக்கு 28 கிலோ தழைச் சத்தும், 14 கிலோ மணிச் சத்தும், 23 கிலோ சாம்பல் சத்தும் இட்டதில் அதிக அளவு மகசூல் கண்டுள்ளது.

இங்கு நடத்திய பரிசோதனைகளில், எல்லாக் காய்கறிப் பயிர்களும், பொதுப்படையாக மணிச் சத்து, சாம்பல் சத்தைவிட, தழைச் சத்தைத்தான் அதிக அளவில் ஏற்றுக்கொண்டு அதிக மகசூல் கொடுக்கின்றனவெனத் தெரிய வந்துள்ளது.

(கோவை வேளாண்மைக் கல்லூரியும் ஆராய்ச்சிக் கூடமும் வெளியிடும் விவசாயச் செய்திக் கதிரிலிருந்து)

பணி தரும் விலை நலம்

பீ. சு. இளமுருகு பொற்செல்வி

பெருங்காயம் வைக்கப்பட்டிருந்த பாண்டத்தில் காயம் காலியான பின்னரும் காயத்தின் மணம் கமழத் தான் செய்யும். அதுபோல், திருவள்ளுவருடைய திருநாட்டில் பிறந்தவர் என்ற காரணத்தால், வாழவும், பிறரை வாழவைக்கவும் உரியவாழ்க்கையை நம் நாட்டில் காணமுடிகின்றது.

தமிழ்ச் சமுதாய மக்கள் தலை நிமிர்ந்து வாழ்ந்தவர்கள் என்பது உண்மை - இடைக்கால உறக்க நிலையை மறந்து இதனை நினைக்க வேண்டும்.

கொள்வது மிகைபடாதும், கொடுப்பது குறைபடாதும் நெறி மிக்க வாழ்வையே கைக்கொண்டவன் தமிழன் அன்று.

''ஈதல் இசைபட வாழ்தல்; அதுவே ஊதியம் உயிர்க்கு'' என்ற கோட்பாடுடைய சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்.

இவையெல்லாம் பழங்கதையாய், பகற்கனவாய்ப் போன செய்திகள்; ஆகவே, திருவள்ளுவர் சுட்டும் 'குடியியல்' நெறி ஒத்துவராதது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் என்னால் ஏனோ அதனை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

இம்மைச் செய்தது மறுமைக்காகும் என்று அறவிலை கூறாது தொண்டாற்றுபவர்களை நான் காணுகின்றேன். எவருக்காகப் பணியாற்றுகின்றார்களோ அவர்களாலேயே தாக்கப்படுகின்றவர்கள், தூற்றப்படுகின்றவர்கள் உண்டு. அதற்காக மனம் உடைந்து, பாதை மாறாது, மேலும் மேலும் பணியாற்றிவரும் தன்னலமற்றோரை நாம் இன்றும் பெற்று இருப்பதால்தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். நம்மை வாழவைத்த தெய்வம் அறிஞர் அண்ணா அவர்களாகும். எந்தச் சமுதாயத்தை விழிப்படையச் செய்து எழுச்சி கொள்ள வைப்பதற்காகப் பாடுபட்டார்களோ, அந்த மக்கள் தொடுத்த புன்மொழிகள், ஏசல்கள், ஏளனங்கள் ஏராளம். ஆயினும் பயன் கருதாது, கடமை என்று கருதிச் செய்து முடித்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களிடம் இருந்த சிந்தனை அடக்கம்தான்; எவரையும், 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று பேசுவது கிடையாது; அனைவரிடமும் ஒரே பாசம் பரிவு. இதனால் அறிஞர் பெற்ற புகழ் தமிழ்த் தரணியில் இனி எவராலும் பெறமுடியாத அளவு உயர்ந்தது. இதனைத் திருவள்ளுவர் தந்துள்ள திருக்குறளில் காண முடியும். ''நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம் வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு.''

நல்லவன் என்ற பெயர் எடுப்பதற்கு உள்ள உழைப்பு கூறமுடியாததாகும்; அப்படிப் பெற்றுவிட்ட நல்லவன் என்ற பெயரைக் காப்பது அதைவிடக் கடினமானதாகும்.

வெயிலின் கொடுமை அனைவரும் உணர்ந்த ஒன்று. ஆயினும் 106 டிகிரி வெயில் கொடுமை இருந்தாலும் ''ச்! அப்பா! என்ன வெயில், என்ன வெயில்!'' என்று கூறிக்கொண்டே காரியங்களைச் செய்துவிட முடியும்.

மழை! வாழ்க்கைக்கு இன்றியமை யாத தேவையுடையதாகும். மழை சற்றுக் காலந்தாழ்த்திஞல்கூட "மழையைக் காணேம், மழையைக் காணேம்'' என்று தவியாய்த் தவிப் பார்கள். இந்த நிலையில் இரண்டு நாட்கள் தொடர்ந்தாற்போல் மழை பெய்யத் தொடங்கிவிட்டால் போதும் ''பார்த்தீர்களா இந்த மழை செய்கின்ற அக்கிரமத்தை'' என்று புலம்பத் தொடங்கிவிடுவார் கள். மழையின் கதை இருக்கட்டும்; 'ஐயமிட்டு உண்' என்று கொள்கை வகுத்து ஓர் அம்மையார் வாழ்ந்து வருகிருர். தவருமல் வருபவர்க்குப் பிச்சை போட்டுக் கொண்டிருக் கிருர். ஒருநாள் ஏதோ காரணத் தால் ''நாளைக்கு வா, இன்று இல்லை'' என்று கூறுகிருர். இதைக்கேட்ட பிச்சைக்காரன் கோபங் கொள்ளு கிருன். ''என்றும் போடாத மகராசி தான் இன்றும் இல்லையென்கிருள். நாள்தோறும் போட்டுவந்த இந்தக் கழுதையுமல்லவா இன்று இல்லை யென்கிறது'' என்று திட்டுதலை வழங்குகிருன். நாள்தோறும் பிச்சை யிட்டு வாழ்பவர் ஒருநாள் தவறிஞல் 'கழுதை'யாகிவிடுகிருர். பிச்சை போடாதவரோ 'மகராசி'யாகிவிடு கிருர்.

இவை உணர்த்துவது என்ன? நல்லவனுடைய சிறு தவறும் பெரிதாகப் பிறருடைய பார்வையில் படும். தவறே செய்துகொண்டிருப்ப வர்களைப் பற்றிய கவலையோ கருத்தோ சமுதாயத்தில் ஏற்படுவ தில்லை யென்பதுதான்.

'ஒன்ருய் விடினும் உயர்ந்தாற் படுங் குற்றம் குன்றின் மேலிட்ட விளக்காகும்' என்ற முதுமொழி அதற்கு உவமையாகும்.

சந்திரனில் உள்ள சிறுசிறு கரும் புள்ளிகள்கூட ஏதோ பெரிய மாசு போல் பிறருடைய பார்வையில் படு கின்றதல்லவா? அதைப்போலவே, நல்லவர்கள்பால் ஏற்படும் சிறு அசைவு மாறுதல்கூடப் பெரிய தவ ருக உலகிற்குப் புலப்படும். ஆகவே, வாழ்க்கையில் நல்லவனுக வாழத் தொடங்குவதால் எவ்விதக் குற்றங் குறையுமற்ற வாழ்வு வாழும் விழிப் புணர்ச்சி ஏற்படும். அந்த நல்லவர் களால் சமுதாயம் பல பயன்களைப் பெற்று மகிழும்.

திருவள்ளுவர் இதனைத் தம் திரு வாய்மொழியாகக் ''குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து'' என்ற குறளில் கூறியிருக்கிருர்.

நம்முடைய நாட்டைப் பாதித்து வருகிற வறுமையும், பஞ்ச நிலையும் ஆண்டுதோறும் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையைத்தான் பெருக்கி வருகிறது; உணவுக் கான போராட்டம் அவர்களைத் தன்மான உணர்ச்சியைக் கூட இழக்கச் செய்து விடுகிறது. தர்ம சிந்தனையுள்ள வர்கள் அவர்களுக்கு வேலையேதேனும் அளித்து அதன் மூலம் அவர்கள் வாழ்க்கை நடத்துதற்கு வகை செய்வதற் குப் பதிலாக, அவர்களுக்குப் பிச்சை போடுவதிலேதான் ஈடுபட்டு வருகின்றனர்.

— அண்ணல் காந்தி

கிராமத்தில் வள்ளுவர்

டி. என். சுகி சுப்பிரமணியன்

அ

புரட்சிக் கவிகள், ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழக்கூடிய கவிகள், என்றும் நிலைத்திருக்கும் உண்மைகளைச் சொல்லுவார்கள். எவரும் எளிதில் காணக்கூடிய உவமையுடன் கூறுவார்கள். தனிமனிதர்களுக்குப் பயன்படத் தக்க விதத்திலும் சொல்லுவார்கள். சமுதாயமாக வாழத்தக்க சூழ்நிலைக்குப் பொருந்துவதையும் சொல்லுவார்கள்.

இவர்கள் தம் கவிதையிலே எளிமையும் இனிமையும் இருக்கும். சூடும் சுவையும் திறம்பட அமையும். கருத்தும் கனிவும் பழச்சாறுபோலத் ததும்பி நிற்கும்; தான் உண்ணவும் பயன்படும்; பிறருக்கு ஊட்டவும் பயன்படும். இவையே இக் கவிதைகளின் பெருஞ் சிறப்பு.

வள்ளுவர் இத்தகைய கவிதை நூலை இயற்றித் தந்த மாபெரும் புலவர், புரட்சிக்காரர், புதுமைச் சித்தர்.

ஆ

உயிர்வாழ வேண்டுமென்ற ஆசையுள்ள மக்கள் கூட்டம், நிலமும் - நீரும், பசுவும் - எருதும், பூவும் - மணமும் நிரம்பிய பகுதியைத் தேர்ந்தெடுக்கும். அல்லது வளத்தை உண்டாக்கும். ஏனெனில் வளமிக்க பகுதிதான் மக்கள் தொகைக்கு உயிரூட்டும் உணவுச்சாலை.

வளம் என்பதே நெல்லும் கரும்பும் பாலும் தேனும் பூவும் கனியும் செழிக்கும் நிலை.

நிலந்தரும் வளத்திற்குப் புறம்பான இயந்திர உற்பத்திச் செழிப்புகள் யாவும், விளையும் மண் மகசூலுக்குள் வந்து தலை வணங்கவேண்டும்; மண் விளைவித்த விலைவாசிக்குள் வந்து ஒன்றிப்போய்க் கைகட்டி நிற்க வேண்டும். நிலத்தின் விளைச்சல் இல்லாது போனால், ஏனைய உற்பத்திப் பொருள்கள் யாவும் பிணத்திற்குச் செய்த அலங்காரப் பொருளுக்குச் சமம்.

மற்றைய வளங்களுக்குத் தாய்ச் சரக்காக இருப்பது மண் வளம் ஒன்றே.

எனவே நிலம் - நீர் இரண்டும் மனித வளர்ச்சியின் மருத நிலப் பகுதிகள் ஆகும்; மாருதம் வீசும் இனிய நிலப்பரப்புகள் ஆகும்.

இது காரணமாகவே கிராமப் பகுதிகளை நாட்டின் முதுகெலும்பு, நாட்டின் குருதி நாளங்கள், நாகரிகத்தின் நாற்றங்கால்கள் என்று வணங்குகிறோம், வழிபடுகிறோம்.

மனித குலத்தின் அழிவுக்கு அடிப்படை பசி; நெருப்புப் போன்ற பசி எதையும் அழிக்க வல்லது; பசிக்குப் பயப்படாத கூட்டமே எதையும் ஆக்க வல்லது; ஆதரிக்கவும் வல்லது.

எனவே உழவர்களின் செயல் திறமையே உலகத்தின் திட்டம். அவர்கள் கர்ணமகாப் பிரபுக்கள், அவர்கள் எங்கு வாழ்கிறார்களோ அங்கு இருப்பதுதான் சொர்க்கம். மற்றைய நிலப்பகுதிகள் நிலப்பரப்பின் போலி இடங்கள்; நரகங்கள் அல்லது நகரங்கள்.

இ

வள்ளுவர் கிராமத்தின் சூழ் நிலையை நன்கு உணர்ந்தவர். மண்ணுக்குள் மனத்தைப் பதிய விட்ட மாமதியாளர். மண்ணை நம்பும் மனிதர்களை மதிக்கும் மாகவிஞன்.

மண் தோண்டும் கூட்டத்தைப் பார்க்கிறார். உடனே அவருக்கு பொறுமையின் சிகரம் நினைவுக்கு வருகிறது. நம்மை இகழ்ந்தவர்களை நாம் பொறுமையுடன் பொறுத்துக் கொள்ள வேண்டும். நிலத்தின்மீது நின்று அதனைத் தோண்டுவது போன்று, நம்மை நம்பியவர்கள் நமக்குக் குழி தோண்டும் போதும் நாம் பொறுத்துக் கொள்வதே தலையாய செயல். (1)

நிலத்தைப் பார்த்த வள்ளுவர், அதன்மீது கட்டடங்கள் கட்டுவோர், கோபுரம் எழுப்புவோர், நிலத்தை நம்பித் தொழில் படுவோர், இவர்களைப்போன்ற பலரையும் பார்த்தார். நிலத்திற்கு மேலாக எழில் தருவோரை மறந்தே விட்டார். நிலத்தோடு தொழில் படும் உழவர்களை - அவர்கள் வாழ்வே அரச வாழ்வு என்பதை, உழவுக்குப் புறம்பான ஏனைய வாழ்வு முறைகள் அடிமை வாழ்வு என்பதை அவர் அழுத்தமாகக் கூறியுள்ளார். அவர் காணும் முடிவு உழுதுண்டு வாழ்வதே வாழ்வு. (2)

''பிழைப்புக்கு வழி இல்லையே'' என்று சொல்லுகின்ற மக்களை இன்னும் பார்க்கிறோம். இத்தகைய மக்கள் கூட்டத்தைப் பார்த்து நிலமகள் - மண்மாதா சிரிக்கிறாள்! மனிதனை நம்பிப் பாடுபட்டால் ஒரு சமயம் மோசடி செய்வார்கள்; சோம்பேறி யாக்குவார்கள்; பட்டினி போடுவார்கள். ஆனால் நிலமகளை நம்பிப் பாடுபடுகிறவனை அவள் பட்டினி போட மாட்டாள்; பிழைக்க வைப்பாள். உழைப்பவனுக்கு நிலமகள் அரசவாழ்வு தருவாள். உழைக்காமலும் பிழைக்காமலும் சோம்பி இருப்பவனைக் கண்டு நிலத்தாய் சிரிக்கிறாள். (3)

ஈ

நிலம் என்றால் அங்கே நீர்த்தேக்கங்கள், குளம், ஏரி, ஊருணி, வாய்க்கால், வடிகால் என்றெல்லாம் அமைந்திருக்கும். நீர்த்தேக்கங்கள் நிலத்தாயின் குருதிநாளங்கள் - ஊற்றுக் கண்கள். இந்த நீரும் நிலமும் இணைந்த பூமியைத்தான் உழவன் தன் இரு கண்களாகப் பார்க்கிறான்; பாதுகாக்கிறான்.

தண்ணீரின் அருமை நமக்குத் தெரியும்; அதனை அநுபவிக்கவும் உவமைப் படுத்தவும் கவிகளுக்கே தெரியும்.

தாமரை பூத்த தடாகம். காணக் கண் கோடிவேண்டும். தண்ணீரின் மட்டம் உயர்ந்தால் பூவின் தண்டுகள் உயருகின்றன; மட்டம் குறைந்தால் பூவின் தண்டுகள் தளர்ந்துவிடுகின்றன. இந்தப் பூக்களின் வளர்ச்சியைப் பார்த்த கவிஞர் மனித மனத்தின் ஊக்கத்திற்கு உவமைப் படுத்துகிறார். மன ஊக்கம் என்பது தாமரையின் பூப்போல வளர்ச்சி பெற வேண்டும். (4)

ஊருணி நிரம்பினால் அஃது ஊர் மக்களின் பொதுச் சொத்து. அஃது ஊரின் நீர்க் களஞ்சியம். அறிவின் மிக்காரிடம் பணம் குவிகிறது; அதுவும் ஊருணி நீர் போன்று ஊராருக்குப் பயன்படும். நல்லோர்கள், சான்றோர்கள் தண்ணீர் பட்ட பாடாகத் தம் செல்வத்தை ஊருக்கும் உலகத்திற்கும் பயன் செய்வார்கள். (5)

பணம் ஒருவரிடம் நிரம்ப இருந்தால்அஃது எப்படியோ வெளிப்படையாகத் தெரியும் - ஊருணி நீரைப் போல. ஆனால் கல்வி இருக்கிறதே அது வெளிப்படையான காட்சி இல்லை. உள்ளடங்கிய ஊற்று. அதிலும் மணற் கேணி என்பதே பொருந்தும் என்கிறார் வள்ளுவர். தோண்டத் தோண்ட மணற்கேணி தண்ணீர் தரும். கல்லக் கல்லக் கல்வி மேம்படும். (6)

உ

நிலமும் நீரும் எங்குள்ளனவோ அங்கே பூவின் அருங்கலங்களைக் காணலாம். பூவும் பணமும் ஒரே தன்மையுடையவை.பூக்கள் செழுமையின் விளக்கங்கள். பொருள் கிடைப்பதும் பூக்களின் செழுமை போன்றதே. ஏழையாகப் போனவன் ஏதோ ஒரு சமயம் முயன்று முயன்று பூ பூப்பதைப்போல பணத்தை மீண்டும் பெற்று விடலாம். பூவின் காட்சியும்

பொருளின் காட்சியும் ஒன்றே. பொருளை இழக்கத் துணிந்தாலும் துணியலாம். அருளை இழந்தால் இழந்ததுதான். அருளை இழக்கக் கூடாது. இந்த உண்மை, பூவின் அடிப்படையில் பிறந்த உண்மை. (7)

பூ என்பது மகிழ்ச்சியின் சின்னம். பூவைக் காண்பதும் முகர்வதும் மனத்திற்கு மகிழ்ச்சி தருகிற காரியங்கள். பூவின் மலர்ச்சியை வருகிற விருந்தாளி முகத்தில் பார்க்கலாம். கொஞ்சம் நம் மனம் கோணிப் போனால், அனிச்சமலர் போன்று வாடிவிடும். முகர்ந்தால் மலர்வாடும். நோக்கினாலே விருந்தாளிகள் முகம் வாடும். அனிச்சப் பூவினை நினைந்து விருந்தோம்பல் முகமலர்ச்சியுடன் செய்க என்பது இல்லறத்தார்க்கு வள்ளுவர் தரும் பூங்கொத்துக் குறள். (8)

பேச்சினிலே கனிவுவேண்டும்; சொற்களிலே இனிய சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேசவேண்டும். இவ்வாறு இனிய சொற்களைப் பேசாமல் இனிமை யல்லாத சொற்களைப் பேசுவது கனி இருக்கும்போது காயைத் தின்பதற்குச் சமம். காயைத் தின்பன பறவை, குரங்கு போன்ற அறிவு குறைந்த பிறவிகள். அறிவின் மிக்கவர்கள் கனியைத் தேர்ந்தெடுத்து உண்பார்கள். (9)

ஊ

நிலம் - நீர் - பூ - கனி போன்ற பொருள்கள் கிராமத்தின் உயிர் நாடிகள். வள்ளுவர் இயற்றிய குறட்பாக்களில் மரம், பறவை, மண், மலை போன்ற உவமைகள் நிரம்ப வருகின்றன.

நிலம், நீர், பூ, கனி இவற்றிற்குப் பெருமை தருவதற்காகவா கவிஞர் உவமை காட்டினார்? அன்று அன்று. அங்கு வாழும் மக்களுக்கும், அவர்கள்தம் மனத்திற்கும் செயலுக்கும் மதிப்புத் தருவதற்காகப் பாடினார் கவிஞர்.

இவர் போன்று, உழவு - ஏர் - எருவிடுதல் - ஊருணி - மணற் கேணி நிரம்பிய கிராமச் சூழ்நிலையை அறிவுக் கண்ணும் அன்புக் கண்ணும் கொண்டு பாடியவர் வேறு யார்?

இவர் இயற்கை தந்த கவிஞர்; கிராமத்தார் வாழ்வையும் வாழ்க்கையின் தொழிலையும் பிரதிபலிக்கும் உழைப்பாளிக் கவிஞர்; உழைப்பை வாழ்த்திய உத்தமர்.

கிராமத்தின் களம் கண்ட கவி இவரே! கிராமத்தின் வளம் கண்ட கவி இவரே! கிராமத்தார் உளங் கண்ட கவி இவரே!

எனவே இவர் உலக மகா கவியாக இன்றும் வாழ்கிறார்; என்றும் வாழ்வார்.

இக் கட்டுரையில் இடம்பெற்ற குறட்பாக்கள் :

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
   இகழ்வார்ப் பொறுத்தல் தலை.
2. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
   தொழுதுண்டு பின்செல் பவர்.
3. இலம்என் றசைஇ இருப்பாரைக் காணின்
   நிலம்என்னும் நல்லாள் நகும்.
4. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
   உள்ளத் தனைய துயர்வு.
5. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
   பேரறி வாளன் திரு.
6. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
   கற்றனைத் தூறும் அறிவு.
7. பொருள்அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்
   அற்றார்மற் றாதல் அரிது.
8. மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
   நோக்கக் குழையும் விருந்து.
9. இனிய உளவாக இன்னாத கூறல்
   கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

உறுப்பினர்கள்

1. முத்தையன் — ஊராட்சித் தண்டலர்
2. பாலசுந்தரம் — தெளிவற்ற முரடன்
3. சித்தலிங்கம் — தன்னலம் மிகுந்த செல்வர்
4. பொன்னன் — சித்தலிங்கத்தின் பணியாள்
5. மணிமாலை — முத்தையனின் நல்ல மனைவி
6. கோமதி — பாலசுந்தரத்தின் பொல்லாத மனைவி
7. பொற்கொடி — சிறுமி

மற்றும் சிலர்

காட்சி 6

இடம் : சித்தலிங்கம் வீடு. காலம் : பிற்பகல்.

(சித்தலிங்கமும், பொன்னனும் இருக்கின்றனர்.)

சித்த : டேய் பொன்னா!

பொன் : எசமான்.

சித்த : ஏமாந்த விதவை சொர்ணத்தோட பணத்தாலே பிரபுவான குடும்ப ரகசியம் தெரியும்னு சொன்னானே முத்தையன்; அந்தப் பயலுக்கு இது எப்படியடா தெரிஞ்சிருக்கும்? ஊரெல்லாஞ் சொல்லுவானே?

பொன் : காலங் கெட்டுப் போச்சுங்க எசமான்! முன்னையெல்லாம் பெரியவங்க எவளை வைப்பாட்டியா வச்சிக்கிட்டாலும் வாயைப் பொத்தி, மட்டு மரியாதையா பேசுவாங்க. பணத்துக்கு அச்சமும், அந்தஸ்துக்குப் பெருமையும் இருந்தது. இப்பவெல்லாம் யாரு செஞ்சாலும் தப்புன்னா, ஒடனே முச்

சந்தியிலே டப்பு டப்புன்னு போட்டு ஒடைக்கிருனே!

சித்த : பொன்னு! அந்தச் சங்கதி வெளியே யாருக்கும் தெரியக் கூடாது. என்மானமே போயிடும்! எப்படியாச்சும் இதைப் பரவாமெ அடக்கணுமே என்னடா வழி?

பொன் : எசமான்! எந்தக் குடும்பத்திலியும் ஒரு கெட்ட பழக்கம், தப்புதண்டா இல்லாமெ இருக்காது. மூத்தையனுடை குடும்பத்திலேயும் ஒரு ரகசியம் வெளிப்படாமெ தூங்குதாம் எசமான்.



சித்த : எங்கெடா தூங்குது? எப்படிடா தூங்குது?

பொன் : ஒரு வெள்ளிப்பேழைக் குள்ளார கண்ணை மூடிக் கெடக்குதுங்களாம்!



சித்த : அப்படியா? இருக்கும். இருக்கும். அது என்ன ரகசியம்டா?

பொன் : அதுதானுங்க அந்தக் குடும்பத்துக்கே தெரியாத பரம ரகசியமாம்!

சித்த : அடே! அதெப்படிடா ஒனக்குத் தெரிஞ்சுது?

பொன் : அப்படி ஒரு ரகசியம் இருக்கறது தெரிஞ்சுது. அது என்ன ரகசியம்னு தெரியணுமே, எசமான்!

சித்த : இருக்கற ரகசியம் எப்படித் தெரிஞ்சுது?

பொன் : கள்ளுக்கும் காதலுக்கும் ரகசியம் இல்லேம்பாங்க. போதையிலே இருக்கறப்போ முத்தையனோட அண்ணன் பாலசுந்தரம் சொன்னாருங்க.

சித்த : (துணுக்குற்று) அப்படியா?... போதையிலா?... ஊம்.

பொன் : அவங்க அப்பன் சிறு வயசிலே அனாதைப் பையனா தெருவுலே திரிஞ்சவராம்; எப்படியோ தமிழைப் படிச்சிப் புலவனாயிட்டாராம்! பாக்கறதுக்கு அழகா இருப்பாராம், எங்கேயோ எப்படியோ, என்ன நடந்ததோ; பணத்தைச் சேத்துட்டாரு! சொத்து சொகம், வீடு வாசல் கெடைச்சிட்டுது. மனைவி மக்களோடு நாலுபேரு மதிக்கிற விதமா பொழச்சிட்டுச் செத்தாராம். அந்தக் கெழவர் மூடிவச்ச ரகசியப் பெட்டியாம் அது. இன்னமும் தெறக்கலே!

சித்த : ஒஃகோ!... அனாதை எப்படிடா ஆஸ்திசேர்க்க முடியும்? ஏதோ நடந்திருக்குது. அவன் குறுக்கு வழியிலே என்னமோ பண்ணித்தான் பணம் சேர்த்திருக்கறன். பொன்னா!

பொன் : எசமான்!

சித்த : அந்த வெள்ளிப் பேழை ரகசியத்தை நாம்ப தெரிஞ்சுக்கணுமே!

பொன் : தெரிஞ்சுக்கலாம் எசமான்! சிவன் கோயில் தரும கர்த்தா சித்தலிங்கப் பிரபு நெனச்சது நெறைவேறலேங்கற சரித்திரமே

கெடையாதுங்களே. எதுக்கும் பணவிஷயத்திலே பாலுகிட்டே கொஞ்சம் தாராளமா நடந்துக் குங்க.

சித்த : இதென்னடா பொன்னு! வரவர எதுக்கெடுத்தாலும் என்னேட பையிலியே கையைப் போடறே! நியாய பாயம், பஞ்சாயத்து பைசல்னு யாரையாச்சும் தள்ளிக்கிட்டு வந்தா செலவுக்குச் சௌகரியமா இருக்கும்! நம்ம நெலமைக்கும் கௌரவமா இருக்கும்!

பொன் : ஊருக்குள்ளே சண்டை சச்சரவு, அடிதடி, தகரூரு தண்டா முன்னைப்போல நடக்கறதில் லீங்க. ரொம்பக் கொறைஞ்சு போச்சுங்க!

சித்த : ஏண்டா கொறஞ்சுது? எப்ப டிடா கொறையலாம்? அப்படின்னு ஊருக்குள்ளே பெரியவங்களுக்கு மதிப்பில்லேன்னு சொல்லு.

பொன் : அப்படிச் சொல்ல முடியுங் களா? அந்த மதிப்பு எங்கே போகும்? தோ பாருங்க. பாலசுந் தரம் வர்ருருங்க.

[பாலசுந்தரம் வருகிருன்]

சித்த : வா, பாலு! வா, உட்கார்.

[இருவரும் உட்காருகின்றர்]

பால : காப்பிக் கடைக்கு வேண்டிய சாமான் சட்டெல்லாம் பார்த் தாச்சுங்க, ஆனு ஒண்ணு...வந்து...

சித்த : என்ன பாலு? தாராளமா சொல்லு.

பால : கடன் வாங்க நான் கையெழுத்துப் போட மாட்டேங் கருன், ஏந்தம்பி முத்தையன். என்னு பண்றதுண்ணு எனக்குத் தெரியலே!

பொன் : என்னு பண்றது? தம்பி யோட யோக்யதை அவ்வளவு தான். மகாப்பிரபு மனசு வச்சா ஒங்களோட ஒரு கையெழுத்துக்கே பணங்குடுக்கலாம். இல்லே, ஒங்க தம்பியோட கையெழுத்தையும் பக்கத்திலே போட்டுடுங்க. எப்ப டிங்க எசமான்?

சித்த: (யோசித்த வண்ணம் நடந்து) இது ரெண்டுமே வேணும். அட மானப் பத்திரத்துக்குப் பதிலா ஆயிரத்துக்கு ரெண்டாயிரமா எழுதிக்குவோம். பாலுவும் அவனேட பெண்டாட்டியும் கையெழுத்துப் போட்டா போதும்.

பொன் : ஆஃகா! இது நல்ல யோசனை.

சித்த : ஆனு ஒண்ணு...

பால : என்னங்க?

சித்த : கண்டிப்பா ஆறு மாசத் திலே கடனைக் கட்டிப் போடணும். அதுக்குமேலே ஒரு பிட்டு வாய்தா கேக்கப்படாது.

பால : அதுக்கென்னங்க. அப்படியே கட்டிப்பிடரும். ''கடையைத் திறங்க; ஆறு மாசத்திலே ஆயிரம் சம்பாதிச்சுக் காட்டறேன்'' என் கிரு எம் பொண்டாட்டி கோமதி.

சித்த : ஓ! அப்படியா? உன் பெண் டாட்டி அழகிலே மட்டுமல்ல; பேச்சிலே மட்டுமல்ல; காரியத் திலேயும் கெட்டிக்காரி. செய்தே காட்டுவாள். அப்படீன்னு... பொன்னு!

பொன் : எசமான் சிவன் கோயில் தருமகர்த்தா சித்தலிங்கப்பிரபு நெனைச்சது நெறைவேறலேங்கிற சரித்திரமே கெடையாதுங்களே!

சித்த : டேய்! மொதல்ல கோயிலுக் குப் போயி குருக்களைக் கூட்டிக் கிட்டுவா, பாண்டு எழுத.

பொன் : தோ, வந்துட்டேனுங்க. அப்படியே ஒரு கும்புடு போட் டுட்டு வந்திடறேன். கற்பூரத்துக்கு ஒரு கால் ரூவா...

சித்த : (பணம் எடுத்துக் கொடுத்து) ஒரு கால் அல்லடா, இருகால்! இதை காபிக் கடையிலே கொடுத் திடாதே! கற்பூரக் கடையிலேயே கொடுக்கணும்.

பொன் : ஆகட்டுமுங்க. கற்பூரம் - காபி, காணுவுக்கும் காவன்னுவுக் கும் தேவை ஒரு காலுதானுங் களே. தோ? ஒத்தைக் கால்லே வந்திட்டேன்.

[வேகமாகப் போகிருன்]

(தொடரும்)

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து

சிறிய ஊர்; பெரிய செயல்

மத்தியப் பிரதேசத்திலுள்ள, கௌதம்பூர் என்னும் சிறிய ஊரில் 35 குடும்பங்களுக்கு மறுவாழ்க்கை அமைத்துத் தரப்பட்டது. இவர்கள் அரிசனங்களும், பழங்குடி மக்களு மாவர்.

இவ்விரண்டு சமூகத்தினரும், குடும்பப் பாசத்துடன் ஒற்றுமையாக வாழ்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கை முறை, எவ்வாறு ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறதோ, அதேபோன்று குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திலும் அவர்கள் காட்டிய ஆர்வம் பிறரால் பின்பற்றத் தக்கதாயிருக்கிறது. இங்குள்ள குடும்பத்தினரில் 80 சதவீதத்தினர் குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொண்டுள்ளனர்.

இச்சிறிய ஊரிலே, 12 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன; 14 மகளிர், கருத்தடை வளையம் அணிந்துள்ளனர். தவிர மூன்று தம்பதிகளுக்குக் குழந்தைகளே கிடையா.

முதன்முதலாக, அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன்வந்தவர் திரு. லாலு என்ற அரிசன உழவர். அவருக்கு அப்போது வயது 46; ஏழு குழந்தைகளுக்குத் தந்தையாகி, நான்கை இளமையிலே இழந்தவராயிருந்தவர். இவருடைய செய்கையைக் கண்ணுற்ற ஏனைய தந்தையரும் அறுவை சிகிச்சைக்குத் தாமாகவே முன்வந்தனர்.

இன்றைய நிலையே வேறு

வளமான வேளாண்மைக்கு நிலையான நீர்ப்பாசனம் இன்றியமையாததன்றோ? எனவேதான் அனைத்திந்தியத் திட்டங்களிலும், மாநிலத் திட்டங்களிலும் பாசன வசதிகளுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது.

மகாராட்டிர மாநில அரசு பாசனத் திட்ட வேலைகளுக்கு முதலிடம் அளித்துக் காரியமாற்றுகிறது.

மகாராட்டிர மாநில மழையின் அளவு மிக்க வேறுபாடுடையது. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் 150 அங்குலமும், கிழக்குப் பகுதிகளில் 25 அங்குலமும் சராசரியாக மழை பெய்கிறது. எனவே சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களின் அவசியம் மிகுந்த முக்கியத்தைப் பெற்றுள்ளது இயற்கையே.

உச்ச வரம்புகள் :

அணைக்கட்டுகள், பாசனக் குளங்கள், குழாய்க் கிணறுகள், நீரேற்றும் பாசனத் திட்டங்கள் ஆகியவை சிறிய நீர்ப்பாசனத்தில் அடங்குவன; இவையெல்லாம் மாநில அரசாலும், ஊராட்சிப் பரிசத்களாலும் மேற்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படுகின்றன. தற்போதுள்ள விதிமுறை

களின்படி, ஊராட்சிப் பரிசத்கள் ரூபாய் ஐந்து இலட்சம் வரை செல விட்டு 250 ஏக்கர்களுக்குப் பாசன வசதி செய்யலாம். மாநில அரசு ரூபாய் பதினைந்து இலட்சம் வரை செலவிட்டு, 250 ஏக்கர்களுக்கு மேலுள்ள பரப்பளவிற்கு நீர்ப்பாசன வசதி செய்து தரலாம்.

நாடு விடுதலை யடைவதற்கு முன் னர், பாசனத் திட்டங்களெல்லாம் மக்களுக்கு வேலை தரவேண்டுமென்ற கண்ணோட்டத்தில் மேற்கொள்ளப் பட்டன; ஆனால் இன்றைய நிலையே வேறானது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 47,400 ஏக்கர்களுக்குப் பாசனம் அளிக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவை 90,000 ஏக்கர்களுக்கு உயர்ந்தன. அடுத்துச் செயற்படுத்தப்பட்ட மூன் றாவது திட்டக் காலத்தில் 1,80,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி விரி வாக்கப்பட்டது. நான்காவது திட் டத்தில் 1,70,000 ஏக்கர்களுக்கு இவ் வசதியை விரிவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

சிறிய நீர்ப் பாசனத் திட்டத்தின் உச்ச வரம்பான ரூபாய் பதினைந்து இலட்சத்தை, ரூபாய் இருபத்தைந்து இலட்சமாக உயர்த்தலாமா என்பது மைய அரசின் ஆய்வில் இருக்கிறது. இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டால், சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பெரு வெற்றி கிட்டும் என்று கருதப்படுகிறது.

உங்களைப் போன்ற உழவர்களின் சாதனைகள்

கட்டக் மாவட்டத்திலுள்ள சேந்தபூரைச் சார்ந்த பட்டதாரி இளம் உழவர், திரு. விஸ்வநாத் தாஸ், படித்துப் பட்டம் பெற்றோ ரெல்லாம் வேளாண்மையில் ஈடு படின் நாட்டின் உணவுப் போதாமை சில ஆண்டுகளிலேயே ஒழிந்து மறைந்துவிடும் என்கிறார்.

1·5 ஏக்கர் நிலத்தில், ஐ. ஆர்-8 நெல்லைப் பயிரிட்டார் திரு. விஸ்வ நாத். முறையாக உரமிட்டு, நீர் பாய்ச்சி, பூச்சி மருந்து தெளித்து வேளாண்மை செய்ததில், அவர் ஏக்கருக்கு 161 மணங்கு அறுவடை செய்துள்ளார். மற்றத் தாழ்ந்த இனத்தைக் கொண்டு கிடைக்கும் விளைச்சலைக்காட்டிலும், ஐ. ஆர்-8 இனத்தினால், அவருக்கு எட்டு மடங்கு கூடுதல் விளைச்சல் கிடைத் துள்ளது.

அவரைவிட இவர் :

அதே ஊரைச் சார்ந்த திரு. சவுத்திரி சந்திரா ரே என்பவருக்கு ஒன்பது மடங்கு அதிக விளைச்சலைத் தந்துள்ளது ஐ. ஆர்-8. இவர் 164 மணங்கு உற்பத்தி செய்துள்ளார். செலவை நீக்கி எஞ்சிய ஆதாயம் ரூ. 2850 ஆகும்.

இதே ஓர் ஏக்கர் வயலில், சென்ற ஆண்டு 191 மணங்கு அறுவடை செய்த, திரு. ரே விற்கு, இவ்வாண்டு ஏன் குறைவான விளைச்சல் கிடைத் துள்ளது? பற்றாக்குறைப் பாசன மும் நெடுநாட்கள் சென்றபின் வேளாண்மை தொடங்கியதுமே இதற்குக் காரணங்களெனத் தெரிந் துள்ளது.

இவர் வேறு :

பரத்பூரில் திரு. சென என்ற உழவர், ஐ. ஆர்-8ஐ இரண்டு ஏக்கர் நிலத்தில் பயிரிட்டார். இவருக்கு ஏக்கர் ஒன்றில் 165 மணங்கு நெல் கிடைத்தது. வட்டார வளர்ச்சி அலுவலர், வேளாண்மை வளர்ச்சி அலுவலர், ஊராட்சித் தலைவர் ஆகி யோரின் முன்னிலையில் இவர் வயல் அறுவடையாயிற்று. ஏக்கருக்கு ரூ. 550 மட்டுமே செலவிட்ட இவருக்கு, ஏக்கருக்கு ரூ. 3000 வருவாய் கிடைத்தது.

என்னே ஐ. ஆர்-8இன் மகிமை!

எளிதாகக் கடன் பெற...

உத்தரப்பிரதேசத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக, ஆண்டு தோறும் ரூ. 66 கோடி கடனளிக்கப் படுகிறது. இத்தொகை நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 250 கோடிக்கு உயர்த்தப்படும்.

உத்தரப்பிரதேசத்திலுள்ள உழவர்கள் குறுகிய காலக்கடனாகத் தற்போது ரூ. 1,500 வரை பெற இயலும். இது ரூ. 5,000 வரை கூடுதலாக்கப்படும். சில சிறப்பான நேர்வுகளில் ரூ. 5000க்கும் அதிகமாகக் கடன் அளிக்கப்படலாம்.

கடன் அளிப்பதற்குள்ள விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் தளர்த்தப் பட்டுள்ளன. தளர்த்தப்பட்டுள்ள முறைகளைப் பின்பற்றி, எருதுகள் பசுக்கள், பாசனக் கருவிகளை எளிதாகப் பெற்றுக்கொள்ளலாம். நடைமுறையிலுள்ள விதிகளின்படி, உச்ச அளவாக ரூ. 1000 கடன் பெறுதற்கு இரண்டு பிணைப்பாளர்கள் மிக்க அவசியம். இதே இரண்டு பிணைப் பாளர்களைக் கொண்டு, இனி ரூ. 3,500வரை கடன் பெறக்கூடும். இதற்கு மேலும் கடன் வேண்டுமெனில் தம்முடைய நிலங்களை அடகு வைத்துக் கடன் பெறலாம்.

'காசோலை' மூலமாகக் கடன் வழங்கும் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் ஒரு சோதனை முயற்சியாக விரைவில் நிறைவேற்றப்பட விருக்கிறது.

படிப்பீர், பயனடைவீர்

கேரளத்தில் 15 வயதிற்குக் குறைந்தவர்கள், 41 சதவீதத்தினராவர். எனவே இங்குள்ள பள்ளிகளிலெல்லாம் பெரும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது இயற்கையே. மாநில அரசின் நிதியில், பெரும் பகுதி கல்விக்கெனச் செலவிடப் படுகிறது.

கேரளத்திலுள்ள மக்களில் 85 சதவீதத்தினர், ஊர்ப்புறங்களில் வாழ்கின்றனர். இவர்களில் 50 சதவீதத்தினர், வேளாண்மையைத் தழுவியுள்ளனர். எனவே நிலத்தைச் சார்ந்து வாழ்வோரின் எண்ணிக்கை மிகுந்துள்ளது; ஆனால் போதிய நிலம் இங்கில்லை. இங்குள்ள ஒரு சதுர கிலோ மீட்டரில் 536 பேர்கள் வாழ்கின்றனர். இம் மக்கள் தொகை நாட்டிலுள்ள எஞ்சிய பகுதிகளைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாகும்.

அன்றும் இன்றும் :

எனவே மக்கள் தொகையைக் குறைத்து, வளமான வாழ்விற்கு வழிகோல, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் இங்குத் தீவிரமாகச் செயற்படுத்தப்படுகிறது. இவ்வாண்டு மார்ச் திங்கள் வரை 2,94,000 கருத்தடை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. ஏறக்குறைய இதே காலத்தில் 1,50,000 மகளிர்க்குக் கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

பத்தாண்டுகளுக்கு முன்னர், கேரளத்தின் பிறப்பு 3·9 சதவீதமாயிருந்தது. தற்போது 2·5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் வாழ்க்கையை நடத்துதலே மிக்க சிரமமானதொன்று. நிலப் பஞ்சம்; தொழிற் வாய்ப்புக்களோ மிக அரிது; எல்லோருமே படித்தவர்கள்; வேலையில்லா நிலைமையே இங்கு ஒரு பயங்கர நிலைமை. எனவே வேலை தேடி, ஆயிரக்கணக்கான கேரள மக்கள், வெளி மாநிலங்களுக்குச் செல்கின்றனர்.

எனவே மேற்கண்ட நிலைகளை மக்களிடையே எடுத்துக்கூறி, குடும்ப நலத் திட்டத்தைப் பிரச்சாரம் செய்தல் மிக எளிதானது.

நீர் உயர
நெல் உயரும்

எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எஃகுங் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

MSSIC

PUMPSET



பழுதடைந்த விவசாய கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



MSSIC

DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம், எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் நிகரற்ற உறுதியும் கொண்டவை.

MADRAS STATE SMALL INDUSTRIES CORPORATION LTD

விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயக்குனர்

தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்

35/2, உட்ஸ் ரோடு.
சென்னை-2.

உழைப்பால் கிடைத்த வளர்ச்சி

தெதோரா என்னும் ஊர் ஆக்ராவிலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ளது. ஊராட்சி முறை செயற்படத் தொடங்கிய 1947ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற ஒவ்வோர் ஊராட்சித் தேர்தலிலும் உறுப்பினர்களனைவரும் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தெதோரா ஊர்ப் பெருமக்கள் வேளாண்மையைத் தழுவி வாழ்பராவர். ஊராட்சியும் வேளாண்மைக்குச் சிறப்பிடம் அளித்து உழவர்களுக்குத் தேவையான வசதிகளனைத்தையும் அளித்துதவியுள்ளது. ஒவ்வொரு பயிர்ப் பருவத்திலும், ஊர் மக்களை ஒன்று கூட்டி, அவர்களின் குறைகளை நேரிற் கேட்டறிந்து, அவற்றைக் களைவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

மக்களின் உறுதுணையால் குழிகள் தோண்டப்பெற்று, உற்பத்தி தடையின்றி நடைபெறுகிறது. பூச்சி மருந்துகள் தெளிக்க, தூவுதற்கெனத் தேவையான கருவிகளும், கதிரடிக்கும் இயந்திரமும் தெதோரா ஊராட்சியிடம் உள்ளன. உழவர்கள் இலவசமாக இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஊட்ட உணவுத் திட்டம் :

வேளாண்மையை யடுத்துச் சிறப்பான கவனத்தைப் பெறுவது ஊட்ட உணவுத் திட்டம்தான். இத்திட்டம் 1963ஆம் ஆண்டுத் தொடக்கம் இங்குச் செயற்படுகிறது. திட்டத்தைத் திறமுடன் நிறைவேற்றுதற்கென இரண்டு கோழிப் பண்ணைகளும், ஓர் ஊட்ட உணவு இல்லமும், பள்ளித் தோட்டமும் அமைக்கப்பட்டுள்ளன. தோட்டத்தில் பற்பல காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன.

தூய்மையான பருகு நீரை வழங்குவதற்கென, ஊராட்சி நான்கு சமுதாயக் கிணறுகளைத் தோண்டி சிறந்த முறையில் பாதுகாக்கிறது. தவிர, இரண்டு பழைய சமுதாயக் குடிநீர்க் கிணறுகளையும் செப்பனிட்டுச் சீராக்கியுள்ளது.

ஊராட்சி மலர்தற்கு முன்னர் தெதோராவில் ஒரேயொரு தொடக்கப் பள்ளிமட்டுமே இருந்தது. ஆனால் தற்போது மேலும் ஓர் உயர் தொடக்கப் பள்ளி ரூ. 21,000/- செலவில் கட்டப்பெற்றுள்ளது. இவ்விரண்டு பள்ளிகளிலும், தெதோரா சிறுவர், சிறுமியர் அனைவரும் கல்வி கற்கின்றனர்.

ஊக்குவிக்கும் ஊராட்சி:

இவற்றின் திட்டங்கள், நிகழ்ச்சிகளுக்கு ஊராட்சி பொருளுதவி அளிப்பதுடன், அவற்றின் பணிகளை அவ்வப்போது ஊக்குவிக்கத் தவறுவதில்லை.

சமுதாய நிலையம், மகளிர் மனமகிழ் மன்றம் ஆகியவற்றிற்குக் கட்டடங்களும் ஊர்ப் பணியாளர்கள், மருத்துவப் பெண்கள், ஆசிரியைகள், கிராம சேவிகைகள் ஆகியோருக்குக் குடியிருப்புகளும் ஊராட்சியில் அமைத்துத் தரப்பட்டுள்ளன. தவிர, ஊர் மக்களனைவரும் ஒன்றுகூடி, ஊர் நலம் பற்றிக் கலந்துரையாடுதற்கென ஒரு தனிக் கட்டடமும் இங்குண்டு.

இளைஞர்களின் தலைமை:

துப்புரவுப் பணிகளில் தெதோராவின் முயற்சிகள் சிறப்பானவை. 25 கழிவு நீர்க் குழிகள் தோண்டப்பட்டு, இரண்டு கல் நீள அளவிற்குக் கழிவு நீர்ப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. தவிர 9 கழிவறைகளும் 8 சிறுநீர் அறைகளும் ஆங்காங்கே கட்டப்பட்டுள்ளன.

தெதோரா ஊராட்சி பலவகையிலும் சிறப்பான வளர்ச்சி பெற்றுள்ளமைக்கு, ஊராட்சி உறுப்பினர்களாகப் பணியாற்றும் இளைஞர்களும், மக்களின் மனங்கோணாத ஒத்துழைப்புமே அடிப்படைக் காரணங்களெனக் கூறப்படுகிறது.

பரிசு பெறுவது எவ்வாறு?

ஓர் ஏக்கர் நிலத்தில், ஐ.ஆர்-8ஐக் கொண்டு, 4203·600 கிலோ அறுவடை செய்துள்ள திரு. படேல் அவர்கள், குஜராத் மாநிலத்தின் சிறந்த உழவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். குஜராத்தில் விளையும் சாதாரண விளைச்சலைக் காட்டிலும், இது ஏழு மடங்கு கூடுதலாகும்.

36 வயது நிரம்பிய, விஞ்ஞானப் பட்டதாரியான திரு. படேல் கூறுகிறார்: ''விஞ்ஞான முறைகளைக் கையாண்டு உயர் இன வித்துக்களைக் கொண்டு, பயிர் செய்யின் மிகு விளைச்சல் கிடைப்பது உறுதி; எந்த ஒரு வணிகத்தைப் போன்றே, வேளாண்மை செய்தும், நிரம்ப ஆதாயம் பெற வியலும்.''

பயிர் முறை என்ன?

அவருடைய இக்கூற்றை, அவருடைய சாதனை தெளிவாக விளக்கியுள்ளது. அவருடைய பயிர் முறை என்னவென்பதை ஆய்வோம்:

இயந்திரக் கலப்பையைக்கொண்டு ஒரு முறை வயலை உழுத பின்னர், நாட்டுக் கலப்பையைக் கொண்டு, இரண்டு முறைகள் உழுதார். நடவிற்கு முன்னர், 18 வண்டிச் சுமை கலவை எருவையும், 190 கிலோ யூரியாவையும், 20 கிலோ 'பொட்டாஷ்'ஷையும் வயலுக்கு இட்டார். பயிர் வளரும் பருவத்திலிருக்கையில், 35 கிலோ யூரியாவும் 35 கிலோ அம்மோனியம் சல்பேட்டும் போதிய இடைவெளிகளில் போடப்பட்டன.

ஒன்பது முறைகள் பாசனம் செய்யப்பட்டன; இரண்டு தடவைகள் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டன.

ஆதாயம் எவ்வளவு?

ஓர் ஏக்கருக்கு அவர் செலவிட்டது ரூ. 1,000 ஆகும். கிடைத்துள்ள ஆதாயமான ரூ. 4,200இலிருந்து, செலவு கழித்து, எஞ்சியுள்ள ஆதாயம் ரூ. 3200 ஆயிற்று. இதே நிலத்தில் மீண்டும் கோதுமையைப் பயிரிட்டதனால், மேலும் ரூ. 2000 வருவாய் கிடைத்துள்ளது.

''நம்மிடமுள்ள நிலங்களெல்லாம் சிறிதாகவும், சிதறுண்டும் கிடக்கின்றன; எனவே இவற்றைக் கொண்டு, போதிய வருவாயைப் பெறுதற்கு, மிகு விளைச்சல் தரும் வித்துக்களே சாலச் சிறந்தவை'' எனக் கூறுகிறார் திரு. படேல்.

இதர உழவர்களுக்குக் கிடைத்தது எவ்வளவு?

ஐ.ஆர் - 8ஐ முதன்முறையாகப் பயிரிட்ட திரு. படேல் மேலும் கூறுகிறார்: ''உரச் சத்துக்களை நன்கு பெற்றுக்கொண்டு, உயர் விளைச்சலைத் தருகிறது, ஐ.ஆர்-8. எங்கள் ஊரில் 40 உழவர்கள் ஐ.ஆர்-8 பயிரிட்டுள்ளனர். அவர்களனைவருக்கும் 1900 கிலோவிற்குக் குறைவில்லாமல் விளைச்சல் கிடைத்துள்ளது.''

குஜராத் மாநிலத்தின் சராசரி விளைச்சல் ஏக்கருக்கு 645 கிலோ மட்டுமேயாகும்.

திரு. படேல் அவர்கள் இயற்கையிலேயே வேளாண்மையில் மிகுந்த பற்றுடையவர். மேலும் அவர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. அவருடைய குடும்பமும் ஒரு சிறந்த வேளாண்மைக் குடும்பமாகும்.

மறைந்த தலைமையமைச்சர், திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் வேண்டுதலுக்கிணங்கி, ஒட்டு இன வித்துக்களையே பயிரிட்டு, திரு. படேலின் தந்தை பெரு வெற்றி கண்டவர்.

வேறு போட்டி உண்டா?

புகையிலையும், எலுமிச்சையும் பயிரிடப்பட்ட நிலங்களெல்லாம், இன்றளவில் நெல் வயல்களாகத் திகழ்தற்கு, திரு. படேலின் தந்தையே முழு முதற் காரணமாகக் கூறப்படுகிறது.

மாநில அளவில் பரிசு பெற்றுள்ள திரு. படேல், தேசிய அளவிலும் போட்டியிட்டவர்தாம். 1968ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய விளைச்சல் போட்டியில், இதே ஐ.ஆர் - 8 நெல் விளைச்சலில், ஏக்கருக்கு 3,329·600 கிலோ அறுவடை செய்தார். இது, குஜராத் மாநிலச் சராசரி விளைச்சலைவிட, ஐந்து மடங்கு அதிகமானதாகும்.

இண்டேன்சிவ் அக்ரிகல்சர் இதழிலிருந்து...

மறுதாம்புச் சோளம்

பரிசோதனைகளின் விளைவு :

சி.எஸ்.எச்., ஸ்வரண ஆகிய இரு பிரபலமான சோள ரகங்கள் மறு தாம்புப் பயிராகவும் நல்ல பலன் தருகின்றனவென்று புது தில்லியி லுள்ள இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் செய்த ஆராய்ச்சியின் பேரில் தெரிய வருகிறது.

சி.எஸ்.எச்-1, மறுதாம்புப் பயிராக ஹெக்டேர் ஒன்றுக்கு 61 குவிண்டால் மகசூல் கொடுத்தது. நேரடிப் பயிராகக் கொடுத்த மகசூல் 43·25 குவிண்டால். இதேபோல் மறுதாம் புப் பயிரில் ஹெக்டேர் ஒன்றுக்கு 365 குவிண்டாலும் நேரடிப் பயிரில் 240 குவிண்டாலும் பசுந் தீவனம் கிடைத் தது.

மறுதாம்புப் பயிராக ஸ்வர்ண ஹெக்டேர் ஒன்றுக்கு 60 குவிண்டால் மகசூல் கண்டது. நேரடிப் பயிரில் கிடைத்த மகசூல் 22·21 குவிண்டால் ஸ்வர்ண மறுதாம்புப் பயிரில் ஹெக் டேர் ஒன்றுக்கு 360 குவிண்டாலும் நேரடிப் பயிரில் 250 குவிண்டாலும் பசுந் தீவனம் கொடுத்தது.

மறுதாம்புப் பயிர் நேரடிப் பயிரை விட 25, 30 நாட்கள் முன்னரே முற்றிவிடுகிறது. இப் பயிரைப் பின் னதைவிடப் பூச்சி, களைகள் முதலியன பாதிக்கின்றன.

முற்றிலும் உண்மை

வாழ்க்கையில் துன்பத்தைத் தவிர வேறெதையுமே கண்டறியாதவர் திரு. ஹீராலால். அவர் செய்யாத தொழிலில்லை; பணியாற்றாத சிற்றலு வல்கள் ஏதுமில்லை. எல்லாவற்றிலும் அவர் தோல்வியையே தழுவினர். இதற்குச் சான்றாக ஒன்றிரண்டைக் கூறலாம்.

ஒரு தேநீர்க் கடையைத் தொடங் கினர்; விற்பனையும் சிறப்பாகத்தான் நடைபெற்றது; ஆனல் சில திங்கள் களில் அவர் பெரும் இழப்பைத் தழுவினர்; கடை மூடப்பட்டது.

பின்னர், தான் பிறந்த ஊரிலிருந்து பல கல் தொலைவிற்கு நடந்தே சென்று, அகமதாபாத் அடைந்து, ஆடுகள் விற்பனை செய்யும் பணியி லமர்ந்தார். அதிலும் தோல்வியே.

இருள் அகன்றது :

1964ஆம் ஆண்டு மலர்ந்தது; அவ ருடைய குடும்பத்திலும் வறுமை இருள் அகலத் துவங்கியது.

திரு. ஹீராலாலின் இரண்டு புதல் வர்களும் —மோதிலால், தனராஜ் —குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்தனர். அவர்களிரு

வரும் 'இளைஞர் வேளாண்மைக் கழக'த்திற் சேர்ந்து, கோழிப் பண்ணையை நிர்வகிக்கும் முறையைத் திறம்படக் கற்றுத் தெளிந்தனர்.

உதயப்பூர் பல்கலைக் கழகம் தந்த சில வெள்ளைக் கோழிகளைக்கொண்டு, வளர்ச்சி அலுவலர்களின் கருத்துரை களை ஏற்று, ஒரு சிறிய கோழிப் பண்ணையைத் தொடங்கினர். பண்ணை சிறிது சிறிதாகப் பெருக லாயிற்று.

தற்போது அவ்விரண்டு புதல்வர் களிடமும் 250 கோழிகள் உள்ளன. பண்ணையிலுள்ள முட்டைகளனைத் தையும் உள்ளூரிலேயுள்ள கூட்டுறவுச் சங்கத்தாரிடம் விற்றுவிட்டு நிறைய ஆதாயம் பெறுகின்றனர். கூட்டுறவுச் சங்கத்தினர், கோழித் தீவனங்களை மிகவும் குறைந்த விலையில் சகோதரர் களுக்கு அளிக்கின்றனர்.

வருங்கால வாய்ப்புக்கள் :

''பள்ளிப் படிப்பை முடித்த வுடனேயே, எங்கள் கோழிப் பண்ணையை மேலும் விரிவாக்கவிருக் கிறோம். அதனால் திங்களொன்றிற்கு ரூ. 1,000 வரை வருவாய் கிடைக் கும்'' என்கிறார் திரு. தன்ராஜ்.

இவர்களுடைய கோழிப்பண்ணை யின் அமைப்பிற்கும், வளர்ச்சிக்கும், ஆதாயத்திற்கும் உறுதுணையாக விருப்பது 'இளைஞர் வேளாண்மைக் கழகம்'தான். உதயப்பூர் பல்கலைக் கழகம் மாவட்டத்தின் பல்வேறிடங் களில் 19 மன்றங்களை நிறுவியுள்ளது. 12 முதல் 19 வயது வரையிலான இளைஞர்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு கழகத்திலும் 20 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். வளர்ச்சி அலுவலர்களும், பள்ளி ஆசிரியர் களும், கழகத்திற்குத் திட்டங்களை உருவாக்குவதுடன், செயற்படுத்து தற்கும் உதவுகின்றனர். உறுப்பினர் கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திட்டத்தை மேற்கொண்டு பயனடை கின்றனர்.

சிறந்த உழவர், சிறந்த குடிமகன் :

விஞ்ஞான முறையில் வேளாண்மை செய்தற்குரிய அறிவும் பயிற்சியும் இவர்களுக்கும் அவ்வப்போது தவறாது அளிக்கப்படுகின்றன. தவிர, சிறந்த குடிமகனாக விளங்குதற்கும் கழகத்தில் வழிகோலப்படுகிறது.

கிழமைதோறும் இளைஞர்கள் ஒன்றுகூடி, பாராளுமன்ற நடவடிக் கைகளைப் போன்றே தம்முடைய கருத்துக்களைக் கூறுகின்றனர். அவை யெல்லாவற்றையும், கழகத்தை நடாத்திச் செல்லும் பெரியோர்கள் ஆராய்ந்து, ஆவன செய்கின்றனர்.

இளைஞர்களிடையே புத்துணர்வை உண்டாக்குதற்கு அவ்வப்போது போட்டிகள் நடைபெறுகின்றன.

உதயப்பூர் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சி இயக்குநராகப் பணியாற் றும் டாக்டர் டி.கே. மிஸ்ரா அவர் கள், இக் கழகத்தினால் சிறந்த நன்மை கள் பல விளைந்துள்ளன எனக் கூறு கிறார்.

''பற்பல ஊர்களிலும் சிறந்த இளம் உழவர்கள் ஆங்காங்கே உரு வாக்கப்படுவதால், பழந்தலைமுறை யினர், இவர்களின் கருத்துக்களுக் குத் தலைவணங்குகின்றனர். இதனால் வேளாண்மையில் ஒரு புரட்சியேற் படுவது திண்ணம்'' என்கிறார் டாக்டர் மிஸ்ரா.

அவர் கூறுவது முற்றிலும் உண்மை யல்லவா?

நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படியாக உழைத்துப் பாடு பட்டு நமது உணவைப் பெறுவதுதான் இயற்கையான முறை யாகும். எனவே, ஒரு விநாடியைக்கூடச் சோம்பலில் கழிப்பவர் எவரும், அத்துணை அளவுக்குத் தம்முடைய அண்டை அயலாருக் குப் பாரமாகிவிடுகிறார். மேலும், அவ்வாறு செய்வது அஹிம்சைத் தத்துவத்தின் முதலாவது பாடத்தைப் புறக்கணித்ததாகிவிடும்.

— அண்ணல் மகாத்மா

பருத்தி விளைச்சல்

உலகிலேயே மிகுதியாகப் பருத்தி உற்பத்தியாவது சோவியத் ஒன்றியத்தில்தான். 2·6 மிலியன் ஹெக்டேர் நிலங்களில் இங்குப் பருத்தி விளைகிறது. கடந்த மூன்றாண்டுகளாக, ஆண்டுதோறும் 6 மிலியன் டன் எடையுள்ள பருத்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

சோவியத் ஒன்றியத்தில் பருத்தி விளையும் நிலத்தின் மொத்தப் பரப்பளவானது அமெரிக்காவில் பருத்தி விளையும் மொத்தப் பரப்பளவைவிட 8 இலட்சம் ஹெக்டேர்கள் குறைவாயிருந்தும் சோவியத் ஒன்றியத்தின் உற்பத்தி அமெரிக்க விளைச்சலுக்கு இணையாகவிருப்பது குறிப்பிடத் தக்கதொன்று.

சோவியத் ஒன்றியம் பருத்தித் தேவையில், தன்னிறைவு பெற்றுள்ளதோடு, மற்ற நாடுகளுக்கும் பருத்தியை ஏற்றுமதி செய்கிறது. ஆஸ்ட்ரியா, பெல்ஜியம், பல்கேரியா, இங்கிலாந்து, ஹங்கேரி, ஜெர்மானிய மக்கட் குடியரசு, இத்தாலி, போலந்து, ருமேனியா போன்ற நாடுகள் சோவியத் ஒன்றியத்திலிருந்து பருத்தியை இறக்குமதி செய்கின்றன.

விளைச்சலுக்குக் காரணங்கள்:

இம் மாபெரும் விளைச்சலுக்குரிய காரணங்கள் யாவை? பருத்தி விளைச்சலைப் பன்மடங்கு உயர்த்துதற்கு, இங்குப் பெருமளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. பாசனத்தை விரிவாக்குதற்கும், நவீன முறையில் பாசனம் செய்தற்கும், ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டு, நன்முறையில் செயல் திட்டங்களாக உருவாக்கப் பெற்றுள்ளன. இதனால் அண்மை ஆண்டுகளில் மட்டும் சுமார் ஒரு மிலியன் ஹெக்டேர்களில் கூடுதலாகப் பருத்தி உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

பெரும் பரப்பில் பருத்தி பயிரிடப் படுவதனாலேயே, பருத்தி உற்பத்தி இங்குப் பெருகியுள்ளதெனக் கூறுதற்கில்லை. செயல் திறமிக்க இயந்திரக் கலப்பைகளைக் கொண்டும், வேளாண்மைக்குரிய இயந்திரங்களை உருவாக்கும் தொழிற்கூடங்கள், புதிய பருத்தியாலைகளை நிறுவியும், செயற்கை முறையில் உர உற்பத்தி செய்தும் பருத்தி ஆராய்ச்சிக் கூடங்களை அமைத்தும், பருத்திப் பயிரின் பல்வேறு பிரச்சினைகளைத் தெளிவாக ஆராய்ந்து, சிறந்த முடிவுகளைக் கண்டறிந்தும் பருத்தி உற்பத்தியைப் பெருக்கி முன்னணியில் நிற்கின்றனர்.

பருத்தி பயிரிடுவோருக்கு ஆண்டு தோறும் நவீன இயந்திரங்கள் உருவாக்கித் தரப்படுகின்றன. தரத்திலே உயர்வும், செயலில் மிகு திறனும் ஒருங்கேயிணைந்த இயந்திரக் கலப்பைகள், விதையிடும் இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள் போன்றவை எல்லாப் பருத்தித் தோட்டங்களிலும் காணப்படுகின்றன. பருத்தி விதைப்பது முதல் அறுவடை வரையிலான எல்லாக் காரியங்களும் இயந்திரங்களாலேயே செய்யப்படுகின்றன.

வரும் ஆண்டுகளில், மேலும் ஒரு மிலியன் டன்களுக்குப் பருத்தி உற்பத்தியை அதிகரிக்கச் சோவியத் ஒன்றியம் திட்டங்கள் தீட்டியுள்ளது.

— 'குருட்சேத்ரா' இதழிலிலிருந்து

நமது வாழ்க்கை ஏற்பாட்டில், அறிவாற்றலுக்கு முக்கியத்வமும், உரிய இடமும் அளிக்கவேண்டியது அவசியம்தான்; ஆனால் அதே சமயத்தில் உடல் உழைப்பின் அவசியம்பற்றியும் வலியுறுத்த வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். எந்த ஒரு நபருக்கும் அப் பொறுப்பிலிருந்து விலக்கு அளிக்கக்கூடாது. உடல் உழைப்பில் ஈடுபடுவதன்மூலம் அறிவாற்றலின் தன்மையை மேலும் சிறப்புச் செய்யலாம்.

— அண்ணல் மகாத்மா

ஊராட்சி அரசிதழ்

PANCHAYAT GAZETTE

ஊர்ப்புற ஆள்வலத் திட்டத்தை மேலும் ஊக்குவிக்க

[Rural Man Power Programme—Implementation during 1969-70—Orders issued.]

[G.O. Ms. No : 1641, R.D.L.A. dated 2-9-69.]

இதுவரையில் மத்திய அரசினால் நடத்தப்பட்டுவந்த ஊர்ப்புற ஆள் வலத் (மனித சக்தி) திட்டமானது நான்காவது திட்டத்தில் மாநில அரசுக்கு மாற்றப்பட்டுவிட்டது. தற்பொழுது இத் திட்டமானது, தமிழ் நாட்டில் 72 வட்டாரங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஊர்ப்புற ஆள்வலத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக வேண்டி 1969-70ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1969-70இல் இத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து, கிராம வளர்ச்சி இயக்குநர் கீழ்க்கண்ட செயல் முறைகளைக் கூறியுள்ளார்:

1. ஊர்ப்புற ஆள்வலத் திட்டம் ஒரு தனித் திட்டமாகக் கருதப்படவேண்டும்.
2. கிடைக்கின்ற நிதி வாய்ப்பு ரூ. 40 இலட்சம் மட்டுந்தான் என்பதால், இத் திட்டமானது 72 வட்டாரங்களில் மட்டும் 69-70ஆம் ஆண்டில் செயற்படுத்தப் படலாம்.
3. ஊர்ப்புற ஆள்வலத் திட்டம் நடைமுறையில் இருந்துவரும் 72 வட்டாரங்களில் தற்சமயத்துக்கு இணைப்பு II-இல் கண்டுள்ள கீழ்க்கண்ட வகையிலுள்ள 42 வட்டாரங்களை விலக்கி வைக்கலாம்; மிச்சமுள்ள 30 வட்டாரங்களில் (இணைப்பு I) தொடர்ந்து நடத்தலாம்.

(அ) ஆறு ஆண்டுகளுக்கு மேலாக இத் திட்டம் அமுலில் உள்ள 34 வட்டாரங்கள்.

(ஆ) 31-3-68 தேதியில் மொத்த ஒதுக்கீடான 4 இலட்சம் ரூபாய்க்குமேல் செலவு செய்துள்ள 3 வட்டாரங்கள்.

(இ) சிறு பரப்பளவும் மக்கள் தொகையும் கொண்டவையாக செலவினத்தில் எவ்வகை முன்னேற்றமும் காணாத 5 வட்டாரங்கள் இணைப்பு III-இல் கொடுக்கப்பட்டுள்ள 42 வட்டாரங்களை, விலக்கப்படுகிற, 42 வட்டாரங்களுக்குப் பதிலாகச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் கிராம வளர்ச்சி இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

4. அரசு இந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது:

1. ஊர்ப்புற ஆள்வலத் திட்டம், தனியொரு திட்டமாகக் கொள்ளப்படும்.

2. 1969-70இல் இத் திட்டம் 72 வட்டாரங்களில் செயற்படுத் தப்படும்.

3. இணைப்பு I-இல் கண்டுள்ள 30 வட்டாரங்களில் இத் திட்டம் தொடர்ந்து நடத்தப்படும்.

4. இணைப்பு II-இல் கண்டுள்ள 42 வட்டாரங்கள் இத் திட்டத்தி லிருந்து விலக்கப்படும்.

5. இணைப்பு III-இல் கண்டுள்ள 42 வட்டாரங்கள், மேலே 4 ஆவது பிரிவில் விலக்கப்பட் டுள்ள 42 வட்டாரங்களுக் குப் பதிலாக இத் திட்டத்தில் சேர்க்கப்படும்.

1969-70ஆம் ஆண்டில் ஊர்ப்புற ஆள்வலத் திட்டப் பணிகளுக்காகச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடையே ரூ. 34 இலட்சத் தைப் பகிர்ந்தளிக்கக் கிராம வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கு கிறது. கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள ஊர்ப்புற ஆள்வலத் திட்டப் பிரிவுக்காகும் செலவும் இந்த ரூ. 34 இலட்சத்திற் குள்ளேயே அடங்கும். மீதியுள்ள ரூ. 6 இலட்சங்களைத் தற்பொழுது விலக்கப்படும் வட்டாரங்களில் முடிவு பெறாத பணிகளுக்கான பணம் கொடுப்பதற்காக ஒதுக்கி வைக்க வேண்டும். இப் பணத்தை 19-11-68 தேதியிட்ட அரசு உள்ளாணை 129177/P4/68-2, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறை கிடைப்பதற்கு முன்னால் எடுத்துக்கொண்ட வேலை களுக்காக மட்டுமே கொடுக்க வேண்டும்.

[2-9-1969 தேதியிட்ட ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறை யின் அரசு ஆணை எண் 1641.]

இணைப்பு I

I. வடஆர்க்காடு மாவட்டம்
1. தெள்ளார்
2. சோளிங்கபுரம்
3. திருப்பத்தூர்

II. தென்ஆர்க்காடு மாவட்டம்
4. சின்ன சேலம்
5. குறிஞ்சிப்பாடி
6. முகையூர்

III. செங்கற்பட்டு மாவட்டம்
7. ஊத்துக்கோட்டை

IV. கோயமுத்தூர் மாவட்டம்
8. அந்தியூர்
9. குண்டடம்
10. மூலனூர்

V. கன்யாகுமரி மாவட்டம்
11. குருந்தங்கோடு

VI. மதுரை மாவட்டம்
12. வேடசந்தூர்

VII. இராமநாதபுரம் மாவட்டம்
13. விருதுநகர்
14. திருச்சுழி
15. திருப்பத்தூர்
16. நரிக்குடி

VIII. தருமபுரி மாவட்டம்
17. பெண்ணாகரம்
18. வேப்பனப்பள்ளி
19. பருகூர்
20. ஊத்தங்கரை
21. தருமபுரி

IX. சேலம் மாவட்டம்
22. இடைப்பாடி
23. நாமக்கல்

X. தஞ்சாவூர் மாவட்டம்
24. பட்டுக்கோட்டை
25. தலைஞாயிறு

XI. திருச்சிராப்பள்ளி மாவட்டம்
26. அரிமளம்
27. லேப்பூர்

XII. திருநெல்வேலி மாவட்டம்
28. குருவிக்குளம்
29. உடங்குடி
30. கடையம்

இணைப்பு II

1. செங்கம்
2. புதுப்பாளையம்

3. தண்டராம்பட்டு
4. கள்ளக்குரிச்சி
5. சங்கராபுரம்
6. ரிஷிவந்தியம்
7. தியாகதுர்கம்
8. பூண்டி
9. எல்லாபுரம்
10. பவானிசாகர்
11. தாளவாடி
12. நம்பியூர்
13. முஞ்சிறை
14. தெப்பம்பட்டி
15. ஒட்டன்சத்திரம்
16. பழனி
17. உதகமண்டலம்
18. மண்டபம்
19. இராமநாதபுரம்
20. திருப்புல்லாணி
21. முதுகுளத்தூர்
22. மொப்பூர்
23. கடலாடி
24. கமுதி
25. பாப்பிகாட்டிபட்டி
26. அரூர்
27. ஆவுடையார் கோயில்
28. விராலிமலை
29. அறந்தாங்கி
30. குன்னுண்டார்கோயில்
31. ஒட்டப்பிடாரம்
32. விளாத்திகுளம்
33. புதூர்
34. கயத்தாறு
35. இராதாபுரம்
36. வள்ளியூர்
37. நாங்குநேரி
38. திருவாலங்காடு
39. கள்ளிகுடி
40. டி. கல்லுப்பட்டி
41. கொங்கணுபுரம்
42. மேலநீலிதநல்லூர்

இணைப்பு III

I. வடஆர்க்காடு மாவட்டம்
1. நாட்ரம்பள்ளி
2. குடியாத்தம்
3. ஆலங்காயம்

II. தென்ஆர்க்காடு மாவட்டம்
4. செஞ்சி
5. மேல்மலையனூர்

III. செங்கற்பட்டு மாவட்டம்
6. இராமகிருஷ்ண ராஜு பேட்டை
7. சித்தாமூர்
8. கும்முடிப்பூண்டி

IV. மதுரை மாவட்டம்
9. பாளையம்
10. செல்லப்பட்டி
11. உசிலம்பட்டி
12. சேடப்பட்டி
13. நத்தம்

V. திருச்சிராப்பள்ளி மாவட்டம்
14. வையம்பட்டி
15. தாத்தையங்கார்பேட்டை

VI. சேலம் மாவட்டம்
16. இராசிபுரம்
17. சேந்தமங்கலம்
18. வீரபாண்டி
19. எருமைப்பட்டி

VII. இராமநாதபுரம் மாவட்டம்
20. சாக்கோட்டை
21. கண்ணங்குடி
22. காளையார்கோயில்
23. சிங்கம்புணரி
24. போகனூர்

VIII. திருநெல்வேலி மாவட்டம்
25. சங்கரன்கோயில்
26. சாத்தான்குளம்
27. கோவில்பட்டி
28. தூத்துக்குடி
29. வாசுதேவநல்லூர்
30. மானூர்
31. ஆலங்குளம்

IX. நீலகிரி மாவட்டம்
32. கூடலூர்

X. கன்யாகுமரி மாவட்டம்
33. தக்கலை

XI. கோயமுத்தூர் மாவட்டம்
34. சுல்தான்பேட்டை
35. சர்க்கார்சாமக்குளம்
36. சென்னிமலை

XII. தருமபுரி மாவட்டம்
37. தளி
38. பாலக்காடு
39. கிருஷ்ணகிரி

XIII. தஞ்சாவூர் மாவட்டம்
40. வேதாரண்யம்
41. முத்துப்பேட்டை
42. திருவோணம்

கிராமங்களில் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் குடிநீர் வழங்கல்

[Panchayat Development—Wells in Scarcity Areas—Distribution of Funds to Districts—Orders Issued.]

[G.O. Ms. No : 1668, R.D.L.A. dated 4-9-1967.]

தமிழ் நாட்டில், கிராமப்புறங்களில் குடி தண்ணீர் கிடைக்காமல் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில், அந்தப் பிரச்னையைச் சமாளிக்க அதற்கென்று குடிநீர் வழங்கு சிறப்புத் திட்டம் ஒன்றின் இன்றியமையாமை வெகுவாக வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. இந்தப் பகுதிகளுக்கு, சிறப்பு வேலைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, பூர்வாங்க விசாரணைகள் செய்யப்பட்டு, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலைகள் - கிராம வேலைகள்) இதற்கெனச் செலவு மதிப்பீடுகள் தயார் செய்துள்ளார். இந்த வகையில், முதல் படியாகத் ''தட்டுப்பாடு உள்ள பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கல்'' என்ற வேலைத் திட்டத்தின் கீழ், 16 இலட்சம் ரூபாயினை அரசு அளித்துள்ளது. இந்தத் தொகையை எப்படிப் பகிர்ந்தளிக்கலாம் என்பது பற்றி அரசு, கிராம வளர்ச்சி இயக்குநரின் கருத்துரை கோரியது. இந்த 16 இலட்சம் ரூபாயைச் சாதாரணக் கிணறுகள் அமைக்கப் பயன்படுத்தலாம் என்றும், தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் கிணறு ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் என்ற விகிதத்தில் பணம் கொடுக்கப்படலாம் என்றும், இந்த வேலை முழு மானிய அடிப்படையில் செயற்படுத்தப்படவேண்டும் என்றும் கிராம வளர்ச்சி இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரசு இப் பொருள்பற்றி ஆய்வு செய்து, இந்த 16 இலட்சம் ரூபாய்களை மாவட்டங்களுக்குக் கீழ்க் கண்ட முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறது.

	மாவட்டத்தின் பெயர்	தொகை
		ரூ.
1.	செங்கற்பட்டு	1,60,000
2.	வட ஆர்க்காடு	1,40,000
3.	தென் ஆர்க்காடு	1,60,000
4.	கோயமுத்தூர்	2,00,000
5.	சேலம்	1,60,000
6.	தருமபுரி	1,60,000
7.	மதுரை	1,60,000
8.	இராமநாதபுரம்	1,60,000
9.	திருநெல்வேலி	1,40,000
10.	திருச்சிராப்பள்ளி	1,60,000
	மொத்தம்	16,00,000

தங்கள் மாவட்டங்களில் தட்டுப்பாடு உள்ள பகுதிகள் எவையெவை என்பதை, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலைகள்-கிராம வேலைகள்) தயாரித்துள்ள பட்டியல் சுகாதாரப் பணிகள்-குடும்பக்கட்டுப்பாடு இயக்குநர் கொடுத்துள்ள விவரக் குறிப்புகள் ஆகியவற்றையொட்டி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

[4-9-69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண் 1668-இன் சுருக்கம்.]

கால்நடை வளர்ப்பில் விவசாயிகளுக்கு மேலும் ஊக்கம் அளிக்க

[Animal Husbandry—Social Incentives to farmers for increasing Agricultural Production—Increasing the production of Livestock and livestock products—Orders Issued.]

[G.O. Ms. No : 2920, R.D.L.A., dt. 24-9-69]

உணவு உற்பத்தித் துறையில் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காக எடுக்கப்பட்டுவரும் பல்வேறு முயற்சிகளில், விவசாய உற்பத்தியினைப் பெருக்குவதில் முக்கியப் பங்கினை ஏற்றுப் பணியாற்றும் விவசாயப் பெருமக்கள், வேளாண்மை சம்பந்தமான அறிவியல் வல்லுநர்கள், வேளாண்மைத் துறையில் ஆய்வாளர்கள் ஆகியோருக்குச் சமுதாயத்தில் மேம்பாடான ஒரு மதிப்பினை ஏற்படுத்துதலும், மற்றும் அவர்கள் ஈடுபட்டுள்ள பணியில் அவர்களுக்கு ஒரு தூண்டுதல் ஏற்படுத்தும் வகையில் தகுந்த ஏற்பாடுகள் செய்தலும் மிகுந்த பயன் அளிப்பதாக அமையும் என்று மைய அரசின் முன்னாள் உணவு — வேளாண்மைத் துறை அமைச்சர் கருத்துத் தெரிவித்திருந்தார். அதுபற்றிப் பல்வேறு யோசனைகளையும் அவர் மாநில அரசுக்குத் தெரிவித்திருந்தார். அந்தக் கருத்துக்கள் பற்றி, மாநில அரசு கால்நடை வளர்ச்சி இயக்குநருடன் கலந்தாலோசித்து, கால்நடை வளர்ச்சியினைப் பொறுத்தமட்டில் கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கின்றது.

I. விவசாயிகளுக்குத் தூண்டுதல் ஏற்படுத்துதல் :

(அ) சிறந்த உழவுத் தலைவர்களுக்கு விருதுகள் வழங்குதல் :

கால்நடை வளர்ச்சித் துறை இயக்குநர் தன் கடிதங்களில் சுட்டிக் காட்டியுள்ளபடி இந்த யோசனைகள் வெறும் பால் உற்பத்திப் பெருக்கம் என்ற எல்லைக்குள் மட்டும் அடங்கியதல்ல.

விவசாயத்திலோ அல்லது கால்நடை வளர்ச்சியிலோ சிறந்த பணியாற்றியுள்ளவர்களுக்கு மைய அரசு விருதுகள், மாநில அரசு விருதுகள் பற்றி ஆண்டுப் பட்டியல் தயாரிக்கும் பொழுது, இதுபற்றிய முக்கியத்துவம் இப்பொழுதும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், கால்நடை வளர்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில், இந்த வகைகளுக்குச் சிறப்பாக விருதுகள் வழங்கத் தேவையில்லை என அரசு கருதுகிறது. ஒவ்வோர் ஆண்டும், உரிய காலத்தில் இவ் விருதுகள் பெறத் தகுதியானவர்களுடைய பெயர்களை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமெனக் கால்நடை வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆ) மாநில, மாவட்ட, கிராம அளவில் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்குதல் :

சிறந்த கால்நடைகளைப் பேணிச் சிறந்த முறையில் வளர்க்கின்ற விவசாயிகளுக்கும், கால்நடைகளிடமிருந்து பால் அதிகமாகக் கிடைக்கக் கூடிய வகையில் சாதனை புரிந்துள்ள விவசாயிகளுக்கும் வட்டார, மாவட்ட அளவில் சான்றிதழ்களும், மாநில அளவில் பதக்கங்களும் அளிக்கவேண்டும்; இதற்காக வேண்டிப் போட்டிகள் நடத்தலாம் என்று கால்நடை வளர்ச்சி இயக்குநரும் மைய அரசும் சொல்லியுள்ள கருத்தினை அரசு ஏற்றுக்கொள்கிறது. அதன்படி, அனுமதிக்கப்பட்டுள்ள, இப்பொழுதுள்ள நிதி நிலைக்குட்பட்டு, இதற்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கால்நடை வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(இ) விவசாயிகளுக்காகச் சிறப்பு நிகழ்ச்சிகள் :

சிறந்த பணியாற்றும் முற்போக்கு விவசாயிகள், கால்நடை வளர்ப்

போர்களை மைய அரசின் தலைநகரில் நடைபெறும் விவசாயிகள் தினத்திற்கும் மாநில, மாவட்ட, வட்டார அளவில் கால்நடை விழாக்களுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்படவேண்டும் என்று மைய அரசும், கால்நடை வளர்ச்சி இயக்குநரும் சொல்லியுள்ள கருத்தினை அரசு ஏற்றுக்கொள்கிறது. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கால்நடை வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஈ) வானொலியில் பேட்டி அளித்தல் :

விவசாயத் துறையைப் பொறுத்த மட்டில், தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளை அழைத்து அகில இந்திய வானொலி அவர்களைப் பேட்டி கண்டு அவற்றை ஒலிபரப்புவதாகத் தெரிகிறது. அதே மாதிரி, சென்னை வானொலி நிலையத்தாருடன் கலந்தாலோசித்து, கால்நடை வளர்ச்சி சம்பந்தமான விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து அகில இந்திய வானொலியில் அவர்களைப் பேட்டி கண்டு, ஒலிபரப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கால்நடை வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(உ) விவசாயிகளின் புகைப்படங்களைப் பிரபலப்படுத்துதல் :

கால்நடை வளர்ச்சித் துறையில் கால்நடை வளர்ச்சி குறித்து செய்யப்படும் வேலைகள், திட்டங்கள் குறித்து மிகவும் தீவிரமான முறையில் பிரச்சாரம் அந்தத் துறையினராலேயே செய்யப்படக்கூடும் என்றாலும், கால்நடை வளர்ப்பில் சிறந்து விளங்கும் விவசாயப் பெருமக்களின் புகைப்படங்களை, தகவல் நிலையங்களிலும் கண்காட்சிகளிலும் மக்கள் பார்வைக்காக வைத்துப் பிரபலப்படுத்தினால் நல்லதொரு பிரச்சாரமாக அது அமையும். ஆகவே கண்காட்சிகளிலும், செய்தி நிலையங்களிலும் கால்நடை வளர்ப்பில் தலைசிறந்து விளங்குபவர்களின் புகைப்படங்களைத் தகுந்த முறையில் அமைத்துப் பிரபலப்படுத்தவேண்டும் என்று கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஊ) சிறப்பு மலர்கள், வெளியீடுகள் வெளியிடுதல் :

எதிர்காலத்தில் வெளியிடப்படும் துறை வெளியீடுகளில் மட்டுமில்லாமல் ''கோசம்வர்தன'' ''Poultry Guide'' ''Indian Veterinary Journal'' 'மேழிச்செல்வம்' போன்ற பத்திரிகைகளிலும் கால்நடை வளர்ப்பில் தலைசிறந்து விளங்குவோரின் புகைப்படங்களை வெளியிடலாம் என்ற கால்நடை வளர்ப்பு இயக்குநரின் யோசனையை அரசு ஏற்றுக்கொள்கிறது.

(எ) செய்திப் படங்கள் தயாரித்தல் :

நிதி கிடைக்கும்பொழுது, செய்தித் துறையினரால், தலைசிறந்த விவசாயிகளால் கால்நடை வளர்ப்பில் கையாளப்படும் தரமான முற்போக்கான செயல்முறைகளை விளக்கும் வகையில் செய்திப் படங்கள் தயாரிக்கப்படலாம் என்று மைய அரசும், கால்நடை வளர்ச்சி இயக்குநரும் சொன்ன கருத்தினை அரசு ஏற்றுக்கொள்கிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு கால்நடை வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

II. பரிசுகள் :

மாவட்ட, மாநில அளவில் நடைபெறும் கால்நடை கோழி வளர்ப்புப் பற்றிய விழாக்களில் விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும், கால்நடை வளர்ப்புக்குத் தேவையான கருவிகள், மற்றும் வானொலிப் பெட்டிகள், மிதிவண்டிகள் போன்றவற்றையும் பரிசுகளாக வழங்கலாம் என்று மைய அரசும், கால்நடை வளர்ப்பு இயக்குநரும் சொல்லியுள்ள கருத்தினை அரசு ஏற்றுக்கொள்கிறது.

III. ஆய்வுச் சுற்றுலாக்கள் :

தலைசிறந்த விவசாயிகளையும், கால்நடை வளர்ப்போரையும் கால்நடை ஆய்வுக் கூடங்கள், விலங்கின அறிவியல் கல்லூரி போன்ற இடங்களுக்குச் சுற்றுலாவாக அழைத்துச் செல்லவேண்டும் என்று மைய அரசும், கால்நடை வளர்ப்பு இயக்குநரும் வெளியிட்டுள்ள கருத்தினை அரசு ஏற்றுக்கொள்கிறது. தேவைப்

படும்பொழுது, அதற்கான கோரிக்கைகளை, மைய அரசு சொல்லியுள்ள யோசனையின் அடிப்படையில், அரசின் ஒப்புதலுக்காக, கால்நடை வளர்ச்சி இயக்குநர் அனுப்பி வைக்க வேண்டும்.

IV. பண்ணைத் தலைவர்களை மாற்றி அனுப்புதல்:

முற்போக்கு கால்நடை வளர்ப்போர்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு, கால்நடை வளர்ப்பில் மேலும் தரமான முறைகளைத் தெரிந்து கொள்வதற்காக வேண்டி அனுப்பி வைக்கலாம் என்ற மைய அரசின் யோசனையை அரசு ஒத்துக்கொள்கிறது. வட்டாரங்கள், இம்மாதிரி அவர்களை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யலாம் என்று அரசு உத்தரவு இடுகிறது.

V. மேல்மட்டப் பயிற்சி:

கால்நடை வளர்ப்பு முறைகள் பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சிகள் அளிப்பதற்காக வேண்டி மைய அரசின் உதவியினை மாநில அரசு கேட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன், இது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

VI. தேர்ந்தெடுப்போர் பற்றிய அடிப்படை:

கிராம அளவில் கால்நடை வளர்ப்போரைத் தேர்ந்தெடுப்பதை ஊராட்சியின் விவசாய உற்பத்திக் குழு செய்யலாம்; வட்டாரங்களில் கால்நடை மருந்தகத்தின் பொறுப்பிலிருக்கும் உதவி சர்ஜன், மாவட்ட கால்நடை அதிகாரி ஆகியோருடன் கலந்து ஆலோசித்து இந்தக் காரியத்தை அந்தக் குழு செய்யலாம் என்ற கால்நடை வளர்ச்சி இயக்குநரின் யோசனையை அரசு ஏற்றுக்கொள்கிறது. இதற்காக வேண்டிய நடவடிக்கையை கால்நடை வளர்ச்சி இயக்குநர் எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

VII. முற்போக்கு விவசாயிகள் அரசு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளல்:

கால்நடை வளர்ப்பு,பால் பண்ணை, கோழிப் பண்ணை வளர்ச்சிகளில் தலைசிறந்த பணி புரிந்துள்ளவர்களை ஊராட்சி, வட்டார, மாவட்ட அளவில் உள்ள குழுக்களுடன் தொடர்பு உள்ளவர்களாக இருக்கும்படி செய்யவேண்டும் என்ற மைய அரசு, மற்றும் கால்நடை வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு ஒப்புக்கொள்கிறது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட கால்நடை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

VIII. உற்பத்திப் போட்டிகளில் தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை:

பால், முட்டை போன்றவற்றில் உற்பத்திப் பெருக்கத்தினைக் கணக்கிட்டு யார் அதிகம் உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்பதற்காக நடைபெறும் போட்டிகளில் கையாளப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றியும், போட்டிக்கு நுழைவுக் கட்டணம் ஏற்படுத்துவது பற்றியும் கால்நடை வளர்ச்சி இயக்குநர் சொல்லியுள்ள கருத்திற்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது. இதற்காக வேண்டிய மேல் நடவடிக்கையை,கால்நடை வளர்ச்சி இயக்குநர் எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

[24-9-69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண்: 2920.]

கல்ராயன் குன்றுகள் வட்டாரம்—சமுதாய வளர்ச்சித் திட்டத்திலிருந்து நீக்கப்படுகிறது.

[Community Development Programme—South Arcot District—Kallakurichi Taluk, Kalrayan Hills Block—Withdrawal of the Community Development Programme—Orders issued.]

[G.O. Ms. No : 1503, R.D.L.A., dt. 18-8-69.]

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்ராயன் குன்றுகள் வட்டாரத்தில் செயற்பட்டுவந்த சமுதாய வளர்ச்சித் திட்டம் உடனடியாகத் திரும்பப் பெறப்படுகிறது என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எந்தத் தேதியிலிருந்து இந்த வட்டாரத்தில் இத் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவது என்பது குறித்து அரசு பின்னால் முடிவெடுக்கும். 19-4-69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண் 773இன்படி இவ் வட்டாரத்தில் தொடர்ந்தியங்கிவர ஆணையிடப்பட்ட வட்டார அலுவலர் பதவிகள் இரத்து செய்யப்படுகின்றன.

கல்ராயன் குன்றுகள் வட்டாரத்தினுடைய மரச் சாமான்கள், ஆவணங்கள் அனைத்தையும் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் பழுதின்றி நல்ல முறையில் வைத்துவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

[18-8-69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண் 1503.]

அரை நாள் விருப்ப விடுப்பு - சிறு விடுப்பு அளிக்கலாம்

[Holidays—Optional Religious Holidays and Casual Leave Grant of—For half-a-day—Permission—Orders issued.]

[G.O. Ms. No : 1829, Public (Civil Defence) dt. 30-9-69.]

ஓர் ஆண்டில் மூன்று நாட்கள் சமய விருப்பு விடுப்பு அரசு ஊழியர்கள் எடுத்துக்கொள்ளலாம் என அரசு முன்பே உத்தரவிட்டுள்ளது.

அரை நாள் சமய விருப்பு விடுப்பு (optional religious holiday) எடுத்துக்கொள்ள அநுமதி வழங்கலாமா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இதுபற்றிப் பரிசீலனை செய்யும் பொழுது, அரை நாள் சிறு விடுப்பு (Casual leave) கொடுக்க அநுமதி உண்டா என்ற கேள்வியும் எழும்பியுள்ளது. தலைமைச் செயலகப் பதிமுறை நூலிலோ, அல்லது அடிப்படை விதிகளிலோ (Fundamental Rules) அரை நாள் சிறு விடுப்புக்கு அநுமதி வழங்க எந்தவித விதிமுறையும் இல்லை. இருந்தாலும், பழக்கத்தில் அரை நாள் சிறு விடுப்பு இப்பொழுது அநுமதிக்கப்பட்டு வருகிறது.

இந்த விஷயத்தை அரசு மிகவும் கவனத்துடன் பரிசீலனை செய்து, அரை நாள் விருப்ப சமய விடுப்பும், அரை நாள் சிறு விடுப்பும் வழங்கலாம் என முடிவு செய்துள்ளது. அதையொட்டி, கீழ்க்கண்ட உத்தரவுகளை அரசு பிறப்பிக்கிறது:

(i) அரசு ஊழியர்களுக்கு, அவர் கேட்டுக்கொண்டதின் பேரில், அரை நாள் சிறு விடுப்பு வழங்கலாம்.

(ii) அரசு ஊழியர்கள், முன் கூட்டியே எழுத்து மூலமாகக் கேட்டுக்கொண்டால், அரை நாள் சமய விருப்ப விடுப்பு வழங்கலாம்.

(iii) இந்த அரை நாள் என்பது காலை 10-30 மணியிலிருந்து பிற்பகல் 1-30 வரையிலும் அல்லது பிற்பகல் 2-00 மணியிலிருந்து மாலை 5-00 மணி வரையிலுமாக இருக்கும். ஆனால் காலை 10-30 மணியிலிருந்து 5-00மணி வரையில் இதற்கிடையில் ஏதாவது மூன்று மணி காலம் என்பதாக இருக்கக்கூடாது.

[30-9-69 தேதியிட்ட பொதுத் துறையின் அரசு ஆணை எண் 1839.]

திருச்சிராப்பள்ளி மாவட்டம் கொளக்குடி ஊராட்சி பேரூராட்சியாகத் திருத்தி அமைக்கப்பட்டது பட்டியலிலிருந்து நீக்கப்படுகிறது.

[Panchayat—Kolakudy Panchayat (Tiruchirappalli District)—Reclassification into Town Panchayats—Orders Modified—Deleted from the list.]

[Proceedings of the Director of Rural Development Rc. 85446/60 F. 2 dated 27-10-69.]

தமிழ் நாட்டில் 43 ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாகத் திருத்தியமைத்துக் கிராம வளர்ச்சி இயக்குநர் அண்மையில் ஆணை பிறப்பித்திருந்தார். (இப் பட்டியல் அக்டோபர் '69 'சிரணி' இதழில் 'ஊராட்சி அரசிதழ்' பகுதியில் வெளியிடப் பெற்றது.) அந்த 43 ஊராட்சிகளில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிரி கோட்டத்தைச் சேர்ந்த கொளக்குடி ஊராட்சியும் ஒன்றாகும். ஆனால், 7-10-69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண் 1910இல் கண்டுள்ள உத்தரவுப்படி, கொளக்குடி ஊராட்சியைப் பேரூராட்சியாகத் திருத்தியமைத்து முன்னர் பிறப்பித்திருந்த உத்தரவை, இரத்துசெய்து, கிராம வளர்ச்சி இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார்.

[27-10-69 தேதியிட்ட கிராம வளர்ச்சி இயக்குநரின் நடவடிக்கைக் குறிப்பு எண் R.C. 85446/69 F. 2.]

மைய, மாநில அரசுகளிடையே நிலவ வேண்டிய தொடர்புபற்றிய ஆய்வுக் குழு நியமனம்

[Constitution of Committee for enquiring into Centre-State relationship.]

[G.O. Ms. No. 1741, Public (Political) dated 22-9-69.]

19-8-69இல் தமிழக சட்ட மன்றத்தில், மைய மாநில அரசுகளிடையே நிலவவேண்டிய தொடர்பு பற்றி ஆய்வு செய்யப்படும் என்று முதலமைச்சர் அறிவித்திருந்தார். அதையொட்டி, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள விதி முறைகள் அடிப்படையில் ஒரு சமஷ்டி அரசியலில், மைய மாநில அரசுகளிடையே நிலவவேண்டிய தொடர்பு குறித்து, அது குறித்த எல்லா விஷயங்களையும்பற்றிப் பரிசீலனைசெய்து, மாநில அரசுக்கு எவ்வளவு அதிகமான அளவு சுய ஆட்சி வழங்கப்பட வேண்டுமோ அந்த அளவினை மாநில அரசுகள் பெறுவதற்காக வேண்டி, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தங்கள் என்னென்ன செய்யப்படவேண்டும் என்பதுபற்றி அரசுக்கு யோசனை கூறுவதற்காக வேண்டி, கீழ்க்கண்டவர்களைக் கொண்ட ஒரு குழுவினை அரசு நியமிக்கிறது.

குழுவின் தலைவர் :

1. டாக்டர் பி. வி. இராசமன்னார்.

குழுவின் உறுப்பினர்கள் :

1. டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார்.

2. டாக்டர் பி. சந்திரா ரெட்டி.

ஆய்வுக்குரிய விஷயங்கள் என்னென்ன இருக்கவேண்டும் என்பது பற்றிய ஆணைகள் பின்னால் பிறப்பிக்கப்படும்.

திருமிகு ஆசிரியர் அவர்கட்கு:

வணக்கம்; சீரிளமைத் திறங்கொண்டு 'சீரணி' சிறப்புமிகும் கருத்துக்களைத் தாங்கி வருதல்கண்டு பேருவகை எய்துகிறேன். சிற்றூர்களும், பேரூர்களும் சிறப்பதற்குரிய ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு, வற்றுத வளங் கொழிக்கும் நாடாகத் திகழச் செய்தற்கு ஊக்குவிக்கும் சீரணி, பேரணியின் பெற்றியைப் பெற்று வளரும் என்பதில் ஐயமில்லை.

கம்பம் இளங்கொற்றவன்
ஓடைப்பட்டி அஞ்சல்
தேனி (வழி),
மதுரை மாவட்டம்.

'சீரணி' இதழ், அரிய கருத்துக் குவியல்களைக்கொண்டு பீடு நடை போடுவலதைக் கண்டு பெருமையடைகிறேன். அதில் வரும் பல சிறப்பு அமிசங்கள் அனைவருக்கும் பயன் தரத் தக்கவை. இலக்கியப் பூக்காடாம் அதில் எண்ணிறந்த மலர்களின் மணத்தை நுகர்ந்த நான் அதைப் போற்றிக்கூறச் சொற்கள் தெரியாது நிற்கிறேன்.

கவிஞர் மு. முத்துக்கிருட்டிணன்
கொங்கணபுரம் அஞ்சல்
சங்ககிரி வட்டம்
சேலம் மாவட்டம்.

இறவாப் புகழ்பெற்ற அண்ணலின் அறநெறியை, அன்பு வழியை, ஆண்மைத் திறத்தை, அஞ்சாமை ஆற்றலை, அழகுற, தெளிவுற, பேரறிஞர் அண்ணா அவர்களின் வானொலி உரைமூலம் பயிலுகையில் எங்கோ உலகின் ஒரு மூலையில் இருந்துகொண்டு இன்னும் அவர் சொல்லிக்கொண்டிருப்பது போன்றதோர் உணர்வு ஏற்படுகிறது. இத்தகையதொரு சிறந்த உரையை ஏற்று, காந்தி நூற்றுண்டு விழா மலராக வெளிவந்த சீரணிக்கு நன்றி கூறி வாழ்த்துகிறேன்.

கரும்பைப்பற்றிக் கனிவாகக் கூறி, கனிவிலே பல கருத்தையும் தந்து, கருத்தாய் விளங்கும் பல மேற்கோள் காட்டி, மருந்துக்கு மருந்தாக, மகிழ்விற்கு மகிழ்வாக, இனிப்புக்கு இனிப்பாக இயம்பிட்ட சிறுவை நச்சினார்க்கினியருக்கு என் உளங் கனிந்த பாராட்டைச் 'சீரணி' மூலம் அளித்து மகிழ்கிறேன்.

திருஞான திருநாவுக்கரசு
கீழ்வேளூர், நாகை வட்டம்.

செப்டெம்பர் திங்கள் 'சீரணி' இதழில் 'முடியாத மொழிபெயர்ப்பு' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். பயனுள்ள கட்டுரை. ஒவ்வொரு மாதமும் 'சீரணி'யில் மொழிபெயர்ப்பு பற்றிய கட்டுரை ஒன்று அறிஞர்களால் படைக்கப்பட்டால் அது பயனுள்ள முயற்சியாக அமையும். தமிழ் ஆட்சி மொழி யுகத்தில் இம்மாதிரிக் கட்டுரைகள் பெரிதும் உதவியாக இருக்குமென நம்புகிறேன்.

க. சண்முகம், உதவியாளர்
உதவித் தொகைப் பிரிவு,
மாவட்ட ஆட்சித் தலைவர்
அலுவலகம், தருமபுரி.

'சீரணி' திங்கள் இதழைப் படித்தேன்; இலக்கிய நயத்துடன் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்றவாறு அமைந்திருக்கிறது. இளம் எழுத்தாளர்கள் தங்கள் திறமையைக் காட்டச் சந்தர்ப்பம் அளித்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

ஹெச். சையத் கௌஸ்
செஞ்சி.

'சீரணி' இதழ் படிப்பதற்கு மிக நன்றாக இருக்கிறது. 'சீரணி' எப்போது வரும் வரும் என்று எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

எம். சேக் அப்துல் காதர்
புதுமடம்
இராமநாதபுரம் மாவட்டம்.

எல்லோரும் திங்கள்தோறும் ஆவலோடு எதிர்நோக்கி, இதழ் பெற்று

ஒரே மூச்சில் படித்து நிறைந்த மனதோடு 'இதுவல்லவா சீரணி' என்று பலரும் பாராட்டுதலைக் கேட்கும்போது உள்ளம் பூரிக்கின்றது. 'சீரணி' சீரோடும் சிறப்போடும் வளர, வாழ வாழ்த்துகிறேன்.

புலவர் தே. ப. சின்னசாமி
முத்துகாபட்டி,
சேலம் மாவட்டம்.

சென்ற இதழில் திரு. முல்லை சக்தி அவர்கள் எழுதிய 'அண்ணாமலை அமுது' என்ற கட்டுரை படிக்கப் படிக்கத் தேனாய் இனித்தது. அமைச்சர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் அறிந்து கொள்ள ஏதுவாக இருந்தது. இச் செயலைச் செய்த 'சீரணிக்கு' என் வாழ்த்துக்கள்.

காசிதாசன், ஆசிரியர்
ஊராட்சி ஒன்றியப் பள்ளி,
வெளியம்பாக்கம்

பக்கத்திற்குப் பக்கம் கலைப் பொலிவு நிரம்பி வழிகிறது. கட்டுரைகளில் இலக்கிய மணமும் செய்திச் செறிவும் பயனும் நயனும் தரத்தக்க வண்ணம் பொதுளுகின்றன.

முகப்போவியங்கள் எழில் விருந்தாக உள்ளன.

கவிதைகள் அவ்வளவு தரமாக இல்லையோ என்று எண்ணுகிறேன். தாங்களே கவிதைத் தலைப்பொன்றை அறிவிப்புச் செய்து சிறந்த கவிதைகளை வரவேற்றுத் தேர்ந்தெடுத்து வெளியிடலாம்.

சுழற்கேடய ஊர்களைப் பற்றிய அறிமுகம் மற்ற ஊர்களுக்கு ஊக்கம் தரும்.

அறிவியல் கட்டுரைகள், உழவுக் குறிப்புக்கள் அனைத்தும் தரமாக உள்ளன.

இதழில் படிப்பதற்குப் பக்கந்தோறும் செய்தியிருக்கிறது. இதழின் வெற்றிக்கு இது போதாதா?

நயப்பாட்டு வேலைகள் மிக மிகச் சிறப்பாக அமைந்து இலக்கிய ஏடுகளை எடுத்து விழுங்கும் அளவுக்குக் கவர்கிறது 'சீரணி'.

கதைகள், கவிதைகள் இவ்விரண்டனையும்மட்டும் இன்னும் சற்றுக் கவனியுங்கள்.

புலவர் தமிழன்பன், ஈரோடு.

நேற்றைய தினம் நான் தற்செயலாகச் சென்னை-1 இல் அமைந்திருக்கும் குறளகத்தில் 'சீரணி' இதழைக் கண்ணுற்றேன். அதன் பொலிவு என்னைக் கவர்ந்த காரணத்தினால், விலை கொடுத்து இதழொன்றைப் பிரித்துப் பார்த்தபோது, வியப்பே என்னுள் ஆரவாரமிட்டது. முன்னாள் 'கிராம நலமே' இன்னாள் 'சீராணி' யாகப் பூத்திருப்பதை மிகுந்த ஆர்வத்தோடு வரவேற்கிறேன். விலை மிகமிகக் குறைவு; ஆனால் இதழின் மதிப்போ விலையிட்டு மதிப்பிட முடியாது என்பதே என்றன் உள்ளார்ந்த கருத்து என்பதை உவகையோடு தங்களுக்கு உணர்த்த விழைகிறேன்.

தெ. பொ. சீதாராமன்
'அமைதி இல்லம்'
28, தம்பு செட்டித் தெரு
சென்னை-1

அரசினர் வெளியீடு என்றாலே சிலருக்கு அலட்சியமாகத் தோன்றும்; என்ன இருக்கப் போகிறது என்று வெறுப்போடு கூறுவர். சீரணி இதழைக் கண்டால் அவர்கள் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்வார்கள். தரமான கதைகள் இருக்கின்றன; தமிழ் கொஞ்சும் கவிதைகள் இருக்கின்றன; இனிமையான இலக்கியக் கட்டுரைகளும் உள்ளன. இத்தனைக்கும் இடையே கரும்பு போல் இனிமையான முறையில் அரசினர் செய்திகள் - ஆக்கவேலைகள் - அரும்பணிகள் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒளிவீசும் முத்துக்கள் படித்துப் பயன் பெறவேண்டிய - பாதுகாக்கப்படவேண்டிய சொத்துக்கள். தமிழர்களின் இல்லந்தோறும் இடம் பெற வேண்டிய 'சீரணி' இதழை - அதன் பயனறிந்து பண்புடன் காத்து வளர்க்க வேண்டியது எழுத்தாளர்களின் கடமையும், படிப்போரின் பொறுப்புமாகும். எனவே, சீரணி இதழை நூலகங்களோடு நிறுத்தாமல், இல்லங்கள் தோறும் இருக்கும் வகையில் பரப்ப வேண்டுகிறேன்.

நா. புகழேந்தி, செயலாளர்
தூத்துக்குடி
தமிழ் எழுத்தாளர் மன்றம்.